# உங்கள் வேதாகமத்தைத் தெரிந்துக்கொள்ளுங்கள்
### 22 பாடங்களைக்கொண்ட வேதாகமப் பாடமுறை

## *நாம் ஆரம்பிக்கு முன்னர்*

வேதாகமத்தை ஆராய்ச்சி செய்வது ஆனந்தம் நிறைந்த ஓர் அனுபவமாகும். இந்த வேதப்பாடங்கள் வேத ஆராய்ச்சிக்கு வழியைச் சுட்டிக்காண்பிக்கும் வழிக்காட்டியாக செயல்பட உத்தேசிக்கப்பட்டுள்ளன. இவைகளில் மொத்தம் **22** பாடங்கள் உள்ளடக்கியுள்ளன. அவை ஒவ்வொன்றும் முக்கியமான வேதா கம போதனைகளோடு சம்மந்தப்பட்டுள்ளன. இநத வேதபாடமுறை உங்க ளுக்குப் பயனளிக்க வேண்டும். என்று நீங்கள் விரும்பினால், உங்களுக் கென்று **சொந்த வேதாகமம்** ஒன்று இருக்கவேண்டியது மிக அவசியமானது.

நங்களும் உங்கள் வேதாகமத்தை வாசியாமல், இந்த வேதபாட முறையை மாத்திரம் படித்தால், அதினால் உங்களுக்கு அவ்வளவு பிரயோஜனம் இராது. ஒருவேளை ஒரு வேதாகமம் இருந்தால் மிகவும் நல்லது. ஆனால் அப்படி இல்லையென்றால் உங்கள் தனி உபயோகத்திற்கென்று ஒரு வேதாகமத்தை வாங்கிக்கொள்வது மிகவும் நன்றாக இருக்கும்.

ஒவ்வொரு மாகாணத்திலும் உள்ள பெரு நகரங்களில் நிச்சயம் ஒரு வேதாகம நூல்நிலையம் இருக்கத்தான் செய்கிறது. எனவே உங்களுக்கென்று ஒரு வேதாகமத்தை நீங்கள் வாங்கிக்கொள்ள முடியும். நங்கள் வாங்கும் வேதாக மம் முழுமையான ஒன்றாக இருக்கிறதா என்று உறுதிப்படுத்துங்கள். ஒரு புதியஏற்பாடு மாத்திரம் இருக்கும் என்றால், அது பரிசுத்த வேதாகமத்தின் பின்பகுதியாக மாத்திரம் இருப்பதால், உங்களுக்குத் தேவையானது **முழு வேதாகமம்** ஆகும்.

நங்களும் உங்கள் வேதாகமத்தை வாசியாமல், இந்த வேதபாட முறையை இந்தப் பாடமுறையின் ஒவ்வொரு பாடத்திலும், இரண்டு விதமான வேத வாசிப்புகள் அடங்கியுள்ளன. முதலில் காணப்படுவது, சுமார் 6 அல்லது 7 அதி காரங்கள் வாரமுழுவதும் வாசிக்குமளவில் **வார வாசிப்புகள்** என்ற தலைப்பின் கீழ் உள்ளது. இரண்டாவது,

அந்தந்தப் பாடத்தை நீங்கள் படிக்குமுன் உங்க ளுக்கு உதவியாக அதற்கு ஆதாரமான இரண்டொரு வேதவாசிப்புகளுக்கென் கொடுக்கப்பட்ட அதிகாரங்கள், ஆராய்ச்சிக்கென்று **பாட வாசிப்பு / வாசிப்பு கள்** என்ற தலைப்பின்கீழ் காணப்படும்.

ஒவ்வொரு பாடத்தையும் படிக்குமுன்னர் அதற்கென்று குறிக்கப்பட்ட வேத வசனங்களைக் குறைந்தது மூன்றுமுறை வாசித்து அறிவது ஒரு நல்ல திட்டமாக இருக்கக்கூடும். முதல்முறை அதிலுள்ள பொருளைக்குறித்து என்ன எழுதியுள்ளது என்று ஒரு ஐடியா பெறுவதற்கு உதவியாக சற்று வேகமாக அதை வாசியுங்கள். இரண்டாவது ஆரம்பமுதல் ஒவ்வொரு வேத பகுதியையும் தொகுதிதொகுதியாக சிரத்தையுடன் வாசிக்கவும். இந்தமுறை, குறிக்கப்பட்ட வேதபகுதிகளை உங்கள் சொந்த வேதாகமத்திலிருந்து எடுத்து வாசியுங்கள்.

அப்படி வாசிக்கையில் உங்களுக்கு விளங்கிக்கொள்ள கஷ்டமான ஏதாவது ஒன்றை, அல்லது, நீங்கள் ஒத்துக்கொள்ளாத ஏதாவது ஒன்றை (அநேக கஷ்டங்கள் பிரச்சனைகள் வாசிக்கும்போதே தானாகவே மறைந்துபோகும் வாய்ப்பு உண்டு.) குறித்து வைத்துக்கொள்ளுங்கள். பின்பு, அனைத்து வேதபகுதிகளையும் ஒரே சீராக நிறுத்தாமல் படித்து முடியுங்கள்.

**நீங்கள் பதிலளிக்க வேண்டிய சில கேள்விகள்**

ஒவ்வொரு இரண்டு பாடங்களையும் தொடர்ந்து ஒரு கேள்வித்தாள் உங்க ளுக்கு அனுப்பப்படும். அந்தக் கேள்விகளின் விடைகளை ஒவ்வொரு இரண் டாம் வாரம் முடிவிற்குள் அனுப்பி வைத்தால் உதவியாக இருக்கும். நீங்கள் கேள்விகளுக்குப் பதில் எழுதும்போது சத்தியம் என்ன என்று நீங்கள் விசுவா சிக்கிறதை எழுதி அனுப்புங்கள். பாடங்களில் காணப்படக்கூடிய ஏதாவது காரியத்தை உங்கள் மனது ஒத்துக்கொள்ளவில்லை என்றால் அதை வேத வாக்கிய ஆதாரத்துடன் எங்களுக்கு எழுதலாம். எந்தக் காரணத்திற்காவது உங்களால் விடைகளை அனுப்ப முடியாதபட்சத்தில் எங்களுக்கு குறிப்பிட்டு எழுதுங்கள். உங்களுக்கு இன்னும் பாடம் தேவைப்பட்டாலும் அதைக் குறிப் பிட்டு விளக்கமாக எழுதுங்கள்.

**வேண்டிய அளவு நேரம் செலவழித்தல்**

நிச்சயமாக, இந்தப் பாடமுறையைப் படிக்க உங்கள் நேரத்தில் கொஞ்சம் எடுக்க வேண்டியிருக்கும்.. வேதவாசிப்புக்கென்று ஒரு நாளுக்கு **15** நிமிஷங்க ளும், பாடத்தைப் படிக்க வாரம் ஒரு மணி நேரமும் தேவைப்படும். இரண் டாம் பாடம் வாசித்து முடிகிற வேளையில் கேள்விகளுக்குப் பதில் எழுதும் படி சுமார் **30** நிமிஷங்கள் தேவைப்படும். ஆனால் வெகு சீக்கிரத்தில், பரிசுத்த வேதாகமம் ஒரு சுவாரஸ்யமான புத்தாகம் என்பதைக் கண்டுப்பிடித்து அதை வாசிக்க அதிக நேரம் எடுக்கும்படி நீங்கள் முயற்சி செய்வீர்கள்.

**வதாகமத்தை வாசிப்பது**

பரிசுத்த வேதாகமம் சுவாரஸ்யம் நிறைந்த ஒரு புத்தகம். அது மாத்திரமல்ல, அது தேவனுடைய வார்த்தை. எனவே, வாசிக்கும்படி விரும்பும்போதெல்லாம் ஜெபத்தோடு, அதன் போதனைகளை வாசிக்கும்போது புரிந்துகொள்ள நமக் குத் தேவன் உதவிசெய்யும்படி கேட்கவேண்டும்.

வேதத்தில் காணப்படும் ஒரு வசனம் வேதத்தை வாசிக்குமுன்பு ஜெபம் செய்ய ஏற்றதாயிருப்பதால் அதை மனப்பாடம் செய்வது பயனுள்ளதாயிருக்கும். ***"உமது வேதத்திலுள்ள அதிசயங்களை நான் பார்க்கும்படிக்கு என் கண் களைத் திறந்தருளும்" (சங்கீதம் 119:18).***

இப்படியாக பரிச்சுத்த வேதாகமத்தை தினந்தோறும் வாசிப்பதாலும் அதைப் புரிந்துக்கொள்ள முயற்சிப்பதாலும், அது தேவனுடைய வார்த்தை என்பது திட்டவட்டமாகத் தெரிந்துக்கொள்ள அதிகமதிகமாய் நமக்கு உதவிசெய்வது மாத்திரமல்லாமல் நமது வாழ்க்கை முறையும், சிந்தனையும் மாறுவதால் அதின் சாரத்தை நாம் உண்ணவும் செய்வோம். இவ்வாறு அவை நல்ல ஆண்களும் பெண்களுமாக நம்மை மாற்றும்.

இது கிறிஸ்டடெல்ஃபியன் வேதாகம சங்கத்தாரால் இலவசமாக வெளியிடப்பட்டது

**பாடம் எண்.1**

# *வேதாகமம் நமது வழிகாட்டி*

***வார வாசிப்புகள்::*** **ஆதியாகமம், அதிகாரங்கள் 1-3,**
**லூக்கா, அதிகாரங்கள் 1-3**

***பாட வாசிப்புகள்::*** **சங்கீதம் 1, 19,**
**சங்கீதம் 119:81-112.**

**ஒரு வழிக்காட்டியின் தேவை**

முன்னா,, இதுவரை நாம் போகாத ஒரு இடத்தை விஜயம் செய்யும்போது ஏதாவது ஒருவகையில் ஒரு வழிக்காட்டி நமக்குத் தேவைப்படுகிறது. ஒருவே ளை நாம் ஒரு ரஸ்தா வழிக்காட்டி அல்லது ஒரு வழிக்காட்டி நூலையாவது, அல்லது இதற்குமுன் அங்கு சென்ற ஒரு நண்பனின் அறிவைக் கேட்டறிய விரும்புகிறோம். மொத்தத்தில் நமக்கு ஒரு வழிக்காட்டி தேவை.

எனவே வாழ்க்கையினூடேபயணஞ்செய்யும்போது ஒரு வழிக்காட்டி தேவைப் படுகிறது. நமது வாழ்க்கையின் நோக்கம் என்ன என்பதையும், அனுதினமும் நாம் கொண்டிருக்கவேண்டிய நம்பிக்கையையும் அறிந்திருப்பது அவசியமா கும்/ பரிசுத்தவேதாகமம் இவைகளுக்கு விடையளிப்பதாக உள்ளது.

நம்மைச் சுற்றியுள்ள அதிசயங்களை நாம் குறிப்பிட்டு நோக்கும்போதும், நமது சரீரம் ஆச்சரியமான வழியில் உண்டாக்கப்பட்டதைக் கவனிக்கும் போ தும், நிச்சயமாக ஒரு பெரிய சிருஷ்டிகர் அவற்றின் பின்னால் கிரியை செய்தி ருக்கவேண்டும் என்று நம்புகிறோம். ஆனால் அவரைப்பற்றிக் கூடுதலாக அவர் யார் என்பதையும், நாம் செய்யவேண்டியது இன்னதென்று அவர் விரும்புகிறார் என்பதையும் நாம் எவ்வாறு அறியமுடியும்?
இதன் விடையானது பரிசுத்த வேதாகமத்தில் தெளிவாக உள்ளது. அந்தபெ ரிய சிருஷ்டிகராகிய தேவன் நமது தேவைக்கென்று ஓர் வழிக்காட்டி நூலைக் கொடுத்திருக்கிறார்.. நாம் அவரைப் பிரியப்படுத்த

விரும்பினால் அவர் கொடுத்த அந்த வழிக்காட்டிநூலை அனுதினம் எடுத்து, வாசித்து அதை ஆராய்ச் சிபண்ணி, தியானிக்கவேண்டும்.

**பரிசுத்த வேதாகமம் ஏற்றுக்கொள்ளும் காரியங்கள்**

பரிசுத்த வேதாகமம் பெரிய காரியங்களைத் தனக்கென்று ஏற்றுக்கொண்டுள் ளது. அது அதிகாரத்துடன் பேசி, தான் தேவனுடைய வார்த்தை என்பதை அழுத்தந்திருத்தமாகக் கூறுகிறது. அடிக்கடி பழையஏற்பாட்டிலுள்ள தீர்க்கத ரிசிகள் தங்களுடைய செய்தியைக் கூறும்போது, இந்த வார்த்தைகளோடு ஆரம்பித்துள்ளன, ***"கர்த்தர் சொல்லுகிறது என்னவென்றால்".*** பவுல் நமக்கு எழுதுகிற செய்தியில் இவ்வாறு எழுதியுள்ளார், ***"எல்லா வேதவாக்கியங்களும் தேவனால் ஏவப்பட்டு...அருளப்பட்டுள்ளன. (2.தீமோத்தேயு 3:16).***

பரிசுத்த வேதாகமம் உண்மையைக் கூறவில்லை என்றால், மேலும் பரிசுத்த வேதாகமம் தேவனுடைய வார்த்தை இல்லையென்றால் அதை புத்தகமேடை யில் எடுத்து வைத்து அதை மறந்துவிடலாம். அதன் போதனைகள் எவ்வளவு அழகாக இருந்தாலும் அது ஒருபோதும் அணுகமுடியாது.

**பரிசுத்த வேதாகமம் உண்மை**யானதாக இருக்கிறபடியினால், அதை நாம் ஒதுக்கிவைக்க துணியமுடியாது. அப்படி செய்தோமென்றால் அது, நாம் தேவ னைத் துணிந்து ஒதுக்கி வைப்பதற்குச் சமமாகும். அதினால் அவர் வாக்கரு ளின எல்லாவற்றையும் பெறமுடியாமல் நமது ஜீவியத்திற்கடுத்தவைகளை ஒதுக்கி வைத்துவிடுவோம்.

**பரிசுத்த வேதாகமம் உண்மை என்று நாம் எவ்வாறு அறியமுடியும்?**

வேதாகமம் உண்மையுள்ளதென்று நாம் நம்பத்தக்கதான காரணங்கள் எவை இருக்கின்றன? ஏராளமான காரணங்களை நாம் காட்ட முடிந்தாலும் அவை யெல்லாவற்றையும் இந்தப்பாடத்தில் குறிப்பிடமுடியாததாகையால், சிலவற்றை மாத்திரம் இங்கு குறிப்பிடுகிறோம்.

முதலாவதாக, கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் வார்த்தை நமக்குக் கொடுக் கப்பட்டுள்ளது. அவருடைய நாட்களில் பழையஏற்பாடு எழுதப்பட்டிருந்தது. ஏனெனில் இயேசுவானவர் எல்லா

வேதவாக்கியங்களையும் நன்கு கற்றறிந் திருந்தார். அவர் ஒவ்வொரு வார்த்தையையும் நம்பி விசுவாசித்தார். அவருக்கு வந்த எந்தவித சவால்களையும் அந்த வேதவாக்கியங்களை வைத்து மேற் கொண்டு பேசினார். அல்லது நிறைவேற்றினார். இவ்வாறு அவர் வேதவாக்கி யங்களை ஆதரித்துப் பேசினார். அவர் யாரிடம் எதைப் பேசினாலும் செய்தா லும் அதற்குக் காரணம் அவர் நிறைவேற்றவேற்றவெண்டிய வேதவாக்கியம் ஒன்று அதற்குப் பின்னால் இருந்திருக்கும்.

வேதவாக்கியங்கள் அவரிடம் கேள்வியாக வந்தபோது, அப்படிப்பட்ட விஷயம் வேதவாக்கியங்களில் இல்லையென்று பரிசேயரில் ஒருசாராராகிய சதுசேயர் அவரை நெருக்கிக் கேட்கும்போது, அவர் மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுதல் பற்றி பதிலளித்து கூறினது என்னவெனில்,***"நீங்கள் வேதவாக்கியங்களையும், தேவனுடைய வல்ல மையையும் அறியாமல் தப்பான எண்ணம் கொள்ளு கிறீர்கள்" (மத்தேயு 22:29).*** அதைத் தொடர்ந்து அவர் வேதவாக்கியங்களைக் கொண்டு மரித்தோர் உயிர்த்தெழுதலின் நம்பிக்கையைக் குறித்து உறுதி செய்ததுடன் மரித்தோர் யாவரும் தேவனுடைய உயிர்த்தெழுதலில் தப்பாமல் +எழுந்திருக்க வேண்டும் என்பதையும் அழுத்தந்திருத்தமாக கூறினார்.

வேதாகமம் உண்மையுள்ளதென்று நாம் நம்பத்தக்கதான காரணங்கள் எவை இருக்கின்றன? ஏராளமான காரணங்களை நாம் காட்ட முடிந்தாலும் அவை யெல்லாவற்றையும் இந்தப்பாடத்தில் குறிப்பிடமுடியாததாகையால், சிலவற்றை மாத்திரம் இங்கு குறிப்பிடுகிறோம்.

முதலாவதாக, கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் வார்த்தை நமக்குக் கொடுக் கப்பட்டுள்ளது. அவருடைய நாட்களில் பழையஏற்பாடு எழுதப்பட்டிருந்தது. ஏனெனில் இயேசுவானவர் எல்லா வேதவாக்கியங்களையும் நன்கு கற்றறிந் திருந்தார். அவர் ஒவ்வொரு வார்த்தையையும் நம்பி விசுவாசித்தார். அவருக்கு வந்த எந்தவித சவால்களையும் அந்த வேதவாக்கியங்களை வைத்து மேற் கொண்டு பேசினார். அல்லது நிறைவேற்றினார். இவ்வாறு அவர் வேதவாக்கி யங்களை ஆதரித்துப் பேசினார். அவர் யாரிடம் எதைப் பேசினாலும்

செய்தா லும் அதற்குக் காரணம் அவர் நிறைவேற்றவேற்றவெண்டிய வேதவாக்கியம் ஒன்று அதற்குப் பின்னால் இருந்திருக்கும்.

வேதவாக்கியங்கள் அவரிடம் கேள்வியாக வந்தபோது, அப்படிப்பட்ட விஷயம் வேதவாக்கியங்களில் இல்லையென்று பரிசேயரில் ஒருசாராராகிய சதுசேயர் அவரை நெருக்கிக் கேட்கும்போது, அவர் மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுதல் பற்றி பதிலளித்து கூறினது என்னவெனில்,***"நீங்கள் வேதவாக்கியங்களையும், தேவனுடைய வல்லமையையும் அறியாமல் தப்பான எண்ணம் கொள்ளு கிறீர்கள்" (மத்தேயு 22:29).*** அதைத் தொடர்ந்து அவர் வேதவாக்கியங்களைக் கொண்டு மரித்தோர் உயிர்த்தெழுதலின் நம்பிக்கையைக் குறித்து உறுதி செய்ததுடன் மரித்தோர் யாவரும் தேவனுடைய உயிர்த்தெழுதலில் தப்பாமல் +எழுந்திருக்க வேண்டும் என்பதையும் அழுத்தந்திருத்தமாக கூறினார்.

வேதாகமம் உண்மையுள்ளதென்று நாம் நம்பத்தக்கதான காரணங்கள் எவை இருக்கின்றன? ஏராளமான காரணங்களை நாம் காட்ட முடிந்தாலும் அவை யெல்லாவற்றையும் இந்தப்பாடத்தில் குறிப்பிடமுடியாததாகையால், சிலவற்றை மாத்திரம் இங்கு குறிப்பிடுகிறோம்.

முதலாவதாக, கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் வார்த்தை நமக்குக் கொடுக் கப்பட்டுள்ளது. அவருடைய நாட்களில் பழையஏற்பாடு எழுதப்பட்டிருந்தது. ஏனெனில் இயேசுவானவர் எல்லா வேதவாக்கியங்களையும் நன்கு கற்றறிந்திருந்தார். அவர் ஒவ்வொரு வார்த்தையையும் நம்பி விசுவாசித்தார். அவருக்கு வந்த எந்தவித சவால்களையும் அந்த வேதவாக்கியங்களை வைத்து மேற்கொண்டு பேசினார். அல்லது நிறைவேற்றினார். இவ்வாறு அவர் வேதவாக்கியங்களை ஆதரித்துப் பேசினார். அவர் யாரிடம் எதைப் பேசினாலும் செய்தா லும் அதற்குக் காரணம் அவர் நிறைவேற்றவேற்றவெண்டிய வேதவாக்கியம் ஒன்று அதற்குப் பின்னால் இருந்திருக்கும்.

வேதவாக்கியங்கள் அவரிடம் கேள்வியாக வந்தபோது, அப்படிப்பட்ட விஷயம் வேதவாக்கியங்களில் இல்லையென்று பரிசேயரில்

ஒருசாராராகிய சதுசேயர் அவரை நெருக்கிக் கேட்கும்போது, அவர் மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுதல் பற்றி பதிலளித்து கூறினது என்னவெனில்,***"நீங்கள் வேதவாக்கியங்களையும், தேவனுடைய வல்ல மையையும் அறியாமல் தப்பான எண்ணம் கொள்ளு கிறீர்கள்" (மத்தேயு 22:29).*** அதைத் தொடர்ந்து அவர் வேதவாக்கியங்களைக் கொண்டு மரித்தோர் உயிர்த்தெழுதலின் நம்பிக்கையைக் குறித்து உறுதி செய்ததுடன் மரித்தோர் யாவரும் தேவனுடைய உயிர்த்தெழுதலில் தப்பாமல் +எழுந்திருக்க வேண்டும் என்பதையும் அழுத்தந்திருத்தமாக கூறினார்.

வேதாகமம் உண்மையுள்ளதென்று நாம் நம்பத்தக்கதான காரணங்கள் எவை இருக்கின்றன? ஏராளமான காரணங்களை நாம் காட்ட முடிந்தாலும் அவை யெல்லாவற்றையும் இந்தப்பாடத்தில் குறிப்பிடமுடியாததாகையால், சிலவற்றை மாத்திரம் இங்கு குறிப்பிடுகிறோம்.

முதலாவதாக, கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் வார்த்தை நமக்குக் கொடுக் கப்பட்டுள்ளது. அவருடைய நாட்களில் பழையஏற்பாடு எழுதப்பட்டிருந்தது. ஏனெனில் இயேசுவானவர் எல்லா வேதவாக்கியங்களையும் நன்கு கற்றறிந் திருந்தார். அவர் ஒவ்வொரு வார்த்தையையும் நம்பி விசுவாசித்தார். அவருக்கு வந்த எந்தவித சவால்களையும் அந்த வேதவாக்கியங்களை வைத்து மேற் கொண்டு பேசினார். அல்லது நிறைவேற்றினார். இவ்வாறு அவர் வேதவாக்கி யங்களை ஆதரித்துப் பேசினார். அவர் யாரிடம் எதைப் பேசினாலும் செய்தா லும் அதற்குக் காரணம் அவர் நிறைவேற்றவேற்றவெண்டிய வேதவாக்கியம் ஒன்று அதற்குப் பின்னால் இருந்திருக்கும்.

வேதவாக்கியங்கள் அவரிடம் கேள்வியாக வந்தபோது, அப்படிப்பட்ட விஷயம் வேதவாக்கியங்களில் இல்லையென்று பரிசேயரில் ஒருசாராராகிய சதுசேயர் அவரை நெருக்கிக் கேட்கும்போது, அவர் மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுதல் பற்றி பதிலளித்து கூறினது என்னவெனில்,***"நீங்கள் வேதவாக்கியங்களையும், தேவனுடைய வல்ல மையையும் அறியாமல் தப்பான எண்ணம் கொள்ளு கிறீர்கள்" (மத்தேயு 22:29).*** அதைத் தொடர்ந்து அவர் வேதவாக்கியங்களைக் கொண்டு மரித்தோர் உயிர்த்தெழுதலின் நம்பிக்கையைக் குறித்து

உறுதி செய்ததுடன் மரித்தோர் யாவரும் தேவனுடைய உயிர்த்தெழுதலில் தப்பாமல் +எழுந்திருக்க வேண்டும் என்பதையும் அழுத்தந்திருத்தமாக கூறினார்.

வேதாகமம் உண்மையுள்ளதென்று நாம் நம்பத்தக்கதான காரணங்கள் எவை இருக்கின்றன? ஏராளமான காரணங்களை நாம் காட்ட முடிந்தாலும் அவை யெல்லாவற்றையும் இந்தப்பாடத்தில் குறிப்பிடமுடியாததாகையால், சிலவற்றை மாத்திரம் இங்கு குறிப்பிடுகிறோம்.

முதலாவதாக, கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் வார்த்தை நமக்குக் கொடுக் கப்பட்டுள்ளது. அவருடைய நாட்களில் பழையஏற்பாடு எழுதப்பட்டிருந்தது. ஏனெனில் இயேசுவானவர் எல்லா வேதவாக்கியங்களையும் நன்கு கற்றறிந் திருந்தார். அவர் ஒவ்வொரு வார்த்தையையும் நம்பி விசுவாசித்தார். அவருக்கு வந்த எந்தவித சவால்களையும் அந்த வேதவாக்கியங்களை வைத்து மேற் கொண்டு பேசினார். அல்லது நிறைவேற்றினார். இவ்வாறு அவர் வேதவாக்கி யங்களை ஆதரித்துப் பேசினார். அவர் யாரிடம் எதைப் பேசினாலும் செய்தா லும் அதற்குக் காரணம் அவர் நிறைவேற்றவேற்றவெண்டிய வேதவாக்கியம் ஒன்று அதற்குப் பின்னால் இருந்திருக்கும்.

வேதவாக்கியங்கள் அவரிடம் கேள்வியாக வந்தபோது, அப்படிப்பட்ட விஷயம் வேதவாக்கியங்களில் இல்லையென்று பரிசேயரில் ஒருசாராராகிய சதுசேயர் அவரை நெருக்கிக் கேட்கும்போது, அவர் மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுதல் பற்றி பதிலளித்து கூறினது என்னவெனில்,***"நீங்கள் வேதவாக்கியங்களையும், தேவனுடைய வல்ல மையையும் அறியாமல் தப்பான எண்ணம் கொள்ளு கிறீர்கள்" (மத்தேயு 22:29).*** அதைத் தொடர்ந்து அவர் வேதவாக்கியங்களைக் கொண்டு மரித்தோர் உயிர்த்தெழுதலின் நம்பிக்கையைக் குறித்து உறுதி செய்ததுடன் மரித்தோர் யாவரும் தேவனுடைய உயிர்த்தெழுதலில் தப்பாமல் +எழுந்திருக்க வேண்டும் என்பதையும் அழுத்தந்திருத்தமாக கூறினார்.

ஆபிரகாம் ஈசாக்கு யாக்கோபு குறித்து இயேசு பேசினார். மேலும், தாவீது மற் றும் சாலொமோனைக்குறித்தும், இன்னும் பழையஏற்பாட்டிலுள்ள அநேகரை பற்றியும் பேசினார்.

மேலும் ஒருவராலும் வேதாகமம் பொய்யானது என்று இதுவரை நிரூபிக்க வில்லை என்ற உண்மை உள்ளது. பரிசுத்த வேதாகமத்தின் சத்துருக்கள் பலர், அதிகம் படித்த மாமேதைகள் உட்பட, அனேகர் அவ்வாறே செய்ய முயன்றனர். ஆனால் அனைவரும் தோல்வி அடைந்தனர். நாம் இதை சிந்திக் கும்படி நின்று கேட்டால், உண்மையில் இது ஒரு ஆச்சரியமான காரியம் என்று ஒப்புக்கொள்வோம்.

மேலும், தீர்க்கதரிசனங்களின் அதிசயமான நிறைவேறுதலும், நேரத்துக்கு நேரம் சம்பவிக்கும் நிகழ்வுகள் அனைத்தும் பல நூற்றாண்டுகள் சென்று இன்
னும் நடந்தேறிக்கொண்டே இருக்கின்றன. அவையனைத்தும் நமது விசுவா சத்தைத் தூண்டுகிறதாக உள்ளன. மத்தேயு சுவிசேஷம் இரண்டாம் அதிகா ரத்தில், எடுத்துக்காட்டாக ஏரோதினிடம் வந்த வானசாஸ்திரிகள்,**"யூதருக்கு ராஜாவாகப் பிறந்திருக்கிறவர் எங்கே?"** இப்போது ஏரோது பிரதான ஆசாரி யர்களை அழைத்து அவர்களிடம் விசாரித்ததின் விளைவாக அவர்கள் பதில் அளித்தது என்னவெனில்,***"யூதேயாவிலுள்ள பெத்லெகேமில் பிறப்பார்".*** இதை அவர்கள் எவ்வாறு அறிவார்கள்? ஏனெனில் பல நூற்றாண்டுகளுக்குமுன்பு அவரைக்குறித்து கூறப்பட்டதீர்க்கதரிசனம் மீகா என்ற தீர்க்கதரிசிமூலமாய் பழைய ஏற்பாட்டு காலத்தில் ***(மீகா 5:2)*** உரைக்கப்படிருந்தது.

புராதனகாலத்தில் எழுதப்பட்ட வேதாகம சரித்திரமானது திரும்பத் திரும்ப நவீன கண்டுப்பிடிப்புகளால் முற்றிலும் உண்மை என்று உறுதிசெய்யப்பட்டுள் ளது
இவ்வாறு நாம் பல உண்மைகளைக் கண்டுப்பிடித்து உறுதி செய்யமுடியும். ஆனால் இதன் சிறந்த வழி என்னவென்றால், நாமாகவே வேதத்தை வாசிப்ப தாகும். அப்போது மெதுவாக வேதத்தின் ஒருபகுதி மற்றப்பகுதியோடு ஒட்டிச் சேருவதை நாமாகவே காணக்கூடும். அப்படி படித்து முடிந்தவுடன் நமக் கென்று தேவனுடைய முழுதிட்டம் என்னவென்று நாம் புரிந்துக்கொள்வதின் மூலமாக ஒரு பரிபூரண சித்திரத்தை நாம் பார்க்கமுடியும்.

**வேதாகமத்தின் பொருளடக்கம்**

வேதாகமம் உண்மையில் ஒரு புத்தகமல்ல. ஆனால் பல புத்தகங்களின் தொகுப்பு ஆகும். பழையஏற்பாட்டில் **39**.ம்

புதியஏற்பாட்டில் **27**.மாக சேர்ந்து, மொத்தத்தில் **66** புத்தகங்கள் அடங்கியதாகும். அவையனைத்தும் சுமார் **40** ஆசிரியர்களைக்காண்டு அனேக ஆயிரம் வருஷங்களாக எழுதப்பட்டது. ஆனால் அவையனைத்தும் ஒன்றாக சேர்ந்து ஒரே முழு கதையை நமக்கு அளிக்கிறது. அந்தக் கதையானது உலகத்தில் ஆதிமுதற்கொண்டு ***"உலகத் தின் ராஜ்யங்கள் நம்முடைய கர்த்தரும் அவருடைய கிறிஸ்துவின் ராஜ்யங் களாகி அவர் என்றென்றும் அரசாளும்" (வெளிப்படுத்தல் 11:15)*** சமயம்வரை, தேவனுடைய நோக்கம் மனிதனோடு செயல்பட்ட கதையைக்குறித்து எழுதி யுள்ளது.

**பழையஏற்பாடு**

முதல் 5 புத்தகங்களும் பழையஏற்பாட்டின் மோசேயினால் எழுதப்பட்டதா கும். அவன் வேதாகமத்தில் ***"தேவனுடைய தாசன்"*** என்று அழைக்கப்படுகி றான். முதல் புத்தகம் ஆதியாகமம் என்று அழைக்கப்படுகிறது. அதன் அர்த் தம் "ஆரம்பங்கள்". இந்த உலகத்தில் முதல் மனிதரோடு தேவன் இடைப்பட் டதை அது கூறுகிறது.

அதைத் தொடர்ந்து யாத்திராகமம், லேவியராகமம், எண்ணாகமம், மற்றும் உபாகமம் எழுதப்பட்டன.

இந்த ச புத்தகங்களும் தேவன் தம்முடைய ஜனங்களாக இருக்கும்படி தெரிந் துகொண்ட யூதரை எகிப்திலிருந்து அழைத்து, கானான்தேசத்தை (இஸ்ர வேல்) அவர்களுக்கு எவ்வாறு அளித்தார் என்று கூறுகிறது.இதைத் தொடர்ந்து பல புத்தகங்கள் இந்த ஜனத்தின் சரித்திரத்தையும், தேவன் அவர்களோடு இடைப்பட்டதையும் கூறுகின்றன. நாம் சங்கீதங்களின் புத்தகத்திற்கு வரும் போது மிகவும் நளினமான சில கவிதைகளைக் காணமுடிகிறது. கவிதைகள் என்றால் பிடிக்காதல்லவா? ஆனால் வேதாகமத்திலுள்ள கவிதை வித்தியாச மானது. நாம் சிலவேளைகளில் படும் உணர்வுகளைக்குறித்து அது பேசுகிறது .அவற்றில் சில நாம் வார்த்தைகளில் கூறமுடியாதவை ஆகும். உதாரணத் திற்கு, ***சங்கீதம் 8:3-4***-யை எடுத்துப் பாருங்கள்.***"உமது விரல்களின் கிரியையா கிய உம்முடைய வானங்களையும், நீர் ஸ்தாபித்த சந்திரனையும், நட்சத்திரங் களையும் நான் பார்க்கும்போது, மனுஷனை நீ நினைக்கிறதற்கும், மனுஷ குமாரனை நீர் விசாரிக்கிறதற்கும் அவன் எம்மாத்திரம் என்கிறேன்."***

இரவில் நட்சத்திரங்களைப் பார்க்கும்போது நீங்கள் எப்போதாவது இவ்வாறு நினைத்ததுண்டா?
பின்பு தீர்க்கதரிசிகளின் புத்தகங்கள் உள்ளன. தீர்க்கதரிசிகளின் நீண்டகால அனுபவங்களான ஏசாயா, எரேமியா, எசேக்கியேல் போன்றவர்களைத் தொடர்ந்து அனேக சிறிய தீர்க்கதரிசனங்கள் வந்துள்ளன.
உங்களுடைய வேதாகமத்தின் ஆரம்பத்தில் புத்தகங்களின் பட்டியல் அவைக ளின் கிரம வரிசையில் பொருளடக்கத்தில் உங்களுக்கென்று கொடுக்கப் பட்டுள்ளது.

**புதிய ஏற்பாடு**
இது ஆரம்பிப்பது கிறிஸ்துவின் ஜீவிய சரித்திரத்தின் **4** வெவ்வேறு கதைகளு டன், மத்தேயு, மாற்கு, லூக்கா, மற்றும் யோவானால் எழுதப்பட்டுள்ளது. ஒவ்வொருவரும் தங்கள் சொந்த நடையில் அந்தக் கதையை எழுதியுள்ளனர்.
அதைத் தொடர்ந்து, இயேசுகிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுந்தபின் நடந்த சம்பவங்களைக் கதையாக கூறுகிறது. இதில் முதலாவது ஆரம்பிக்கப்பட்ட திருச்சபைகளைப் பற்றி நாம் வாசிக்கிறோம். அந்தப் புத்தகத்தின் பேர் “அப்போஸ்தலரின் நடபடிகள்”.

பின்பு அநேக கடிதங்கள் வெவ்வேறு அப்போஸ்தலர்களால் இந்த இளம்திருச் சபைகளுக்கு எழுதப்பட்டது. இறுதியாக, “வெளிப்படுத்தின விசேஷம்” என்ற புத்தகம் எழுதப்பட்டது.

மீண்டும் இதன் முழு பட்டியல் உங்களுக்குத் தேவையானால் உங்களுடைய வேதாகமத்தின் ஆரம்பத்தில் காணலாம்.

**குறிப்பு:**
உங்களுக்கு இன்னும் இந்த வேதாகமத்தைக்குறித்து முழு உறுதி தேவையா னால் எங்களுக்கு எழுதி அதைக்குறித்த சிறுநூலாகிய **“வேதாகமம், தேவனுடைய வார்த்தை”**யைப் பெற்றுக்கொள்ளுங்கள். ஆம், உண்மையில் “வேதாகமம் தேவனுடைய வார்த்தை”.

இது கிறிஸ்டடெல்ஃபியன் வேதாகம சங்கத்தாரால் இலவசமாக வெளியிடப்பட்டது.

**பாடம் எண் 2**

..........................................................................................................................................

# *தேவன் இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார்*

**வார வாசிப்புகள்- ஆதியாகமம், அதிகாரங்கள் 4-6 , லூக்கா, அதிகாரங்கள் 4-6.**

**பாட வாசிப்பு: ஏசாயா, அதிகாரம் 53.**

**உலகத்தோடு இருக்கிற தவறு எது?**

நாம் வாழுகின்ற இந்த உலகத்தில் ஏதோ ஒரு தவறு இருந்துக்கொண்டுதான் இருக்கிறது. இதனை நாம் அனைவரும் ஒத்துக்கொண்டே ஆகவேண்டும். எந்தநாளிலும் உங்கள் செய்தித்தாளைத் திறந்து வாசியுங்கள். அதில் கொலை கள், ஏமாற்றங்கள், குற்றங்கள், யுத்தங்கள், மற்றும் போரின் பயமுறுத்தல்கள் போன்றவைகளின் கதைகளை நீங்கள் நிச்சயமாக பார்க்கமுடியும். இந்தக் காரியங்களைக்குறித்து நாம் பழகினதுபோல இருக்கிறோம். ஏனெனில், அவைகள் நடந்தே தீரும் என்பதை ஏற்றுக்கொண்டவர்கள்போல நாம் ஜீவிக் கிறோம். ஆனால் அவற்றைக் குறித்து சிந்திக்க ஆரம்பித்தோமென்றால், ‘‘ஏன்?’’ என்று கேட்டே தீருவோம்.

நிச்சயமாக, தேவன் முதலில் இந்த உலகத்தை உண்டாக்கும்போது, அதை மனிதர் தங்கும்படியான பரிபூரண ஸ்தலமாக உண்டாக்கினார். நாம் இன்று ஜீவிக்கிற, தொந்தரவுகளும் நிச்சயமற்ற நிலையும்கொண்ட உலகத்தைவிட வேறு நல்லது ஒன்றை அவர் தீர்மானித்திருந்தார்.

**தொந்தரவின் ஆரம்பம்**

ஆதிமுதலில் தேவன் தமது கையால் முதல் மனிதனை உருவாக்கினபோது, அவனை ஆதாம் என்று அழைத்து, தமது வழிகளை அவனுக்குப் போதித் தார். அவர் ஆதாமுக்கு ஒரு சாதாரண கற்பனையை விதித்தார். ஒரு தகப்பன் தனது பிள்ளைகளிடம்

கீழ்ப்படிதலை எதிர்பார்ப்பதுபோல ஆதாமிடமும் தேவன் கீழ்ப்படிதலை எதிர்பார்த்தார். தேவன் அவனிடம், ***"நீ தோட்டத்தி லுள்ள சகல விருட்சத்தின் கனியையும் புசிக்கவே புசிக்கலாம். ஆனாலும் நன்மைதீமை அறியத்தக்க விருட்சத்தின் கனியைப் புசிக்கவேண்டாம். அதை புசிக்கும் நாளில் சாகவே சாவாய்" (ஆதியாகமம் 2:16-17)***

ஆதாம் தேவனுக்குக் கீழ்ப்படியாமற்போனான். அவனுடைய கீழ்ப்படியாமை முடிவில் மரணத்திற்கு வழிநடத்தினது. இது தேவன் கூறினபிரகாரமாகவே நடந்தேறியது. இது மறுமுறை ஆதாம் பாவஞ்செய்ய வழிநடத்தினது. ஆனால் அதைவிட மோசமாக, ஆதாம் பெற்ற பிள்ளைகள் பாவஞ்செய்**யு**ம் இந்தவித தூண்டுதலோடு அவனுக்குப் பிறந்தனர்.

***ரோமர் 5:12***-ல் நாம் இவ்வாறு வாசிக்கிறோம்,***"இப்படியாக ஒரே மனுஷனாலே பாவமும் பாவத்தினாலே மரணமும் உலகத்திலே பிரவ்சித்தது போலவும், எல்லா மனுஷரும் பாவஞ்செய்தபடியால், மரணம் எல்லாருக்குள்ளும் வந்தது"*** எனவே ஆதாம் பாவஞ்செதான் என்றும் அவன் பாவியானானதினாலே மரித் தான் என்றும் நாம் பார்க்கிறோம்.

நாமும் பாவஞ்செய்கிறோம். அதினால் மக்கிறோம். நீங்கள் ஏசாயாவில் உள்ள அதிகாரத்தை வாசிக்கும்போது **6**-ம் வசனத்தின் வார்த்தைகளைக் கவனித்தீர்களா? ***"நாம் எல்லாரும் ஆடுகளைபோல வழிதப்பித் திரிந்து, அவனவன் தன்தன் வழியிலே போனோம்"***

எரேமியா தீர்க்கதரிசியும் இதே காரியத்தை வேறுவிதமான வார்த்தைகளில் சொல்லுகிறான்,***"இருதயமே எல்லாவற்றுக்கும் மேலாக திருக்குள்ளதும், மஹா கேடுள்ளதுமாய் இருக்கிறது" (எரேமியா 17:9).***

நாம் இந்தக் காரியங்களை வேதாகமத்தில் வாசிக்கிறோம். மேலும் அவைகள் முற்றிலும் உண்மை என்பதே நம்முடைய உள்ளிந்திரியங்களில் உணருகி றோம். அப்போஸ்தலனாகிய பவுலும் இதைப்பற்றிக் கூறும்போது இவ்வண் ணமே உணருகிறான், ***"ஆதலால் எனக்குள் (அதாவது என் மாம்சத்தில்) நன்மை***

***வாசமாயிருப்பதில்லை என்பதை அறிந்திருக்கிறேன்" (ரோமர் 7:18)*** நாம் எல்லாரும் அவரோடு சம்மதித்தே ஆகவேண்டும். ஏனெனில் நாம் நன்மைசெய்ய விரும்பினாலும், நாம் ஒருபோதும் நன்மை செய்வதில்லை.

**இதைத் திருத்த என்ன செய்வது?**

ஆதாம் பாவஞ்செய்யுமுன்னர் அவன் தேவனோடுள்ள ஐக்கியத்தில் ஜீவித் தான். ஆனால் அந்த நட்பு முறிந்து போயிற்று. அதினால் ஆதாம் தன்னை உண்டாக்கினவருடைய ஐக்கியத்தில் தொடர்ந்து இருக்கமுடியாமற்போயிற்று.

எவ்வளவு தொந்தரவுகளைப் புகுத்தினான் என்பதை ஆதாம் அப்பொழுது அறியவில்லை. அதிலிருந்து ஆயிரக்கணக்கான வருடங்களாக அவனுடைய சந்ததியார் ஒவ்வொருவரும் (நீயும் நானும் உட்பட) அவனுடைய அடிச்சுவடுக ளில் பின்தொடர்ந்து (ஆனால், இயேசு ஒருவரைத்தவிர) அனைவரும் பாவஞ் செய்து வருகிறோம்.

ஆனால் தேவன் தமது அன்பிலும் இரக்கத்திலும், மனிதரை அவர்களுடைய பாவத்தில் விட்டுவைக்கவில்லை. அவர்கள் தம்மிடம் வரக்கூடிய ஒரு வழியை உண்டாக்கினார். அதன்மூலம் நாம் ஜீவனை அடைகிறோம். நாம் ***யோவான் 3:16***-ல் இவ்வாறு வாசிக்கிறோம். ***ஏனெனில், தம்முடைய ஒரே பேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்திய ஜீவனை அடையும்படிக்கு அவரைத் தந்தருளி இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார்"/***

நமக்கென்று ஒரு நல்ல முன்மாதிரியைப் பின்பற்றத்தக்கதாக இருந்தால், அதைப் பின்பற்ற எப்போதுமே சுலபமாக இருக்கும். ஒரு குழந்தை தனது பெற்றோரைப் பின்பற்றி பேசக் கற்றுக்கொள்ளுகிறதுபோல, நாம் நல்ல ஆண் களும் பெண்களுமாக மாறக் கற்றுக்கொள்ள வேண்டுமென்றால், **இயேசுவை நமது முன்மாதிரி ஆக்கவேண்டும்.** மேலும் அவரைப்பற்றி நாம் அறியக்கூடிய சகலவற்றையும் கற்று அவரைப்போல நடக்கவேண்டும். நாம் இயேசுவைப் பார்க்கும்பொழுது நாம் எவ்வாறு இருக்கவேண்டும் என்று தேவன் விரும்பு கிறார் என்பதைப் பார்க்கமுடியும்.

**இயேசுவும் சிலுவையும்**

இயேசு ஒருபோதும் பாவஞ்செய்யவில்லை. அவர் எப்போதும் தேவனுக்குப் பிரி யமானவற்றை மாத்திரம் செய்துவந்தார். ஆனாலும் அவர்கள் அவரைச் சிலு வையில் அறைந்தார்கள்.

தேவன் அவரை இந்தப் பயங்கரமான மரணத்திலிருந்து காப்பாற்றாமல் விட்டு விட்டார். நாம் ஏற்கனவே குறிப்பிட்ட வசனமாகிய ***ஏசாயா 53:6*** இவ்விதமாக தொடருகிறது, ***"கர்த்தரோ நமது அக்கிரமங்க ளெல்லாவற்றையும் அவர்மேல் விழப்பண்ணினார்"***

வேதாகமம் நமக்கு விளக்கமாக போதிக்கிறது என்னவென்றால், இயேசுவின் சிலுவை மரணத்தின்மூலமாய், தமது பிதாவின் சித்தத்திற்குக் கீழ்ப்படிந்ததி னால், நமது பாவங்கள் மன்னிக்கப்படவும், நமக்கு ஜீவனின் நம்பிக்கை உண் டாயிருக்கவுஞ் செய்கிறது.

இதைக்குறித்து சிலஆச்சரியமான காரியங்கள் உள்ளன. 1.தேவன் தமதுகுமா ரனைக் கொடுத்ததில் அவர் காண்பித்த அன்பு, 2.அந்தக் குமாரன் தமது பிதாவின் சித்தத்த்திற்கு அன்புடன் கீழ்ப்படிந்தது 3.அவரில் விசுவாசம் வைப்ப தின்மூலம் நமக்கு ஜீவன் உண்டாயிருக்கிறது. நாம் இதைக்குறித்து அடிக்கடி நினைவுகூரமுடியாது.ஆனாலும் இது ஒரு கிறிஸ்தவனுடைய நம்பிக்கையின் ஆதாரமாய் இருக்கிறபடியால்,நமது வேதாகமத்தில் மீண்டும்மீண்டும் அதற்கு திரும்ப வருவோம்.

**அவரில் நம்பிக்கை வைப்பது**

***யோவான் 3:16*** கூறுகிறது என்னவெனில்,***"அவரை (இயேசுவை) விசுவாசம் வைக்கிறவன் எவனோ அவன் கெட்டுபோகாமல், நித்தியஜீவனை அடையும் படிக்கு"*** இதன் அர்த்தம், *"நான் வெறுமையாக இயேசுவை விசுவாசிக்கிறேன்"* என்று கூறுவதின்மூலம், நாம் பாவத்திலிருந்தும், மரணத்திலிருந்தும் இரட்சிக் கப்படுவோமா?

இது முதலில் அவ்வாறே தோன்றக்கூடும். ஆனால் நான் நிறுத்தி, சற்றுநேரம் இதைக்குறித்து சிந்திப்போம். நாம் உண்மையில் எதையாவது நம்பி, விசுவா சித்தோமென்றால், அதைக்குறித்து ஏதாவது செய்வோம் அல்லவா? நமது குழந்தை வியாதிபடும்போது வைத்தியர் காப்பாற்றமுடியும் என்று நம்புகி றோம். நாம் வெறுமையாக, *"நான் அ'ந்த வைத்தியனை விசுவாசிக்கிறேன்"* என்று கூறுவதோடு

இருந்துவிடுவதில்லை. அதன் விளைவாக நமது குழந்தை வருத்தத்தில் நீடிக்கும். நிச்சயமாக நாம் அந்த வைத்தியரிடம் போய் குழந்தை யைக் காண்பித்து அவர் எழுதி தருகிற மருந்துகளை வாங்கித் தருவோம்.

இப்போது, நாம் இயேசுவை விசுவாசிக்கிறோம் எனும்போது இதேவிதமாகவே நடக்கவேண்டும். நாம் அவரை உண்மையில் விசுவாசித்தால், நாம் என்ன செய்யவேண்டும் என்பதை அறிய முற்படவேண்டும். நம்-மால் முடிந்தஅளவு அதைச் சிறந்தமுறையில் செயல்படுத்தவேண்டும். நாம் அப்படி செய்தோமென்றால், ***"நாம் கெட்டுப்போகாமல் நித்தியஜீவனை அடையும்படி"*** நியமிக்கப் பட்டவர்களில் ஒருவராக இருப்போம்.

பாடப் பொருள்

1. **மனிதகுலத்தின் தகப்பனாகிய ஆதாம் பாவஞ்செய்தான். எனவே தேவன் அவனுக்கு மரணத்தண்டனை விதித்தார்.**
2. **நாமும் அவனைப்போல பாவஞ்செய்கிறோம். எனவே நாமும் மரிப்போம்.**
3. **நாம் இயேசுவில் விசுவாசம் வைத்தால் தேவன் நமது பாவங்களை மன்னித்து நித்தியஜீவனை அருளுவார்.**
4. **உண்மையில் நாம் இயேசுவை விசுவாசித்தால், அவர் கூறினவைகளையும் கட்டாயம் செய்வோம்.**

**தயவுசெய்து இந்தப் புத்தகத்தின் பக்கம் 95-ல் காணும் இந்தப் பாடங்களுக்குச் சம்பந்தப்பட்ட கேள்வி/விடைத்தாளுக்குச் சென்று, "ஆசிரியர் பிரதி"யை எங்களிடம் அனுப்பி வையுங்கள்.**

**இது கிறிஸ்டடெல்ஃபியன் வேதாகம சங்கத்தாரால் இலவசமாக வெளியிடப்பட்டது.**

**பாடம் எண்.3**

---

# *கர்த்தராகிய இயேசு பூமிக்குத் திரும்ப வருதல்*

**வார வாசிப்புகள்: ஆதியாகமம் அதிகாரங்கள் 7-9**
**லூக்கா அதிகாரங்கள் 7-10**
**பாட வாசிப்புகள்: அப்போஸ்தல நடபடிகள் அதிகாரம் 1**
**2.தெசலோனிக்கேயர் அதிகாரம் 1**

### இரண்டாயிரம் வருடங்களுக்கு முன்பு

இயேசு சிலுவையில் அறையப்பட்டிருந்தார். அவருடைய சீஷர்கள் குழம்பிப் போய் மனந்தளர்ந்து இருந்தனர். அவர்மேல் அவர்கள் வைத்திருந்த முழு நம் பிக்கையும் அற்றுப்போனதுபோல் இருந்தது இப்போது அவர் கல்லறையில் மரித்தவராக வைக்கப்பட்டிருந்தார்.

ஆனால் மூன்றாம் நாள் அவர் உயிரோடு எழுந்தார். அவர் தமது மரணத் துக்குமுன் பேசினவார்த்தைகளை அவர்கள் நிச்சயமாய் நினைவுகூர்ந்திருப்பார் கள் ***"நீங்கள் அழுது புலம்புவீர்கள். ஆனால் உலகமோ சந்தோஷப்படும். ஆனால் உங்கள் துக்கம் சந்தோஷமாக மாறும்" (யோவான் 16:20)***

அவர்கள் தங்கள் அருமை கர்த்தரையும், எஜமானனையும் திரும்ப காணும் போது, எவ்வளவு மகிழ்ந்திருப்பார்கள்! யோவான் மீண்டும் கூறும்போது, ***"அவ ர்கள் கர்த்தரைக் கண்டபோது மகிழ்ச்சி அடைந்தார்கள்" யோவான் 20:20.***

### இயேசு பரலோகத்துக்குச் சென்றபோது

இப்போது ***அப்போஸ்தலர் 1:1-8*** வசனங்களை மீண்டும் வாசியுங்கள். இயேசு மீண்டும் ஒருமுறை அவர்களது போதகராக அவர்கள் நடுவில் இருந்தபோது, **40** நாட்களாக அந்த அப்போஸ்தலர்கள் எவ்வளவு சந்தோஷமாய் இருந்திருப் பார்கள் என்பதை நீங்களே கற்பனைசெய்துப் பாருங்கள்

அந்த **40** நாட்கள் முடிந்தபோது, பெத்தானியா கிராமத்தின் பசும்புல் நிறைந்த மலைசரிவில் நின்றிருந்ததையும் இயேசு அவர்கள்நடுவில் காணப்பட்டதையும் கற்பனை செயுங்கள். சடுதியாக அவர் அவர்கள் நடுவிலிருந்து வானத்துக்கு மேலே எடுத்துக்கொள்ளப்பட்டார். இப்போது அவர் பூமியைவிட்டு செல்கை யில் அவரை உற்றுநோக்கினார்கள். ஒரு மேகம் அவரை மறைத்துவிட்டது. அவர் மீண்டும் அவர்களைவிட்டு பிரிக்கப்பட்டார். இந்தமுறை அவர்கள் குழப் பமடையவுமில்லை, தளர்ந்துபோகவுமில்லை. இதை லூக்கா கூறுகிறான்: ***"அவர் அவர்களை விட்டுப்பிரிந்து, பராலோகத்துக்கு எடுத்துக்கொள்ளப் பட்டார். அவர்கள் அவரைப் பணிந்துகொண்டு, மிகுந்த சந்தோஷத்தோடே எருசலேமுக்குத் திரும்பி வந்தார்கள். (லூக்கா 24:51-52)***

**அவர்களது சந்தோஷத்தின் இரகசியம்**.

ஏன் தங்களது இரண்டாவது பிரிவின்போது அவர்கள் அவ்வளவு சந்தோஷப் பட்டார்கள்? பகுதி காரணம் என்னவெனில் இயேசு அவர்களுக்கு ஒரு வாக்குத்தத்தத்தை அருளியிருந்தார். அது என்னவென்றால், ***"இதோ உலகத்தின் முடிவுபரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனேகூட இருக்கிறேன்" (மத்தேயு 28:20).***

அவர்களுக்கு என்ன சம்பவித்தாலும், அவர் பரலோகத்திலிருந்து அவர்களைக் கவனித்துக்கொண்டே இருப்பார் என்று அவர்களுக்குத் தெரியும்

ஆனால் அதுமட்டுமல்ல. அவர் பரலோகத்துக்கு எடுத்துக்கொள்ளப்படுகையில் இரண்டு தேவதூதர்கள் அவர்களிடம் ஒரு செய்தியைக் கொண்டுவந்தார்கள், ***"கலிலேயராகிய மனுஷரே, நீங்கள் ஏன் வானத்தை அண்ணாந்து பார்த்து நிற்கிறீர்கள்? உங்களிடத்தினின்று வானத்துக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட இந்த இயேசுவானவர் எப்படி உங்கள் கண்களுக்கு முன்பாக வானத்துக்கு எழுந்தரு ளிப்போனாரோ, அப்படியே மறுபடியும் வருவார்" என்றார்கள் (அப்போஸ்தலர் 1:11).***

இது ஒரு முக்கியமான சிறிய வசனம்.. இதை மனப்பாடம் செய்வது நமக்கு பிரயோஜனமாக இருக்கும். சீஷர்கள் எருசலேமுக்குத் திரும்பிப்போய் தங் களது கர்த்தரின் கட்டளைகளுக்குக்

கீழ்ப்படிந்தனர். இயேசு மீண்டும் உலகத் துக்குத் திரும்ப வருவார் என்று நிச்சயமாக அவர்கள் ஆரிந்திருந்தார்கள். இது அவர்களை மிகுந்த மகிழ்ச்சி அட்டையச் செய்தது.

**இயேசுவின் வார்த்தைகள்**

சுமார் **2,000** ஆண்டுகளுக்கு முன்பு அது சம்பவித்தது. ஆனால் இயேசு இதுவரை இன்னும் வரவில்லை. ஆனால் நிச்சயமாக ஒருநாளில் அவர் திரும்ப வருவார். .***லூக்கா 21:27***-ல் அவர்தாமே கூறியுள்ளார், ***“அப்பொழுது மனுஷகுமாரன் மிகுந்த வல்லமையோடும் மமிமையோடும் மேகத்தின்மேல் வருகிறதைக் காண்பார்கள்”*** (அவர் ஒரு மேகத்தின்மேல் சென்றார் என்பதை யும், ***“அவார் அந்தப்படியே திரும்வருவார்”*** என்று தேவதூதர்கள் கூறினர் என்-பதையும் நீங்கள் கவனித்தீர்களா?).

அநேக உவமைகளும் அவருடைய இரண்டாம் வருகையைக்குறித்துப் பேசு கின்றன. ***மத்தேயு 25:1-13*** வசனங்களிலுள்ள உவமையை உதாரணமாக எடுத்துக்கொள்ளுங்கள். இது ஒரு மணவாளனைக்குறித்துப் பேசுகிறது. இது ஒரு கிழக்கு நாடுகளிலுள்ள திருமணத்தைக்குறித்துப் பேசினாலும், முழு உலகத்திலும் வசிக்கிற யாவரும் இதைப் புரிந்துகொள்வதில் சிரமம் இராது. அந்த மணவாளன் நிச்சயமாக கிறிஸ்து தான். ***அவர் திரும்ப வரும்போது அவருக்கென்று ஆயத்தமில்லாமல்*** சிலர் இருப்இருப்பார்கள் என்று இந்தக் கதை எச்சரிக்கிறது.

***மத்தேயு 25:***13-ம் வசனத்தைக் கவனியுங்கள் இயேசு,***”உங்களுடைய எஜமான் வருவாரோ அல்லது இல்லையோ என்று நீங்கள் அறியாதிருக்கிறபடியால்”*** என்று கூறாமல், தான் நிச்சயமாக வருவேன் என்று கூற்யுள்ளார் ***.மனுஷ குமாரன் வரும் நாளையையாவது நாழிகையையாவது நீங்கள் அறியாதி ருக்கிறபடியால் எச்சரிக்கையாயிருங்கள்”.***

இயேசு தமது கடைசி செய்தியில், வெளிப்படுத்தலில் இவ்வாறு கூறியுள்ளார், ***“இதோ, சீக்கிரமாய் வருகிறேன்” (வெளிப்படுத்தல் 22:7).***

**பேதுருவின் சாட்சி**

இயேசு பரலோகத்துக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு சில நாட்களுக்குப்பின்பு, எரு சலேமிலுள்ள தேவாலயத்தில் இயேசுவைக் கொலைச்செய்யக் காரணமாயி ருந்த யூதஜனங்களோடு பேதுரு மிகுந்த தைரியத்தோடு பேசியதை நாம் பார்க்கிறோம். அவன் பேசினதைக் கவனியுங்கள், ***"ஆனபடியினாலே கர்த்தரு டைய சந்நிதானத்திலிருந்து இளைப்பாறுதலின் காலங்கள் வரும்படிக்கும், முன்னே குறிக்கப்பட்ட இயேசுகிறிஸ்துவை அவர் உங்களிடத்தில் அனுப்பும் படிக்கும், உங்கள் பாவங்கள் நிவிர்த்தி செய்யப்படும் பொருட்டு நீங்கள் மனந் திரும்பிக் குணப்படுங்கள்" (அப்போஸ்தலர் 3:19-20).***

மேலும் பேதுரு கிறிஸ்துவின் இரண்டாம் வருகையைப்பற்றி தான் எழுதின கடிதங்களை விசுவாசிகளுக்காக எழுதுகிறான் (இவைகளைப்பற்றி பரியாசம் பண்ணுகிறவர்களைக்குறித்து எழுதுகிறான்.) ***"அவர் வருவார் என்று சொல்லு கிற வாக்குத்தத்தம் எங்கே? பிதாக்கள் நித்திரை அடைந்தபின்பு சகலமும் சிருஷ்டிப்பின் தோற்றமுதல் இருந்தவிதமாய் இருக்கிறதே என்று சொல் லுவார்கள்" (2.பேதுரு 3:4)***

ஒருவேளை இந்தக் காலத்தில் ஜனங்கள் இதேவிதமான வார்த்தைகளைப் பேசுகிறதை நீங்கள் கேட்டிருக்கலாம். "நீண்டகாலமாக இயேசு திரும்ப வரப் போகிறார் என்று சொல்லுகிறைக் கேட்டு அலுத்துப்போனோம். ஆனால் இன்னும் அவர் வரவில்லை" சிலர் இன்னும், "அவர் ஒருபோதும் வரமாட்டார்" என்றும் கூறுவதுண்டு.

ஆனால் அவரை அனுப்புவதாக தேவன் வாக்குத்தத்தம் செய்துள்ளார்.. அவர் தாம் கொடுத்த வாக்குத்தத்தத்தை நிறைவேற்றியே தீருவார் என்று நாம் அறிவோம். மேலும் பேதுரு தொடர்ந்து கூறுகிறார், ***"கர்த்தர் தமது வாக்குத் தத்தத்தைக்குறித்து, தாமதமாயிராமல், ஒருவரும் கெட்டுப்போகாமல் எல்லா ரும் மனந்திரும்பவேண்டுமென்று விரும்பி நம்மேல் நீடியப் பொறுமையுள்ள வராய் இருக்கிறார். கர்த்தருடைய நாள் இரவிலே திருடன் வாருகிற விதமாய் வரும். அப்பொழுது வானங்கள் மடமடவென்று அகன்றுப்போம். பூதலங்கள் வெந்து உருகிப்போகும்.***

***பூமியும் அதிலுள்ள கிரியைகளும் மரித்து அழிந்துப் போகும்" (2.பேதுரு 3:9-10).***

**பவுலின் சாட்சி**

இயேசுதாமே பவுல் அப்போஸ்தலனைப் பிரித்தெடுத்து பிறரிடம் பிரசங்கிக் கும்படி அவனை அனுப்பினார். பவுல் தனக்கு அருளப்பட்ட சுவிசேஷமானது இயேசு கிறிஸ்துவால் தனக்கு நேரடியாகக் கொடுக்கப்பட்டது என்று கூறு கிறான். மேலும், பவுல் இயேசுகிறிஸ்துவின் இரண்டாம் வருகையைக்குறித்து பின்வருமாறு கூறுகிறான், ***"மேலும் தேவன் ஒருநாளைக் குறித்திருக்கிறார்; அதிலே அவர்தாம் நியமித்த மனுஷனைக்கொண்டு பூலோகத்தை நீதியாய் நியாயந்தீர்ப்பார்; அந்த மனுஷனை மரித்தோரிலிருந்து எழுப்பினதினாலே அதின் நிச்சயத்தை எல்லாருக்கும் விளங்கப்பண்ணினார்" (அப்போஸ்தலர் 17:31).***

பவுல் தெசலோனிக்கேயாவிலுள்ள எக்லீஷியாவுக்கு இரண்டு கடிதங்கள் எழு துகிறான். இந்தக் கடிதங்களை உங்கள் வேதாகமத்தில் பார்க்கலாம். அவை களில் எட்டு குறுகிய அத்தியாயங்கள் உள்ளன. அவை ஒவ்வொன்றிலும் பவுல் இயேசுவின் வருகையைக் குறித்து குறிப்பிடுகிறான்.

அப்போஸ்தலன், இயேசுவின் வருகையின்போது சம்பவிக்கப்போகிற மரித்தோ ரின் உயிர்த்தெழுதல் குறித்துப் பேசுகிறான், ***"ஏனெனில் கர்த்தர்தாமே ஆரவா ரத்தோடும், பிரதான தூதனுடைய சத்தத்தோடும், தேவஎக்காளத்தோடும், வானத்திலிருந்து இறங்கி வருவார்; அப்பொழுது கிறிஸ்துவுக்குள் மரித்தவர் கள் முதலாவது எழுந்திருப்பார்கள்" (1.தெசலோனிக்கேயர் 4:14).*** மேலும் பவுல், இயேசு எவ்வாறு இருப்பார் என்று கூறுகிறான், ***"தேவனை அறியாதவர்க ளுக்கும், நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படியாதவர்களுக்கும் நீதியுள்ள ஆக்கினையைச் செலுத்தும்படிக்கு, கர்த்தராகிய இயேசு தமது வல்லமையின் தூதரோடும், ஜீவாலித்து எரிகிற அக்கினியோடும், வானத்திலிருந்து வெளிப்படும்போது அப்படியாகும்" (2.தெசலோனிக்கேயர் 1:7-8).***

இங்கு இயேசுகிறிஸ்து ஒருசிலரை தண்டிக்கும்படியாக வருகிறதைக் குறிப்பிடு கிற அப்போஸ்தலன், வேறு சிலருக்கு அவர் வருகை மிகுந்த சந்தோஷத்தை அளிக்கும் என்றும் பேசுகிறான். நாம் புத்தியுள்ள கன்னிகைகளைப்போல, இயேசு கூறின உவமையின்பிரகாரமாக அவர் வருகையின்போது ஞானமுள்ள வர்களாய் இருந்தோமென்றால் நம்மைநாமே ஆயத்தப்படுத்தி அவர் வசனத் துக்குக் கீழ்ப்படிந்து காத்திருப்போம் இயேசு கூறினார், ***"மெய்யாகவே நான் சீக்கிரமாய் வருகிறேன்" (வெளிப்படுத்தல் 22:20).***அப்போஸ்தாலனாகிய யோ வான் இதற்குப் பிரதியுத்தரமாக ***"ஆமென், கர்த்தராகிய இயேசுவே வாரும்"*** என்று கூறினான்.

நாமும் இந்த அப்போஸ்தலனைப்போல இருந்து நமது இருதயங்கள் இந்த ஜெபத்தை உண்மையாக்கி, ஜீவிப்போமா?

**பாடப் பொருள்**

1. **இயேசுகிறிஸ்து இந்த உலகத்திற்குத் திரும்ப வரப்போகிறார்.**
2. **அவர்தாமே இதைக் கூறியிருக்கிறபடியால் அதை நாம் நிச்சய மாக நம்பமுடியும்.**
3. **அதையே தேவதூதர்கள் கூறினார்கள், அப்போஸ்தலரான பேது ருவும், பவுலும், யோவானும் அவ்விதமே கூறியுள்ளார்கள்.**
4. **நாம் புத்தியுள்ளவர்களாய், அவருடைய வருகைக்கென்று நம்மை ஆயத்தப்படுத்திக் கொள்வோம்.**

**இது கிறிஸ்டடெல்ஃபியன் வேதாகம சங்கத்தாரால் இலவசமாக வெளியிடப்பட்டது.**

**பாடம் எண்.4**

.........................................................................................................................

## *உம்முடைய ராஜ்யம் வருவதாக*

**வார வாசிப்புகள்: ஆதியாகமம் அதிகாரங்கள் 12-14**

**லூக்கா அதிகாரங்கள் 11-14**

**பாட வாசிப்பு: 1.நாளாகமம் அதிகாரம் 29**

### "உம்முடைய ராஜ்யம் வருவதாக; உம்முடைய சித்தம் பரமண்டலத்திலே செய்யப்படுகிறதுபோல பூமியிலேயும் செய்யப்படுவதாக."

எத்தனைமுறை இந்த வார்த்தைகளைச் சொல்லியிருக்கிறீர்கள்? அல்லது, எத்தனைமுறை பிறர் சொல்லக்கேட்டிருக்கிறீர்கள்? இந்த வார்த்தைகள் இயேசுவானவர் தமது சீஷர்களுக்குக் கற்றுக்கொடுத்த ஜெபத்தின் சில வரிகள். நீங்கள் ***லூக்கா 11:2-4*** வசனங்களில் இதை வாசிக்கலாம். இந்த வார்த்தைகள் நமக்கு நன்றாக தெரிந்திருந்தாலும் அதின் பொருள் என்னவென்று தெரியுமா? இதை மீண்டும் நன்றாக பாருங்கள்.தேவனுடைய ராஜ்யம் வருவதாக, மற்றும் அவருடைய சித்தம் பரலோகத்தில் இருப்பதுபோல பூலோகத்திலும் செய்ய வேண்டும் என்ற ஜெபம் அதினால் நாம் ஜெபிக்கையில், அந்த ராஜ்யம் நமது பூமியில் வரவேண்டுமென்று மனதார கேட்கிறோம். தேவனுடைய ராஜ்யம் வரும்போது ஆண்கள் பெண்கள் அனைவரும் அவருடைய சித்தத்தின்படி செய்வார்கள்.

**தேவராஜ்யம் பூமியில் ஒருமுறை இருந்தது.**

தேவனுடைய ராஜ்யம் சிலஆயிரம் வருடங்களுக்குமுன்பு இந்தப் பூமியில் இருந்தது என்று உங்களுக்குத் தெரியுமா? ***1.நாளாகமம் 29:1,10-13***க்கு உங்கள் வேதாகமத்தைத் திருப்பி படியுங்கள். முக்கியமாக ***11***-ம் வசனத்தைக் கவனி யுங்கள்,***"கர்த்தாவே, ராஜ்யமும் உம்முடையது. தேவரீர் எல்லாருக்கும் தலைவ ராய் உயர்ந்திருக்கிறீர்."***

பேசப்படுகிற அந்த ராஜ்யம் இந்த அதிகாரத்தைப் படிக்கும்போது நாம் பார்க் கிறபடி, இஸ்ரவேல் ராஜ்யம் இஸ்ரவேல் தேசத்தில் இருந்தது. ***வசனம் 23***-ஐ வாசியுங்கள் அப்படியே சாலொமோன் தன் தகப்பனாகிய தாவீதின் ஸ்தானத் திலே கர்த்தருடைய சிங்காசனத்தில் ராஜாவாக வீற்றிருந்து பாக்கியசாலியாய் இருந்தான். இஸ்ரவேலர் எல்லாரும் அவனுக்குக் கீழ்ப்படிந்து இருந்தார்கள்.

தாவீது வீற்றிருந்த சிம்மாசனத்தின்மேல் அவனுக்குப்பின்பு அவனது மகன் சாலொமோன் வீற்றிருந்தான்.அது இஸ்ரவேலின் மகாநகரமான எருசலேமில் இருந்தது.
அவன் வீற்றிருந்த சிங்காசனம் இஸ்ரவேல் ராஜ்யத்தின் ஆட்சிபீடமாக இருந் தது. ஏன் இஸ்ரவேலின் ராஜ்யம் தேவனுடைய ராஜ்யம் என்று அழைக்கப் பட்டது? மேலும் ஏன் அந்த சிங்காசனம் கர்த்தருடைய சிங்காசனம் என்று அழைக்கப்பட்ட்து?

ஏனெனில் தேவன்தாமே அந்த ராஜ்யத்தை இஸ்ரவேலருக்குக் கொடுத்திருந் தார். அவர் எருசலேமை ஆதிமுதல் அந்த ராஜ்யத்தின் தலைநகரமாக வைத் திருந்தார். (1.இராஜாக்கள் 11:13) அந்த ராஜ்யத்தை அரசாளும்படி அவர்தாமே கற்பனைகளைக் கொடுத்திருந்தார். இந்தக் கட்டளைகளைக்குறித்து பரிசுத்த வேதாகமத்தில் லேவியராகமம்,எண்ணாகமம்,உபாகமம் என்னும் புத்தகங்க ளில் நீங்கள் படிக்கலாம். அதை அரசாண்டராஜா தேவனுக்கென்று அரசாண் டான்.

**தேவனுடைய ராஜ்யம் கவிழ்க்கப்பட்டது.**
அநேக நூற்றாண்டுகளாக ராஜாவுக்குபின் ராஜா இஸ்ரவேலரை எருசலேமில் ஆண்டுவந்தார்கள். இவர்களில் சிலர் நல்ல ராஜாக்களாக தேவனுக்குப் பயந்து ஆட்சி செய்தார்கள், சிலர் தீயவர்களாய் இருந்தார்கள்.

இறுதியில் இஸ்ரவேல் தேசத்தார் தேவனுடைய வழிகளைவிட்டு வெகுதூரம் விலகி சென்றுவிட்டார்கள். எருசலேமை ஆண்ட ராஜா துன்மார்க்கனாயிருந் தான். இந்த ராஜ்யம் இனிமேல் நீடிக்கக்கூடாது என்று தேவான் கூறினார்.

***எசேக்கியேல் 21:25-27***-ஐ வாசியுங்கள். குறிப்பாக வசனம் ***27*** இவ்வாறு கூறுகி றது: ***"அதைக்*** (இஸ்ரவேல் ராஜ்யத்தைக்) ***கவிழ்ப்பேன், கவிழ்ப்பேன், கவிழ்ப் பேன்; உரிமைக்காரனானவர் வருமட்டும் அது இல்லாதிருக்கும்; அவருக்கே அதைக் கொடுப்பேன்".***

**உரிமைக்காரரானவர்**

எசேக்கியேலில் நாம் வாசித்த வசனங்களில் உரிமைக்காரன், தேவனுடைய ராஜ்யத்தின் சிங்காசனத்துக்கு உரிமை உள்ள ஒருவருக்கு, **"வாரிசு"**காரனுக்கு தேவன் அதைக் கொடுப்பார் என்று நாம் பார்க்கிறோம். இஸ்ரவேலின் அர சாட்சியிலிருந்து கடைசி ராஜா நீக்கப்பட்ட நாள்முதல் இன்றுவரை, எருசலே மின் ஆட்சிபீடத்திலிருந்து இஸ்ரவேலை ஆளும்படி எந்த ராஜாவும் இது வரை ஒருபோதும் இருந்ததில்லை.

ஆனால், ***லூக்கா 1:31-33*** வசனங்களுக்கு உங்கள் வேதாகமத்தைத் திருப்பி மரியாளிடத்தில் சொல்லப்பட்ட வார்த்தைகளைக் கவனியுங்கள் இயேசுவின் தாயாரிடம் தேவதூதன் தோன்றி, இயேசுவைக் குறித்துக் கூறின வார்த்தை என்னவென்றால், ***"அவர் பெரியவராயிருப்பார், உன்னதமானவாரின் குமாரன் எனப்படுவார், கர்த்தராகிய தேவன் அவருடைய பிதாவாகிய தாவீதின் சிங்காச னத்தை அவருக்குக் கொடுப்பார்"***

தேவனுடைய ராஜ்யத்தின் சிங்காசனத்துக்கு உரிமை யாருக்கு உண்டு? ஏன் தேவனுடைய குமாரன் இயேசுவுக்கு அந்த உரிமை உண்டு? நிச்சயமாக, அவருடைய தாயாரான மரியாள் மகா ராஜாவாகிய தாவீதின் சந்ததியிலிருந்து வந்தபடியினால் இயேசுவுக்கு இரண்டு மடங்கு உரிமை உண்மையாகவே உள்ளது.

இயேசு, தாம் ஒரு ராஜா என்பதை உரிமையாகக் கூறினார். பிலாத்து தன் விசாரணையில் இயேசுவிடம் ***"அப்படியானால், நீ ஒரு ராஜாவா?" என்று கேட்டான்"*** அதற்கு அவர், ***"நீர் சொல்லுகிறபடி நான் ஒரு ராஜாதான்" (யோவான் 18:37),*** என்றார்.

இயேசு சிலுவையில் அறையப்பட்டபோது, ***"இயேசு யூதருடைய ராஜா" (யோவான் 19:19)*** என்ற மேல்விலாசம் எழுதப்பட்டிருந்தது. அவருடைய எதிரி கள் அவரைப் பரியாசம் பண்ணினபடியே அந்த வார்த்தை எழுதப்பட்டது. ஆனால் அவர்கள் கூறினது உண்மையே.

இந்த சுவிசேஷம் இயேசு தேவனுடைய ராஜ்யத்தைக்குறித்து அதிகமாக பிரசங்கித்த ஒன்றாகும். *(சுவிசேஷம் என்றால் நற்செய்தி.)* இப்போது ***லூக்கா 8:1*** நாம் படிப்போம் ***"பின்பு இயேசு பட்டணங்கள் தோறும் கிராமங்கள் தோறும் பிரயாணம் பண்ணி, தேவனுடைய ராஜயத்திர்ற்குரிய நற்செய்தியைக் கூறி பிரசங்கித்து வந்தார்."***

இப்போது ஏன் இயேசு திரும்ப வரவேண்டும் என்று உங்களுக்குத் தெரியும். அவர் தேவனுடைய ராஜ்யத்தை மீண்டும் ஸ்தாபிக்கும்படி திரும்ப வரப் போகிறார்.

**ராஜ்யமும் நாமும்**

ஒருவேளை நீங்கள் நினைக்கலாம், ***"உம்முடைய ராஜ்யம் வருவதாக"*** என்று நாம் ஏன் ஜெபிக்கவேண்டும்? அது இஸ்ரவேலின் ராஜ்யமாயிற்றே, அதினால் அதற்கும் எனக்கும் என்ன சம்பந்தம்?"

நீங்கள் இந்தப் பாடத்தைத் தொடரும்போது இயேசு அரசாளப்போகிற ராஜ்ய மானது முந்தின தேவனுடைய ராஜ்யத்தைவிட பரவலாக இருக்கும். என்ப தைத் தெரிந்துக்கொள்வீர்கள். உண்மையில், அந்த ராஜ்யம் பூமியெங்கும் வியாபித்து, அனைவருக்கும் சமாதானத்தைக் கொண்டுவரும்.

ஆகையால் நாம், **"உம்முடைய ராஜ்யம் வருவதாக"** என்று ஜெபிப்போம். மேலும் இயேசுவானவர் திரும்பி வரும்போது நம்மைப் பார்த்து இப்படி சொல்லும்படி ஜெபிப்போம், ***"வாருங்கள், என் பிதாவினால் ஆசீர்வதிக்கப் பட்டவர்களே, உலகத்தோற்றமுதல் உங்களுக்காக ஆயத்தம் பண்ணப்பட்டி ருக்கிற ராஜ்யத்தைச் சுதந்தரித்துக்கொள்ளுங்கள்" (மத்தேயு 25:34).***

**வேதத்தின் ஒவ்வொரு பகுதியும் பிறபகுதிகளை ஒப்பிட்டுச் சொல்வதற்கு எவ்வாறு உதவுகிறது என்பதைப் பாருங்கள்.**

**நாம் இப்போது கற்றுக்கொண்டவை:**

1. **தேவனுடைய ராஜ்யம் இஸ்ரவேல் தேசத்தில் ஒருமுறை இருந்தது.**
2. **அந்த ராஜ்யத்தைத் தேவன் முடிவுக்குக் கொண்டுவந்து, அதன் வாரிசான உரிமைக்காரனான ஒருவனுக்குத் திரும்பக் கொடுப்பதாக வாக்குத்தத்தம் செய்தார்.**

3. அந்த வாரிசு இயேசு. அவர் எருசலேமில் தாவீதின் சிங்காசனத்தின் மேல் அமர்ந்து, இஸ்ரவேலை என்றும் அரசாளுவார்.
4. அந்த ராஜ்யத்தின் ஆசீர்வாதத்தில், உண்மையுள்ளவர்கள் எல்லாரும் பங்கு பெறுவார்கள்.

தயவுசெய்து இந்தப் புத்தகத்தின் பக்கம் 96-ல் காணும் இந்தப் பாடங்களுக்குச் சம்பந்தப்பட்ட கேள்வி/விடைத்தாளுக்குச் சென்று, "ஆசிரியர் பிரதி"யை எங்களிடம் அனுப்பி வையுங்கள்.

**இது கிறிஸ்டடெல்ஃபியன் வேதாகம சங்கத்தாரால் இலவசமாக வெளியிடப்பட்டது.**

**பாடம் எண்.5**

.......................................................................................................................................................

# *தேவனுடைய ராஜ்யம் - பூமியில் சமாதானம்*

**வார வாசிப்புகள்: ஆதியாகமம் அதிகாரங்கள் 15-17- லூக்கா அதிகாரங்கள் 15-18**

**பாட வாசிப்புகள்: சங்கீதம் - 72**
**ஏசாயா அதிகாரம் 35**

**பூமியில் சமாதானம்-எப்போது?**

இயேசு பிறந்தபோது, தேவதூதர்கள் மகிழ்ச்சியாய்ப் பாடினார்கள். ***லூக்கா 2:14***-ல் அந்தப் பாட்டின் வார்த்தைகள் எழுதப்பட்டுள்ளன. ***:உன்னதத்தில் தேவனுக்கு மகிமையும், பூமியில் சமாதானமும், மனிதர்மேல் பிரியமும் உண்டாவதாக"***

எனினும், அந்நாள்முதல் இந்நாள்வரை உண்மையும் நிரந்தரமுமான சமாதா னம் ஒருபோதும் இருந்ததில்லை. இயேசு திரும்பவும் பூமியில் தேவனுடைய ராஜ்யத்தை ஸ்தாபிக்கும்வரைக்கும் சமாதானம் ஒருபோதும் இருப்பதில்லை.

பழைய ஏற்பாடு அந்த ராஜ்யத்தைக்குறித்து அதிகமாய் நம்மிடம் பேசுகிறது. சமாதான காலத்தில் அது கொண்டுவரப்போகிற ஆசீர்வாதங்கள் மற்றும் சுபிட்சம் குறித்த அநேக சித்திரங்களை நமக்கு அளிக்கிறது.

s

**அந்த ராஜ்யத்தின் வியாபகம்**

மீண்டும் **சங்கீதம் 72**-ஐ பார்ப்போம். தேவனுடைய ராஜ்யம் பூமியில் ஸ்தா பிக்கப்படும் வேளையில் இருக்கும் ஒரு சித்திரத்தின் வார்த்தைகளை இந்த நமக்கு அளிக்கிறது.

ஆனால் இப்போதைக்கு, குறிப்பாக ***வசனம் 8***-ஐ கவனியுங்கள், ***"ஒரு சமுத்திரந் தொடங்கி மறுசமுத்திரம் வரைக்கும், நதிதொடங்கி பூமியின் எல்லைகள் வரைக்கும் அவார் அரசாளுவார்"***

இயேசுவால் இஸ்ரவேலில் ஸ்தாபிக்கப்படுகிற அந்த ராஜ்யம் பூமி முழுவதும் வியாபிக்கப்படும் என்று அது கூறுகிறது. இதே காரியத்தை ***சங்கீதம் 2:8***-ல், தேவன் இயேசுவிடம் பேசுகிறதை நாம் பார்க்கிறோம், ***"என்னைக் கேளும், அப்பொழுது ஜாதிகளை உமக்குச் சுதந்தரமாகவும், பூமியின் எல்லைகளை உமக்குச் சொந்தமாகவும் கொடுப்பேன்".*** (உங்கள் வேதாகமத்தில் "ஜாதிகள்" என்று குறிப்பிட்ட இடத்தில் ஜனங்கள் என்று அர்த்தமாகும். வேதாகமம் **400** ஆண்டுகளுக்கு முன்பு மொழிபெயர்க்கப்படும்போது "ஜாதிகள்" என்று குறிப் பிட்டது இன்றைய காலத்தில் ஜனங்களைக் குறிக்கும்.)

நாம் இன்னும் ஒரு வசனத்தைப் பார்ப்போம். ***சகரியா 14:9***-க்கு உங்கள் வேதாகமத்தைத் திருப்புங்கள்,***"அப்பொழுது கர்த்தர் பூமியின் மீதெங்கும் ராஜாவாயிருப்பார்; அந்நாளில் ஒரே கர்த்தர் இருப்பார்; அவருடைய நாமமும் ஒன்றாயிருக்கும்"***

**கிறிஸ்துவின் அரசாட்சி**

இயேசுகிறிஸ்து தமது தலைநகரமான எருசலேமிலிருந்து அரசாட்சி செய்வார். ***"மகாராஜாவின் நகரம்" (மத்தேயு 5:35)*** என்று ஒருமுறை அதை அழைத்தார்.

***ஏசாயா 2:1-4***-ல், பூமியெங்கும் அவரது கட்டளை போகும் என்று குறிப்பாக கவனியுங்கள், ***"சீயோனிலிருந்து வேதமும், எருசலேமிலிருந்து கர்த்தருடைய வசனமும் வெளிப்படும்"***

**ஒரு சிறப்பான ராஜ்யம்**

ஒரு சிறப்பான உலகில் எந்த நிபந்தனைகளின் கீழ் வசிக்கும்படி நீங்கள் விரும்புவீர்கள் என்று ஒருவேளை உங்களிடம் கேட்டால், நீங்கள் முதலாவது கூறுவது, பாதுகாப்பு, பயத்திலிருந்து விடுதலை, உங்கள் பிரயாசத்தின் பலனை அனுபவிக்கக்கூடிய சமாதானம் ஆகும். உண்மையில், உங்கள் மனதில் ஒருவேளை ஒரு சித்திரத்தை நீங்கள் வைத்திருக்கக்கூடும். அது மீகா தீர்க்கதரிசி நமக்குக் கூறுகிறதைப்போல இருக்கலாம்.

***“அவர் திரளான ஜனங்களுக்குள் நியாயந்தீர்த்து, தூரத்திலுள்ள பலத்த ஜாதிகளைக் காடிந்துக் கொள்ளுவார்; அப்பொழுது அவர்கள் தங்கள் பட்டயங்களை மண்வெட்டிகளாகவும், தங்கள் ஈட்டிகளை அரிவாள்களாகவும், அடிப்பார்கள்; ஒரு ஜாதிக்கு விரோதமாய் மறுஜாதி பட்டயம் எடுப்பதில்லை; இனி அவர்கள் யுத்தத்தைக் கற்பதுமில்லை. அவனவன் தன்தன் திராட்சைச் செடியின் நிழலிலும், தன்தன் அத்திமரத்தின் நிழலிலும் பயப்படுத்துவார் இல்லாமல் உட்காருவான்; சேனைகளுடையா கர்த்தரின் வாய் இதைச் சொல்லிற்று” (மீகா 4:3-4)***

ஆனால் சமாதானம் கிடைக்குமுன்பு, மனிதர் தேவனுடைய வழிகளில் நடக்க, சரியான முயற்சி எடுத்தாக வேண்டும். ஆனால் மனிதர் தங்கள் சொந்த வழியில் தொடர்ந்து நடக்கும்வரை தொல்லைகள் இருந்துக்கொண்டு தான் இருக்கும். எனவே கர்த்தராகிய இயேசுவின் கிரியைகளில் ஒன்று, அனைத்து ஜாதி ஜனங்களுக்கும் தேவனுடைய வழிகளைப் போதிப்பதாகும்.

ஆனாலும், செவிகொடாத சிலர் இருப்பார்களே, என்று நீங்கள் கேட்கலாம். அது உண்மையே. ஏனெனில், ***ஏசாயா 11:4***-ல் நாம் வாசிக்கிறபடி, கீழ்ப்படி யாதவார்கள் தண்டிக்கப்படுவார்கள், ***“பூமியை தமது வாக்கின் கோலால் அடித்து, தமது வாயின் சுவாசத்தால் துன்மார்க்கரைச் சங்கரிப்பார்”***

ஏனெனில் இயேசு திரும்ப வரும்போது அவர் சர்வவல்லவராக இருப்பார் என்பதை நினைவுகூருங்கள் தொடர்ந்து இயேசுவின் அரசாட்சியின்கீழ் அனை வரும் தேவனுக்குப் பிரியமானவற்றைச் செய்யும்படி போதிக்கப்படுவார்கள். இதைக்குறித்து ***ஏசாயா 26:9***-ல் வாசிக்கிறோம், ***“உம்முடைய நியாயத்தீர்ப்பு கள் பூமியிலே நடக்கும்போது பூச்சக்கரத்துக் குடிகள் நீதியைக் கற்றுக் கொள்வார்கள்”.***

இப்போது ***ஏசாயா 32:17***-க்கு உங்கள் வேதாகமத்தைத் திருப்புங்கள், ***“நீதியின் கிரியை சமாதானமும், நீதியின் பலன் என்றுமுள்ள அமரிக்கையும் சுகமுமாம்”***

**அனைவருக்கும் சுபிட்சம்**

அப்படிப்பட்ட பரிபூரணமான நிபந்தனைகளுடன் எல்லாபக்கங்களிலும் சுபிட்

சம் தங்கியிருக்கும். நீங்கள் ***சங்கீதம் 72:16***-ஐ பார்த்தீர்களா? அது கூறுகிறது ***"பூமியிலே மலைகளின் உச்சிகளில் ஒரு பிடி தானியம் விதைக்கப் பட்டிருக்கும்".*** வழக்கமாக மலை உச்சிகள் வெறுமையாக இருக்கும். அதில் ஒரு பிடி தானியம் விதைக்கப்பட்டால், அதன் விளைச்சல் பள்ளத்தாக்குகளில் எவ்வாறு நிறைந்திருக்கும் என்பதைக் கற்பனைச் செய்து பாருங்கள். ***சங்கீதம் 67:6***-ல் நாம் இவ்வாறு வாசிக்கிறோம்,***"பூமி தன் பலனைத் தரும், தேவனாகிய எங்கள் தேவனே எங்களை ஆசீர்வதிப்பார்".***

அந்நாட்களில் வனாந்தரமும் செழித்திருக்கும். இந்த அழகான வசனங்களை ***ஏசாயா 35:1-2***-ல் வாசிக்கலாம், ***"வனாந்தரமும் வறண்ட நிலமும் மகிழ்ந்து, கடுவெளி களித்து, புஷ்பத்தைப்போல செழிக்கும். அது மிகுதியாய்ச் செழித்து பூரித்து ஆனந்தக் களிப்புடன் பாடும்"***

**சிந்தையும் சரீரமும் குணப்படுதல்**

மேற்கண்ட ஆசீர்வாதங்களுடன், கூடுதலான ஆரோக்கியமும், பெலமும் நமக்கு உண்டாயிருக்கும்.

இயேசு 2,000 ஆண்டுகளுக்குமுன் பூமியில் சஞ்சரித்தபோது, தேவன் தமக்குக் கொடுத்த வல்லமையைப் பயன்படுத்தி, அனேக பிணியாளிகளைக் குணமாக்கி னார். தேவனுடைய ராஜ்யத்திலும் அதே வல்லமையை மீண்டும் பார்க்கலாம்.

தொடர்ந்து ***ஏசாயா 35:5-6***-ஐ வாசியுங்கள். ***"அப்பொழுது குருடரின் கண்கள் திறக்கப்பட்டு, செவிடரின் செவிகள் திறவுண்டுபோம்; அப்பொழுது முடவன் மானைப்போல் குதிப்பான், ஊமையன் நாவும் கெம்பீரிக்கும்"***

ஜனங்கள் நீண்ட ஆயுசுடன் வாழ்கிறதை நாம் நன்றாக கற்பனை செய்யமுடியும். ***சகரியா*** தீர்க்கதரிசி ***8:4-5***-ல் எவ்வாறு நடக்கும் என்று கூறுகிறான், ***"திரும்பவும் எருசலேமின் வீதிகளில் முதிர்வயதினாலே தங்கள் கைகளில் கோலைப்பிடித்து, நடக்கிற கிழவரும் கிழவிகளும் குடியிருப் பார்கள். நகரத்தின் தெருக்களிலே விளையாடுகிற ஆண்பிள்ளைகளும் பெண்பிள்ளைகளும் அதின் வீதிகளில் நிறைந்திருக்கும்".*** இந்த வசனங்கள் எருசலேமைப் பற்றி பேசினாலும் தேவனுடைய ராஜ்யத்தின் ஆசீர்வாதங்கள் பூமியின் மீதெங்கும் வியாபித்திருக்கும் என்பதை நாம் பார்க்கிறோம்.

**உறுதியான தேவனுடைய வசனம்**

ஒருவேளை நீங்கள் நினைப்பீர்கள், "இவை அனைத்தும் கேட்கிறதற்கு மிக நன்றாக உள்ளது. ஆனால் அது உண்மையாக நிறைவேற முடியாத அளவுக்கு மிக நல்லதாக உள்ளது"

நாம் வாசித்த வாக்குத்தத்தங்கள் மனிதனால் கொடுக்கப்பட்டிருந்தால், நிச்சயமாக அதில் நமது நம்பிக்கையை வைக்க முடியாது. மேலும் மனிதருள் மிக நல்லவர்களாலும்கூட தங்கள் சரீரபெலவீனத்தினிமித்தம், அவைகளைக் காப்பாற்ற முடியாது.

ஆனால் இவைகள் தேவனால் கொடுக்கப்பட்ட வாக்குத்தத்தங்கள் ஆகை யால் நமது முழுநம்பிக்கையையும் அவற்றில் வைக்கலாம். ***ஏசாயா 55:6-11***-ஐ வாசியுங்கள். குறிப்பாக ***வசனம் 11*** இவ்வாறு கூறுகிறது, ***"அப்படியே என் வாயிலிருந்து புறப்படும் வசனமும் இருக்கும்; அது வெறுமையாய் என்னிடத்திற்குத் திரும்பாமல், அது நான் விரும்புகிறதைச் செய்து, நான் அதை அனுப்பின காரியமாகும்படி வாய்க்கும்".***

எனவே நாமும் இவைகள் சம்பவிக்கும் காலத்தை மகிழ்வுடன் எதிர் நோக்குவோம்.

**"உன்னதத்தில் தேவனுக்கு மகிமையும்,**
**பூமியில் சமாதானமும் உண்டாவதாக"**
**(லூக்கா 2:14).**

பாடப் பொருள்

1. **இயேசு திரும்ப வரும்போது அவர் பூமியில் அரசனாவார்.**
2. **எருசலேம் அவரது தலைநகரமாக இருக்கும்.**
3. **பூமி முழுவதிலும் சமாதானமும், சுபிட்சமும், மகிழ்ச்சியும் உண்டாயிருக்கும்.**
4. **பூமி முழுவதும் வியாபித்திருக்கும் அவருடைய ராஜ்யத்தில் அனைவரும் தேவனுடைய கட்டளைகளுக்குக் கீழ்ப்படியக் கற்றிருப்பார்கள்.**

**இது கிறிஸ்டடெல்ஃபியன் வேதாகம சங்கத்தாரால் இலவசமாக வெளியிடப்பட்டது.**

**பாடம் எண்.6**

---

# *இஸ்ரவேல் மக்கள் எவ்வாறு தேவத் திட்டம் - 1-ல் பொருந்துவார்கள்*

**வார வாசிப்புகள்: ஆதியாகமம், அதிகாரங்கள் 18 -20**
**லூக்கா, அதிகாரங்கள் 19 -21**
**பாட வாசிப்புகள்: ஆதியாகமம், அதிகாரம் 37**
**ஏசாயா, அதிகாரம் 43**

**கதையின் ஆரம்பம்**

இஸ்ரவேலரின் கதையானது அந்த விசுவாசியான மனிதன் ஆபிரகாமோடு உண்மையில் ஆரம்பித்தது. அவனுடைய முதிர்வயதில் ஈசாக்கு என்னும் ஒரு மகன் இருந்தான். அந்த ஈசாக்குக்கு யாக்கோபு என்னும் ஒரு மகன் இருந்தான். அவன் பிற்காலத்தில் இஸ்ரவேல் என்று அழைக்கப்பட்டான். யாக்கோபுக்கு 12 குமாரர்கள் இருந்தார்கள். அவர்கள் இஸ்ரவேலின் 12 கோத்திரப் பிதாக்கள் ஆனார்கள்.

இவர்களில் 11-வது குமாரன் யோசேப்பு என்று அழைக்கப்பட்டான். அவனு டைய ஜீவியத்தின் கதையானது, வேதாகமத்தில் வாசிக்கும்போது ஒருபோ தும் களைப்படையாத ஒன்றாகும். ஆனால் அது ஒரு நல்ல கதையைவிட மேலானது. அது இஸ்ரவேலர் என்று அழைக்கப்பட்ட "வேதாகமத்தில் உள்ள முக்கியமான ஜனங்களின்" சரித்திரத்தில் நடந்த முக்கிய சம்பவங்களைக் குறித்து நமக்குத் தெரிவிக்கிறது. மேலும் தேவனுடைய ஜனத்துக்கென்று அவர் பாராட்டும் உன்னதமான கவனிப்பின் முன்மாதிரியையும், நமக்குப் போதிக்கிறது.

நம் எல்லாருக்கும் யோசேப்பின் பொறாமைப் பிடித்த சகோதரர்கள் எவ்வாறு அவனை அடிமையாக விற்றார்கள் என்ற கதை நம் நினைவில் இருக்கும். அனேக சோதனைகளுக்குப் பின்னால் அவன் எவ்வாறு

எகிப்து தேசத்துக்குத் தலைவனானான் என்பதையும் நாம் வாசிக்கிறோம். பின்பு பஞ்சகாலத்தில் அவனுடைய தகப்பனும், சகோதரர்களும் எகிப்துக்குக் கடந்து வந்தார்கள். ஏனெனில், எகிப்தில் தானியம் கிடைத்ததால் தேவனுக்கு நன்றி, யோசேப்புக் கும் நன்றி.

கொஞ்சம் காலத்துக்கு யூதர்கள் (இஸ்ரவேலர் அல்லது இஸ்ரவேலின் குமாரர் என்று ஆதியில் அழைக்கப்பட்டனர்) மிகுந்த சந்தோஷமாய் இருந்தார்கள். ஆனால் யோசேப்பின் மரணத்திற்குப் பிறகு யூதர்கள் எகிப்தில் பலுகிப் பெருகினதால், எகிப்தியர் அவர்களை ஒடுக்கி, அடிமைகளாக நடத்தினார்கள்.

**அடிமைகளுக்கு விடுதலை**

அந்த யூத அடிமைகளை தேவன் எவ்வாறு மோசே என்ற ஒருமனிதனின் தலைமையின்கீழ் எகிப்திலிருந்து அழைத்து வந்தார் என்ற கதையை ஒரு வளை உங்களுக்குத் தெரிந்திருக்கலாம். அவர்களைப் பாழும் பயங்கரமு மான வனாந்தரத்தினூடே நடத்தி இஸ்ராவேல் தேசத்தில் அவர்களைச் சேர்த்தார். அந்த நீண்ட ஆபத்து நிறைந்த பயணத்தில் தேவன் அவர்களைப் பாதுகாத்தார். அதைக்குறித்து, ***நெகேமியா 9:20-21***-ல் நாம் வாசிக்கிறோம், ***"அவர்களுக்கு அறிவை உணர்த்த உம்முடைய நல் ஆவியைக் கட்டளை யிட்டீர்; அவர்கள் வாய்க்கு உம்முடைய மன்னாவை அருளி, அவர்கள் தாகத்துக்கு தண்ணீரைக் கொடுத்தீர். இப்படி நாற்பது வருஷமாக வனாந்தரத்தில் அவர்களுக்கு ஒன்றும் குறைவுபடாதபடிக்கு, அவர்களைப் பராமர்ரித்து வந்தீர்; அவர்கள் வஸ்திரங்கள் பழமையாய்ப் போகவுமில்லை, அவர்கள் கால்கள் வீங்கவுமில்லை".***

இஸ்ரவேல் தேசத்தில் வசித்து வந்த பொல்லாத ஜாதிகளைத் தேவன் விரட்டியடித்து, அதை யூதர்களுக்குக் கொடுத்தார். அவர்களை ஆளும்படிக் குக் கட்டளைகளையும், நியாயாதிபதிகளையும் அவர்களுக்குக் கொடுத்தார். தேவன் அவர்களிடம், ***"நீங்கள் கீழ்ப்படியாமற் போனால் அழிக்கப்படுவீர்கள்"*** என்றார்.
நீங்கள் ***உபாகமம் அதிகாரம் 28***-ல், தேவனுக்குக் கீழ்ப்படிந்தால் கிடைக்கும் ஆசீர்வாதங்களும், கீழ்ப்படியாமற் போனால் வரும் சாபங்களையும் குறித்தும் வாசிக்கலாம்.

**யூதர்கள் ஒரு ராஜாவைக் கோருதல்**

ஏறக்குறைய 400 ஆண்டுகள் கடந்து சென்றது. அந்த ஆண்டுகளின்போது தேவன் இஸ்ரவேலின் 12 குடும்ப குழுக்களை ஆளும்படி நியாயாதிபதிகளை நியமித்து வந்தார். (யாக்கோபின் சந்ததியார் 12 குடும்ப குழுக்களாகப் பிரிக் கப்பட்டு, கோத்திரங்கள் என்று அழைக்கப்பட்டனர்). ஆனாலும் யூதர்கள் அதிருப்தி அடைந்து, தங்களைச் சுற்றியுள்ள ஜாதிகளைப்போல தங்களுக்கும் ஒரு ராஜா வேண்டும் என்று கேட்டனர். அப்படி ஒரு ராஜாவை அவர்கள் கேட்டதில், தேவன் தங்களுக்கு ராஜாவாக இல்லை என்று அறிவித்தனர். அவர்களது நியாயாதிபதியாகிய சாமுவேல் தேவனிடம், எவ்வாறு அவர்கள் ஒரு ராஜாவைக் கோரினார்கள் என்று கேட்டதற்கு தேவன் கூறினார், ***"அவர்கள் உன்னைத் தள்ளவில்லை, நான் அவர்களை ஆளாதபடிக்கு, என்னைத்தான் தள்ளினார்கள்" (1.சாமுவேல் 8:7).***

தேவ்வன் அவர்கள் கோரிக்கைக்குப் பதில் அளித்து, அவர்களுக்குத் தேவை யான ராஜாவைக் கொடுத்தார். இஸ்ரவேலின் முதல் ராஜாவான சவுலின் அபிஷேகத்தைப் பற்றின சுவாரஸ்யமான கதையை ***1.சாமுவேல் 8,9*** அதிகாரங்களில் நீங்களாகவே படித்து அறிய விரும்புவீர்கள்.

**பிரிக்கப்பட்ட ராஜ்யம்**

சவுலைத் தொடர்ந்து மகா அரசனாகிய தாவீது ராஜாவானான். அவனைப் பற்றி அதிகமாக வரப்போகிற பாடங்களில் நீங்கள் கேட்பீர்கள். 40ஆண்டுகள் நீண்டஆட்சிக்குப் பிறகு அவனுடைய மகனான சாலொமோன் ராஜாவானான்.

சாலொமோன் மிகுந்த செல்வந்தனாகி ஜனங்களின் மேல் வரிபளுவைச் சுமத்தினான். இந்தக் காரியம் ஜனங்களை அதிருப்தி அடையச் செய்ததின் நிமித்தம் சாலொமோன் மரணம் அடைந்தபின்பு, அவனது மகனான ரெகோபெயாமிடம் வந்து தங்கள் பளுவைச் சுலபமாக்கும்படி கோரினர். ரெகோபெயாம் தன்னுடைய இளம் சினேகிதர்களின் ஆலோசனைக்குச் செவிகொடுத்து தனது தகப்பனாருடைய முதிர்வயதான ஆலோசகர்களின் ஆலோசனையைத் தள்ளிவிட்டான் என்பதை ***1.ராஜாக்கள் 12-ம் அதிகாரத் தில்*** வாசிக்கலாம்.

ஜனங்கள் தங்கள் கோரிக்கையை ரெகோபெயாம் ஏற்றுக்கொண்டாரா என்பதைக் கேட்கும்படி அவனிடம் வந்தார்கள். ஆனால் அவர்கள் கூடிவந்தபோது ஞானமற்ற பதிலைக் கூறினான். ***1.ராஜாக்கள் 12:13-14***-ல் ராஜா ஜனங்களிடம், ''முரட்டுத்தனமான பதிலை'' அளித்தான் என்பதை, நாம் வாசிக்கிறோம். ***''என் தகப்பன் உங்கள் நுகத்தைப் பாரமாக்கினார்; நான் உங்கள் நுகத்தை அதிக பாரமாக்குவேன். என் தகப்பன் உங்களைச் சவுக்களினால் தண்டித்தார், நான் உங்களைத் தேள்களினால் தண்டிப்பேன்''/***

ஜனங்கள் அப்படிப்பட்ட ராஜாவை எதிர்த்ததில் எந்த ஆச்சரியமுமில்லை. இஸ்ரவேலின் 10 கோத்திரங்கள் தனியாக பிரிந்து ஒரு ராஜ்யத்தை ஸ்தாபித்தனர். அதற்குத் தலைவனாக யெரோபெயாம் என்ற ஒரு மனிதன் இருந்தான். ரெகோபெயாம் தோன்றின கோத்திரமான யூதாவும், சிறிய கோத்திரமான பென்யமீனும் அவனுக்கு உண்மையாக இருந்தனர்.

ஆகையால் இதுமுதல் வேதாகமத்தில், பக்கம் பக்கமாக இரண்டு ராஜ்யங்களின் சரித்திரத்தை நாம் வாசிக்கிறோம். 10 கோத்திரங்களின் சரித்திரம் பொதுவாக 'இஸ்ரவேல்' அல்லது வடக்கு ராஜ்யம் என்று அறியப்பட்டிருந்தது (ஏனெனில் அவர்கள் பெரும்பான்மையான ஜனங்களாக இஸ்ரவேலின் வடபகுதியில் வாழ்ந்தனர்). இரண்டு கோத்திரங்களின் சரித்திரம் 'யூதேயா' அல்லது தென் ராஜ்யம் என்று அறியப்பட்டிருந்தது.

**தொடர்ச்சியாக யூதர்களின் கீழ்ப்படியாமை**

ராஜாக்களின் முதலாம் இரண்டாம் புத்தகங்களில், ஜனங்கள் எவ்வாறு தொடர்ச்சியாக தேவனை மறந்து, அவருடைய வழிகளை விட்டு விலகினர் என்ற துக்கமான கதையைக் குறித்து நாம் வாசிக்கிறோம். முடிவாக, ஜனங்களைத் தேவன் தண்டிக்கக்கூடிய அளவுக்கு நிலைமை மிக மோசமாக இருந்தது. எனவே தேவன் அவர்களைத் தூர தேசங்களில் அடிமைகளாகக் கொண்டுப் போகப்படுவர் என்று அறிவித்தார்.

தேவன் தமது ஜனங்களை மீண்டும் தமது வழிகளுக்குக் கொண்டுவரும்படி எல்லாவற்றையும் செய்தார்,

என்பதைக் குறித்து ***2.நாளாகமம் 36:15-16***-ல் இவ்வாறு வாசிக்கிறோம், ***''அவர்களின் பிதாக்களின் தேவனாகிய கர்த்தர் தமது ஜனத்தையும்***

***தமது வாசஸ்தலத்தையும் காப்பதற்கான இரக்கமுள்ளவராயிருந்தபடியால், அவர்களிடத்துக்குத் தம்முடைய ஸ்தானாபதிகளை ஏற்கனவே அனுப்பினார். ஆனாலும் அவர்கள் தேவனுடைய ஸ்தானாபதி களைப் பரியாசம்பண்ணி, அவருடைய வார்த்தைகளை அசட்டைச்செய்து, அவருடைய தீர்க்கதரிசிகளை நிந்தித்தபடியால், கர்த்தருடைய உக்கிரம் அவருடைய ஜனத்தின்மேல் மூண்டது; சகாயமில்லாமல் போயிற்று,"***

**முடிவாக தண்டனை**

வடக்கு ராஜ்யமான இஸ்ரவேல் முதலாவதாக சிறைப்பட்டுப் போனது. அசீரியரின் ராஜா வந்து அந்த ஜனங்களை அசீரியாவுக்கு அழைத்துக் கொண்டு போனான். அதன் விளைவாக, அவர்கள் தங்கள் சொந்தத் தேசத்திற்கு ஒருபோதும் திரும்பி வரவில்லை. நீங்கள் இதைக் குறித்து 2.ராஜாக்கள் 17:6-18-ல், குறிப்பாக 23-ம் வசனத்தில் இவ்வாறு வாசிக்கிறோம், ***"கர்த்தர் தீர்க்கதரிசிகளாகிய தம்முடைய ஊழியக்காரர் எல்லாரையும் கொண்டு சொல்லியிருந்தபடி, அவர்களைத் தமது சமூகத்தைதிட்டு, அகற்றுகிற வரைக்கும், அவைகளை விட்டு விலகாதிருந்தார்கள்; இப்படியே இஸ்ரவேலர் தங்கள் தேசத்தினின்று அசீரியாவுக்குக் கொண்டுபோகப்பட்டு இந்நாள்வரைக்கும் இருக்கிறார்கள்".***

பின்பு யூதேயா ராஜ்யம் பாபிலோன் ராஜாவால் சிறை பிடிக்கப்பட்டது. ஆனால் அவர்கள் நிலைமை இஸ்ரவேலரைப்போல நம்பிக்கையற்று இருக்க வில்லை. அவர்கள் தங்கள் சொந்த தேசத்திற்கு 70 ஆண்டுகளுக்குப் பின் திரும்புவார்கள் என்றும், பாபிலோன் அரசனாகிய நெபுகாத்நேச்சார் இடித்துப் போட்ட தேவாலயம் திரும்பவும் கட்டப்படும் என்றும் தேவன் வாக்களித்தார்.

**தங்கள் சுய தேசத்தில் மீண்டும் வருதல்**

சில யூதர்கள் வசதியும் செல்வமும் நிறைந்தவர்கள் ஆனபடியினால், பாபிலோனைவிட்டு தங்களது சொந்த தேசத்திற்குத் திரும்பிப்போக விருப்ப மில்லாமற் போனார்கள். ஆனாலும் தேவனால் எழுப்பப்பட்ட சிலர் உண்மையான ஜனக்கூட்டத்தை வழிநடத்தி சிரமமான பயணத்தை மேற் கொண்டு தேவாலயத்தைத் திரும்பக்கட்டவும், ஒரு புதிய வாழ்க்கையை ஆரம்பிக்கும்படிக்கும் ஆயத்தமானார்கள்.

அவர்கள் அனேக சிரமங்களைச் சந்தித்தாலும், தேவன் அவர்களைத் திருத்தவும், உற்சாகப்படுத்தவும் சில தீர்க்கதரிசிகளை அனுப்பினார். அவர்கள் பழைய ஏற்பாட்டில் கடைசி 3 புத்தகங்களை எழுதின ஆகாய், சகரியா, மல்கியா என்பவர்களின் தீர்க்கதரிசன எழுத்துக்களாகும்.

மீகா தீர்க்கதரிசி மூலம் **(மீகா 3:6)** ***தீர்க்கதரிசிகளின் மேல் சூரியன் அஸ்தமிக்கும்)"*** காலங்களைக் குறித்து தேவன் பேசினாலும், மல்கியாவின் காலம் முதல் யோவான் ஸ்நானகன் வரும்வரை புதிய ஏற்பாட்டு காலம் வரும்வரை, ஏற்கனவே எழுதப்பட்டிருந்த வார்த்தைகளைவிட ஜனங்களுக் கென்று தேவனிடமிருந்து ஒரு வார்த்தையும் வரவில்லை. ஆனாலும் இது வரை தேவனுடைய ஜனங்களாகிய யூதர்கள் இருந்தார்கள், இன்னும் இருக்கிறார்கள். அடுத்த பாடத்தில் அவர்களுடைய சரித்திரம் இந்த நாள் வரை உள்ளதை பின்பற்றி பார்க்கப் போகிறோம்.

பாடப்பொருள்

1. **பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன், தேவன் இஸ்ரவேல் மக்களைத் தமக்குச் சொந்தமாக சிறப்பான ஜனங்களாகவும், தமக்குக் கீழ்ப்படிகிற மக்களாகவும் தெரிந்தெடுத்தார்.**
2. **அவர்களை இஸ்ரவேல் தேசத்துக்குக் கொண்டுவந்து, பின்பு அவர்களுக்கு ஒரு ராஜாவைக் கொடுத்தார்.**
3. **அவர்கள் இரண்டு தனி ராஜ்யங்களாகப் பிரிந்து, ஒன்று இஸ்ரவேல் என்றும், மற்றது யூதேயா என்றும் அழைக்கப்பட்டது.**
4. **இஸ்ரவேலும் யூதேயாவும் சிறைப்பிடிக்கப்பட்டு அந்நிய தேசங்க ளுக்குக் கொண்டுப்போகப்பட்டார்கள்.**
5. **யூதர்கள் 70 ஆண்டுகளுக்குபின்பு தங்களுடைய சொந்த நாட்டிற்குத் திரும்பி வந்தார்கள். அடுத்த பாடத்தில் நாம் பார்க்கப்போகிறபடி, இயேசு அவர்கள் நடுவில் பிறக்கும்போது அவர்கள் இருந்தார்கள்.**

**தயவுசெய்து இந்தப் புத்தகத்தின் பக்கம் 97-ல் காணும் இந்தப் பாடங்களுக்குச் சம்பந்தப்பட்ட கேள்வி/விடைத்தாளுக்குச் சென்று, "ஆசிரியர் பிரதி"யை எங்களிடம் அனுப்பி வையுங்கள்.**

இது கிறிஸ்டடெல்ஃபியன் வேதாகம சங்கத்தாரால் இலவசமாக வெளியிடப்பட்டது.

**பாடம் எண்.7**

# *இஸ்ரவேல் மக்கள் எவ்வாறு தேவத் திட்டம் - 2-ல் பொருந்துவார்கள்*

**வார வாசிப்புகள்: ஆதியாகமம், அதிகாரங்கள் 21-23,**
**லூக்கா, அதிகாரங்கள் 22-24.**
**பாட வாசிப்புகள்: உபாகமம், அதிகாரம் 28,**
**சகரியா, அதிகாரம் 8.**

**பழைய மற்றும் புதிய ஏற்பாடுகளின் மத்தியில்.**

யூதர்கள் 70 ஆண்டுகள் சிறையிருப்புக்குப் பின்பு பாபிலோனிலிருந்து இஸ்ரவேல் தேசத்திற்குத் திரும்பினார்கள். தீர்க்கதரிசிகள் ஊக்கமூட்டி, எருசலேமில் தேவனுடைய ஆலயத்தைத் திரும்பக் கட்டினார்கள். பழைய ஏற்பாட்டின் கடைசி மூன்று புத்தகங்களான ஆகாய், சகரியா மற்றும் மல்கியா இந்த நாட்களில் எழுதப்பட்டது.

அதற்குப் பின்பு நீண்ட 400 ஆண்டுகளாக தேவனிடமிருந்து நேரடியான செய்திகள் ஒன்றும் அவர்களுக்கு வரவில்லை. தீர்க்கதரிசியான ஆமோஸ் இந்தக் காலத்தைக் குறித்து ஏற்கனவே முன்குறித்திருந்தான். ***ஆமோஸ் 8:11*** இவ்வாறு கூறுகிறது, ***"இதோ, நான் தேசத்தின்மேல் பஞ்சத்தை அனுப்பும் காலம் வரும்; ஆகாரக்குறைவினால் உண்டாகிய பஞ்சமல்ல, ஜலக்குறைவி னால் உண்டாகிய தாகமுமல்ல, கர்த்தருடைய வசனம் கேட்கக் கிடையாத பஞ்சத்தை அனுப்புவேன்".***

இந்த 400 ஆண்டுகளின் காலம் பழைய ஏற்பாட்டின் கடைசி புத்தகத்திற்கும், புதிய ஏற்பாட்டின் முதல் புத்தகத்திற்கும் மத்தியில் வந்தது. யோவான் ஸ்நானகன் தோன்றின போது ஜனங்கள் மத்தியில் ஒரு பெரிய கிளர்ச்சி உண்டானதில் ஆச்சரியம் ஒன்றுமில்லை. அனேக நூற்றாண்டுகளின் அமைதிக்குப் பின்பு, மீண்டும் தேவன் தமது ஜனங்களிடம் பேச ஆரம்பித்தார்.

**மகா பெரிய யூதன்**

ஆனால் யோவான் ஸ்நானகன் தன்னைவிட பெரியவர் ஒருவருக்கென்று வழியை ஆயத்தப்படுத்தும்படி தேவனால் அனுப்பப்பட்டிருந்தான். தேவன் தம்முடைய ஜனங்களை இரட்சிக்கும்படி தமது சொந்த குமாரனை அனுப்பப் போவதாக இருந்தார். எனவே இஸ்ரவேல் தேசத்தில் 2000 ஆண்டுகளுக்கு முன்பு கர்த்தராகிய இயேசு கிறிஸ்து பிறந்தார். இயேசுவும் ஒரு யூதன் என்பதை நாம் சிலவேளைகளில் மறந்து போகிறோம்.

என்ன சம்பவித்தது என்பதை நீங்கள் அறிவீர்கள். அவருடைய வார்த்தைக ளைக் கேட்டு, அவர் செய்த அற்புதங்களைப் பார்த்தபின்பு இயேசுவை யூதர் கள் தள்ளிவைத்தனர். அவரை சிலுவையில் அறையும்படி பிலாத்துவை வற் புறுத்தினார்கள். ***"இந்த நீதிமானின் இரத்த பழிக்கு நான் பாத்திரன் அல்ல"*** என்று பிலாத்து கூறினதற்கு யூதர்கள் பிரதியுத்தரமாக, ***"இவனுடைய இரத்தப்பழி எங்கள் மேலும் எங்கள்பிள்ளைகள்மேலும் இருப்பதாக" (மத்தேயு 27:24-25).*** என்றனர்.

அவர்கள் இதைவிட மோசமான எந்தக் குற்றத்தையும் செய்திருக்க முடியாது. அவர்கள் தேவனுடைய ஒரேபேறான குமாரனின் குற்றமற்ற இரத்தத்தைச் சிந்தினார்கள். எனினும் அப்போஸ்தலர்களுடைய வல்லமையான பி'ரசங்கத் தைக்கொண்டு தேவன் அவர்களுக்கு மற்றொரு வாய்ப்பைக் கட்டளை யிட்டார். அவர்களில் பெரும்பாலானோர் தேவனுடைய கிருபையை ஏற்க மறுத்ததின்மூலம் அவர்கள்மேல் தண்டனை வருவதாயிருந்தது. அது மிகக் கொடியதாக இருந்தது!

**தங்கள் வீடுகளை இழந்த ஜனங்கள்**

ரோம பட்டாளம் **40** ஆண்டுகளுக்குப்பிறகு அவர்களுக்கும் அவார்கள் பிள்ளை ளுக்கும் விரோதமாக யுத்தம் செய்தனர். ***("அவருடைய இரத்தப்பழி எங்கள் மேலும், எங்கள் பிள்ளைகள்மேலும் இருப்பதாக"*** என்று அவர்கள் கூறினது உங்களுக்கு நினைவிருக்கலாம்") யூதர்களுக்கு அந்தக் காலமானது மிகக்கொடிய பாடுகள் உள்ளதாக இருந்தது. அந்த யுத்தத்தின் பயங்கரங்கள் சரித்திரத்தில் இன்னும் அழியாதவைகளாக உள்ளன. அந்த நகரம் ரோமர்களால் பிடிக்கப்பட்டது. அதிலி ருந்து தப்பின யூதர்கள் பூமியின் சகல ஜாதிகளின் மத்தியிலும் சிதறடிக்கப்பட்டனர்.

யூதர்கள் தேவனுடைய வழிகளைக் கைவிட்டால் இவ்வாறு சம்பவிக்கும்என்று, நீண்ட நாட்களுக்கு முன்பு தேவனால் எச்சரிக்கப்பட்டிருந்தனர். இதை நீங்கள்

***உபாகமம் 28:64***-ல் வாசித்திருப்பீர்கள். ***"கர்த்தர் உன்னைப் பூமியின் ஒருமுனைத் துவக்கி பூமியின் மறுமுனை மட்டும் எல்லா ஜாதிகளுக்குள்ளும் சிதறடிப்பார்;"***

இவ்வாறு ஏறக்குறைய **2000** ஆண்டுகளாக யூதர்களுக்குச் சொந்ததேசம் ஒன்று இல் லாதிருந்தது. இதைவிடமோசமாக அவர்கள் அநேக பயங்கரமான உபத்தி ரவங்களை அனுபவித்தனர். மேலும் உபாகமத்தில் கூறப்பட்ட பயங்கரமான சாபங்களுக்குள்ளா னார்கள். இந்த உபத்திரவங்களில் சில இன்னும் நினைவிலிருந்து அகலமுடியாத சம்பவங்களாக நீடிக்கின்றன.

நம்மில் அனேகருக்கு, ஹிட்லரின் கொடுமைகள் நிறைந்த முகாம்களைக் குறித்து நினைவிருக்கும். அவற்றில் கூ0 இலட்சம் யூதர்கள் கொடூரமாக கொல்லப்பட்டது உலகத்தையே உலுக்கிற்று. உபாகமம் உஅ:கூச-கூஎ-ஐ படியுங்கள். ஏறக்குறைய ௩000 ஆண்டுகளுக்கு முன் மோசேயால் எழுதப்பட்ட இந்த வார்த்தைகள் நமது காலத்தில் நிறைவேறினதைக் குறித்து நீங்கள் ஆச்சரியமடைவீர்கள்.
இது ஒரு துக்கமான கதை. அது இன்னும் முடிவுக்கு வரவில்லை! ஆனாலும் தேவனுடைய வார்த்தையை நாம் வாசிக்கும்போது அதன் முடிவு சந்தோஷமாய் இருக்குமென்று நாம் மகிழ்ந்தேயாக வேண்டும்.

**இறுதியில் தங்கள் சொந்த தேசத்துக்கு மீண்டும் திரும்புதல்**
உங்கள் வேதாகமத்தை எரேமியா 30:11-க்குத் திருப்புங்கள். தேவன் யூதர்களுக்குக் கொடுத்த வார்த்தைகளை வாசியுங்கள், "உன்னை இரட்சிப்பதற்காக நான் உன்-னோடே இருக்கிறேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்; உன்னைச் சிதறடித்த எல்லா ஜாதிகளையும் நான் நிர்மூலமாக்குவேன்; உன்னையோ நான் நிர்மூலமாக்காமலும், முற்றிலும் தண்டியாமல் விடாமலும், மட்டாய் தண்டிப்பேன்"

மறுபடியும் எரேமியா 31:10-11-ஐ வாசியுங்கள், "..இஸ்ரவேலைச் சிதறடித்தவர் அதைச் சேர்த்துக்கொண்டு, ஒரு மேய்ப்பன் தன் மந்தையைக் காக்கும்வண்ணமாக அதைக் காப்பார். கர்த்தர் யாக்கோபை மீட்டு, அவனிலும் பலத்தவனுடைய கைக்கு அவனை நீங்கலாக்கி விடுவிக்கிறார்"

இப்பொழுது ஏறக்குறைய 2000 ஆண்டுகள் சென்றப்பின், தேவன் இஸ்ரவேல் ஜனங்களைக் கூட்டிச் சேர்த்துக்கொண்டு வருகிறார். 1917-ல் பால்பர் பிரகடனம் கையெழுத்திடப்பட்டது. இது ஒரு வாக்குத்தத்தமாக, பிரித்திஷ் ராஜ்யம் பாலஸ்தீனா (இப்போது இஸ்ரவேல் என்று அழைக்கப்படுகிறது) தேசத்தை உருவாக்கவேண்டும், அது யூதா ஜனங்களின் சொந்த நாடாக இருக்கவேண்டும் என்று அமைந்தது!

அதுமுதல், யூதர்கள் பெருங்கூட்டமாக இஸ்ரவேல் தேசத்துக்குத் திரும்பிக்கொண்டு இருக்கிறார்கள். ஆனால் இங்கிலாந்து தேசம் தான் கொடுத்த வாக்குப்படி எப்போ தும் அவர்களுக்கு உதவியாக இருக்கவில்லை.

ஒரு படி முன்னேற்றமாக, 1948-.ல் இஸ்ரவேல் ஒரு தேசமாக உருவாக்கப்பட்டு பிரகடனம் செய்யப்பட்டது.

**எருசலேம் - உலகத்தின் எதிர்கால தலைநகரம்**

இன்று மத்திய கிழக்கு நாடுகளில் குழப்பம் நிலவி வருகிறது. மிகச்சிறிய தேசமான யூத நாடு தனது நிலையைப் பாதுகாக்கும்படி அனேக பெரிய தாக்குதல்களைச் சமாளித்து வருகிறது. இப்பொழுதும் கூட அதைச் சுற்றியுள்ள சக்தி வாய்ந்ததும், பலத்த ஆயுதங்களையும் கொண்ட சத்துருக்களின் நிமித்தம், அந்த தேசத்தின் எதிர்காலம் கேள்விக்குறியாக உள்ளது.

sஆனால் எரேமியா 30:7-ல் நாம் வாசிக்கிறோம், “அது யாக்கோபுக்கு இக்கட்டுகாலம்; ஆனாலும் அவன் அதற்கு நீங்கலாகி இரட்சிக்கப்படுவான்”

ஆனால் அந்த கடைசி யுத்தநாள் வரும்போது - நமது தினசரி பத்திரிகைகளில் வாசிக்கிறபடி அது வெகுதூரத்தில் இல்லை இஸ்ரவேலில் வசிக்கிற யூதர்களின் நிலைமைக் கவலைக் கிடமாக மாறும்.

அந்த வேளையில் கர்த்தராகிய இயேசு திரும்ப வருவார். அவர் வந்து இஸ்ரவேல் தேசத்தை இரட்சிப்பார். முடிவில் யூதர்கள் அவரை அடையாளம் கண்டுகொண்டு அவரை ஏற்றுக்கொள் வார்கள். சகரியா தீர்க்கதரிசி இதைப்பற்றி கூறுகிறான், “அவர்கள் தாங்கள் குத்தினவரை நோக் கிப் பார்த்து, ஒருவன் தன் ஒரே பேறானவனுக்காகப் புலம்புகிறது போல, எனக்காக புலம்பி, “ (சகரியா 12:10).

இயேசு ராஜாவின் அரசாட்சியின் கீழ், யூதர்கள் உலகிலேயே மிகவும் உயர்த்தப்பட்ட ஜனங்களாக இருப்பார்கள் என்பதை சகரியா 8-22-23-ல் கூறப்பட்டது நிறைவேறும். “அநேக ஜனங்களும், பலத்த ஜாதிகளும் எருசலேமிலே சேனைகளின் கர்த்தரைத் தேடவும், கர்த்தரு டைய சமூகத்தில் விண்ணப்பம் பண்ணவும் வருவார்கள். அந்நாட்களில் பலவித பாஷைக்காரராகிய புறஜாதியாரில் பத்து மனுஷர் ஒரு யூதனுடைய வஸ்திரத்தொங்களைப் பிடித்துக்கொண்டு தேவன் உங்களோடே இருக்கிறார் என்று கேள்விப்பட்டோம்; ஆகையால் உங்களோடேகூடப் போவோம் என்று சொல்லி, அவனைப் பற்றிக்கொள்வார்கள்”.

## இந்தச் சிறிய பட்டியல் உங்களுக்கு உதவக்கூடும்

### 1. 3,500 ஆண்டுகளுக்கு முன்

தேவன் யூதர்களை எகிப்திலிருந்து வெளியே கொண்டு வந்தார். அவர்கள் வாசிப்பதற்காக இஸ்ரவேல் தேசத்தை அவர்களுக்குக் கொடுத்து, தமது வழிகளை அவர்களுக்குப் போதித்தார்.

**2. யூதர்கள் தேவனுடைய வழிகளைக் கைவிட்டனர்.**

தாங்கள் ஜீவிக்கும்படி தேவன் எவ்வாறு விரும்பினார் என்பதை, தங்களைச் சுற்றியுள்ள ஜனங்களுக்குத் தெரிவிப்பதற்குப் பதிலாக, அந்தப் பொல்லாத ஜாதிகளின் வழிகளைப் பின்பற்றினார்கள்.

**3. 2500 ஆண்டுகளுக்கு முன்பு**

இறுதியில், அவர்களைச் சிறையிருப்புக்கு அனுப்புவதன் மூலம் அவர்களைத் தண்டித்தார். 70 ஆண்டுகளுக்குப் பின்பு, தென் ராஜ்யமாகிய யூதா இஸ்ரவேல் தேசத்துக்குக் கொண்டு வரப்பட்டார்கள். ஆனால் அவர் தொடர்ந்து தேவனுக்குக் கீழ்ப்படியாமற் போனார்கள்.

**4. 2000 ஆண்டுகளுக்கு முன்பு**

இயேசுவின் சிலுவை மரணத்தைத் தொடர்ந்து யூதர்கள் தங்கள் தேசத்திலிருந்து விரட்டப்பட்டார்கள். ஏறக்குறைய 2000 ஆண்டுகளாக அவர்கள் வீடுகளை இழந்து துன்புறுத்தப்பட்டனர்.

**5 இன்று**

தேவன் அவர்களை மீண்டும் இஸ்ரவேல் தேசத்துக்குக் கொண்டு வந்துக்கொண்டிருக்கிறார். உபாகமம் 28:14-ன் படி தேவன் அவர்களை எல்லா ஜாதிகளுக்கும் மேலாக உயர்த்துவார், “*கர்த்தர் உன்னை வாலாக்காமல் தலையாக்குவார்*”.

இது கிறிஸ்டடெல்ஃபியன் வேதாகம சங்கத்தாரால் இலவசமாக வெளியிடப்பட்டது.

**பாடம் எண்.8**

# *ஜீவனைக் கொண்டுவர முடியாத ஒரு நியாயப்பிரமாணம்*

**வார வேதவாசிப்புகள் -ஆதியாகமம், அதிகாரங்கள் 27-29**
**1.தீமோத்தேயு, அதிகாரங்கள் 1- 3**
**பாட வாசிப்பு: எபிரெயர், அதிகாரங்கள் 9-10.**

**நமக்கு நியாயப்பிரமாணம் தேவை**

நமது சலசலப்பு நிறைந்த நகர வீதிகளில் காரோட்டுநர்கள் பிறரைக் கவனியாமல், தங்கள் இஷ்டப்படி அங்குமிங்கும் வாகனத்தை ஒட்டினால், என்ன சம்பவிக்கும் என்பதை எப்போதாவது நினைத்துப் பார்த்திருக்கிறீர் களா? வெகுசீக்கிரத்தில் அநேக பயங்கரமான விபத்துக்கள் நடைபெறும்.

நகரங்களிலும், கிராமங்களிலும் ஒன்றாக வசிக்கிற ஆண்களும் பெண்களும் எதைச் செய்தாலும், அவர்களுக்கு சட்டங்கள் இருந்தேயாக வேண்டும். அவர்களுக்கு நல்ல சட்டங்கள் தேவைப்படுவதுடன் அந்தச் சட்டங்களைக் கைக்கொள்ளுகிறதைக் கவனிக்கும்படி யாராவது இருந்தாக வேண்டும்.

**மோசேயின் நியாயப்பிரமாணம்**

நீங்கள் எல்லாரும் எவ்வாறு தேவன் யூதர்களை எகிப்திலிருந்து வெளியே கொண்டு வந்தார் என்றும், அவர்கள் வசிக்கும்படி இஸ்ரவேல் தேசத்தை எவ்வாறு அவர்களுக்குக் கொடுத்தார் என்றும் அறிவீர்கள். மேலும் பாடம் 6-ல் எவ்வாறு அவர்களுக்கு அவர் ராஜாவாக இருந்தார் என்பதையும் அவர்களுக்கு எவ்வாறு கட்டளைகளைக் கொடுத்தார் என்பதையும் நீங்கள் நினைவுகூரு வீர்கள்.

நாம் வழக்கமாக இந்தக் கட்டளைகளை "மோசேயின் நியாயப்பிரமாணம்" என்று அழைக்கிறோம். ஏனெனில் தேவன் முதலில் அவற்றை மோசேக்குக் கொடுத்தார். பின்பு மோசே ஜனங்களுக்கு அதை அறிவித்தான். ஏறக்குறைய எல்லாரும் மோசே

நியாயப்பிரமாணத்தின் இந்த முக்கிய வார்த்தைகளைக் கேட்டனர். அது "பத்து கட்டளைகள்" என்று அழைக்கப்பட்டது. அவற்றின் நடுவே ஓய்வுநாளின் கட்டளையும் இருந்தது.

**தேவனால் கொடுக்கப்பட்ட ஒரு கட்டளை**

மோசேயின் நியாயப்பிரமாணம் தேவனால் கொடுக்கப்பட்டதால், அவை மனிதர் உண்டாக்கக்கூடிய கட்டளைகளைவிட மிக வித்தியாசமானது.. இந்த வெவ்வேறு கட்டளைகளை இரண்டு விதமாக பிரிக்கலாம்.

ஆனாலும் இவற்றைத் தவிர வேறு கட்டளைகளும் இருந்தன. அவைகள் ஜனங்கள் தேவனிடம் எப்படி நடந்துக்கொள்ளவேண்டும் என்ற கூறின அநேக கட்டளைகளும் இருந்தன,

தேவனிடம் ஜனங்கள் தங்கள் பாவங்களை மன்னிக்கும்படியாகவும், அல்லது தங்களுடைய துதி ஸ்தோத்திரங்களை ஏறெடுக்கும்படியாகவும் வரும்பொழுது ஒரு மிருகத்தை வழக்கமாக ஒரு ஆட்டையோ, அல்லது ஒரு வெள்ளாட் டையோ - கொண்டுவந்து அதைக் கொல்லவேண்டும்.

மிருகத்தைப் பலியிடுவது யூதர்களுக்குத் தாங்கள் பாவிகள் என்றும் அதினி மித்தம் தாங்கள் மரிக்கவேண்டும் என்றும் நினைப்பூட்டும்படி இருந்தன. மேலும் அவர்களுக்கு தாங்கள் தெரிந்துக்கொண்டவழியில் அல்லாமல், தேவன் தங்களுக்குக் கட்டளையிட்டவழியில் அவரைத் தொழுதுகொள்ள வேண்டும் என்பதை நினைப்பூட்டும்படி இருந்தன.

**நியாயப்பிரமாணம் கடைப்பிடிக்க கடினமாக இருந்தது.**

மோசேயின் நியாயப்பிரமாணம் தேவனால் கொடுக்கப்பட்ட படியால், அது மிகவும் நன்மையான பிரமாணமாக இருந்தது. இதைக் குறித்து பவுல் கூறுகிறது, ***"ஆகையால் நியாயப்பிரமாணம் பரிசுத்தமுள்ளதுதான்; கற்பனை யும் பரிசுத்தமாயும் நீதியாயும் நன்மையாயும் இருக்கிறது" (ரோமர் 7:12).***

ஆனால் மனிதர்கள் சுபாவத்தின்படி நல்லவர்கள் அல்ல. அநேக யூதர்கள் நியாயப்பிரமாணத்தைக் கைக்கொள்ள முயற்சி செய்யவில்லை. அப்படி முயன் றவர்களுக்கும் முடியாமற் போயிற்று. அவர்கள் எவ்வளவாய் கற்பனைகளைக் கைக்கொள்ள முயன்றார்களோ, அவ்வளவாக தாங்கள் பாவிகள் என்பதை உணர்ந்தார்கள்.

மோசேயின் நியாயப்பிரமாணம் ஜனங்களை ஆளும்படி தேவைப்பட்டது என்று நாம் ஏற்கனவே கண்டோம்.

ஆனால் அது வேறொன்றை அதற்குப் பதிலாக செய்தது. அவர்கள் தாங்கள் பாவிகள் ஆனதினிமித்தம் தேவனுடைய கட்டளைகளைக் கைக்கொள்ள முடியாது என்று உணர்ந்தனர். தாங்கள் பாவிகளானபடியால். மரிக்கவேண்டி யவர்கள் என்று அறிந்தனர்.

***ரோமர் 3:19***-ல் பவுல் கூறுகிறான், ***"மேலும், வாய்கள் யாவும் அடைக்கப்படும் படிக்கும், உலகத்தார் யாவரும் தேவனுடைய ஆக்கினைத்தீர்ப்புக்கு ஏதுவானவர்கள் ஆகும்படிக்கும், நியாயப்பிரமாணம் சொல்லுகிறதெல்லாம் நியாயப்பிரமாணத்துக்கு உட்பட்டிருக்கிறவர்களுக்கே சொல்லுகிறது என்று அறிந்திருக்கிறோம்"***

**ஒரு நல்ல வழி**

மனிதர்கள் பாவிகள் என்றும் அவர்கள் மரிக்கவேண்டியவர்கள் என்றும் நியாயப்பிரமாணம் போதிக்கிறது. அவர்கள் பாவங்களிலிருந்து அவர்களை இரட்சிக்கும்படி யாராவது ஒருவர் தேவைப்பட்டார்.

நியாயப்பிரமாணம் அவர்களை இரட்சிக்க முடியாமற்போயிற்று -அது அவர்களது பாவத்தன்மையை மாத்திரம் சுட்டிக்காட்ட முடிந்தது. எனவே தேவன் தமது அன்பினால் நன்மையான ஒன்றை அவர்களுக்குக் கொடுத்தார். தேவன் தமது சொந்த குமாரனாகிய இயேசுவை பாவங்களுக்குப் பலியாகக் கொடுத்தார். அதைக்குறித்து ***சங்கீதம் 40:6-8***-ல் நாம் வாசிக்கிறோம்.

***"பலியையும் காணிக்கையையும் நீர் விரும்பாமல், என் செவிகளை திறந் தீர்; சர்வாங்க தகனபலியையும் பாவநிவாரணபலியையும் நீர் கேட்க வில்லை. அப்பொழுது நான், இதோ, வருகிறேன், புஸ்தகச்சுருளில் என்னைக்குறித்து எழுதியிருக்கிறது; என் தேவனே, உமக்குப் பிரியமா னதைச் செய்ய விரும்புகிறேன்; உமது நியாயப்பிரமாணம் என் உள்ளத் திற்குள் இருக்கிறது என்று சொன்னேன்".***

இயேசு எப்பொழுதும் தேவனைப் பிரியப்படுத்துகிற காரியங்களையே செய்தார். நமது நிமித்தம் அவர் தம்மையே பரிபூரண பலியாக ஒப்புக் கொடுத்தார்.

நாம் தேவனைத் தொழுதுக்கொள்ள வரும்போது எந்த மிருகத்தையும் பலியாகக் கொண்டுவர வேண்டியதில்லை.

***நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன்; என்னாலேயல்லா மல் ஒருவனும் பிதாவினிடத்தில் வரான்" (யோவான் 14:6)*** என்று கூறின இயேசுவின்மூலமாக நாம் தேவனிடத்தில் வரவேண்டும்.

**நியாயப்பிரமாணத்திலிருந்து நமக்குப் பாடங்கள்**

நியாயப்பிரமாணமானது உண்மையுள்ள யூதர்களைக் கிறிஸ்துவிடம் வழி நடத்துகிறது. ஏனென்றால், அவர்கள் தாங்களாக எவ்வளவு நம்பிக்கையற்ற வர்களும், உதவியற்றவர்களுமாய் இருக்கிறார்கள் என்பதை அது அவர்க ளுக்குக் காட்டினது. இது ஆண்களுக்கும் பெண்களுக்கும் கற்றுக்கொள்ள ஒரு கடினமான பாடம். என்றாலும் நாமும்கூட தேவனிடம் வந்து அவருடைய உதவியைக் கேட்கும் முன்பாக கற்றுக்கொள்ள வேண்டும்.

மோசேயின் நியாயப்பிரமாணம் இதில் நமக்கு உதவமுடியும். நாம் யூதர்களைவிட நல்லவர்கள் அல்ல. அவர்கள் செய்ததைப்போல நாமும் தவறியிருக்கிறோம். தேவன் பரிசுத்தர் என்றும், நாம் பாவிகள் என்றும் ஒரு பெரிய பாடத்தை அது நமக்குப் போதிக்கமுடியும். அவர் நமக்கென்று தெரிந்தெடுத்த வழியாகிய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து மூலமாய் மாத்திரம் நாம் தேவனிடம் கிட்டிச்சேர முடியும்.

மோசேயின் நியாயப்பிரமாணத்தை ஒரு அங்கமும் விடாமல் அதைக் கைக்கொள்ள வேண்டுமென்று நம்மிடம் தேவன் எதிர்பார்ப்பதில்லை. ஆனால் அவர் அதை நமக்கென்று வேதாகமத்தில் பாதுகாத்து வைத்துள்ளார். அதை வாசித்து அதைக் குறித்து சிந்தித்தால் அவருடைய வழிகளைக் குறித்து அதிகமாய் நாம் கற்றுக்கொள்ள முடியும்.

பாடப்பொருள்

1. மோசேயின் நியாயப்பிரமாணம் தேவனால் யூதர்களுக்குக் கொடுக்கப்பட்ட ஒரு கட்டளையாகும்.
2. அது அவர்களுடைய அனுதின ஜீவியத்திற்கடுத்த சட்டங்களைக் கொண்டுள்ளதாய் இருந்தது. அவர்கள் எவ்வாறு தேவனை தொழுதுக்கொள்ள வேண்டும் என்று அவர்களுக்குப் போதித் தது.
3. நியாயப்பிரமாணம் நல்லதுதான், ஆனால் ஜனங்கள் பொல்லாதவர்களாய் இருப்பதினால் அதைக் கைக்கொள்ள முடியவில்லை.
4. தேவன் கிறிஸ்துவில் ஒரு புதிய வழியை உண்டாக்கினார்.
5. மோசேயின் நியாயப்பிரமாணம் வேதாகமத்திலுள்ள புத்தகங்க ளான யாத்திராகமம், லேவியராகமம், எண்ணாகமம், மற்றும் உபாகமத்தில் உள்ளது. நாம் இன்றும் படிக்கக்கூடிய அநேக விஷயங்கள் அதில் உள்ளது.

தயவுயெ்து இந்தப் புத்தகத்தின் பக்கம் 98-ல் காணும் இந்தப் பாடங்களுக்குச் சம்பந்தப்பட்ட கேள்வி/விடைத்தாளுக்குச் சென்று, “ஆசிரியர் பிரதி”யை எங்களிடம் அனுப்பி வையுங்கள்.

**இது கிறிஸ்டடெல்ஃபியன் வேதாகம சங்கத்தாரால் இலவசமாக வெளியிடப்பட்டது.**

**பாடம் எண்.9**

## *ஆபிரகாமுக்கு தேவனுடைய வாக்குத்தத்தங்கள்*

**வார வாசிப்புகள் ஆதியாகமம் அதிகாரங்கள் 30-32,**
**1.தீமோத்தேயு அதிகாரங்கள் 4- 6.**
**பாட வாசிப்புகள் ஆதியாகமம் அதிகாரம் 13,**
**கலாத்தியர், அதிகாரம் 3.**

இயேசு பிறப்பதற்கு 2000 ஆண்டுகளுக்குமுன்பு ஆபிரகாம் எனும்பெயர் கொண்ட ஒரு மனிதன் இருந்தான். வேதாகமத்தில் அவன் ***"தேவனுடைய நண்பன்" என்று அழைக்கப்பட்டான் (ஏசாயா 41:8)*** அவன் இஸ்ரவேல் தேசத்துக்குள் கிழக்குப் பகுதியில் சுமார் 800 மைல்களுக்கு அப்பால் ஒரு தேசத்திலுள்ள ஊர் என்னும் பட்டணத்தில் வசித்து வந்தான். அந்த தேசம் இப்போது ஈராக் என்று அழைக்கப்படுகிறது.

அந்த **ஊர்** பட்டணத்திலுள்ள ஜனங்களுக்கு உண்மையான தேவனை பற்றி ஒன்றுமே தெரியாது. அவர்கள் அனேக போலியான தேவர்களை வணங்கி வந்தார்கள். அவற்றில் முக்கியமாக சந்திரனை தெய்வமாக வணங்கி வந்தார் கள். சந்திரனைப் பூஜித்த ஒரு விக்கிரகக் கோவிலின் இடிபாடுகள் கண்டெடுக் கப்பட்டன.

### தேவனிடமிருந்து ஒரு செய்தி

ஆபிரகாம் தேவனிடமிருந்து ஒரு செய்தியைப் பெற்றான். அந்தச் செய்தியின் விவரத்தை ***ஆதியாகமம் 12:1***-ல் வாசிக்கலாம், ***"தேவன் ஆபிரகாமை நோக்கி: நீ உன் தேசத்தையும், உன் இனத்தையும் உன் தகப்பனுடைய வீட்டைவிட்டு புறப்பட்டு, நான் உனக்குக் காண்பிக்கும் தேசத்துக்குப் போ"***.

அவன் தனது தேசத்தையும், சொந்த ஜனத்தையும்விட்டு வெளியேறும்படி அழைக்கப்பட்டான். தேவன் தனக்குக் காண்பிக்கும் ஒரு தேசத்துக்கு அவன் போகவேண்டியிருந்தது. நாம் அப்படி ஒரு

செய்தியைப் பெற்றிருந்தால் என்ன செய்திருப்போம்? (அந்த நாட்களில் அவ்வளவு தூரம் பிரயாணஞ்செய்வது மிகவும் சிரமமாயும் அதிக ஆபத்துகள் நிறைந்ததாயும் இருந்தது).

***தேவன் ஆபிரகாமிடம் இவ்விதமாய் செய்யும்படி கூறினபோது, அவர் அவனிடம் மேலும் கூறினார், "நான் உன்னைப் பெரிய ஜாதியாக்கி, உன்னை ஆசீர்வதித்து, உன் பேரைப் பெருமைப்படுத்துவேன்; நீ ஆசீர்வாதமாய் இருப்பாய் இருப்பாய். உன்னை ஆசீர்வதிக்கிறவர்களை ஆசீர்வதிப்பேன், உன்னைச் சபிக்கிறவனைச் சபிப்பேன்; பூமியிலுள்ள வம்சங்களெல்லாம் உனக்குள் ஆசீர்வதிக்கப்படும்" (ஆதியாகமம் 12:2-3).***

ஆபிரகாம் தேவன் கொடுத்த வாக்குத்தத்தத்தை நம்பி, அவருக்குக் கீழ்ப்படிந் தான். எபிரெயருக்கு எழுதின ஆசிரியர் கூறுகிறபடி, ***"விசுவாசத்தினாலே ஆபிரகாம் தான் சுதந்திரமாகப் பெறப்போகிற இடத்திற்குப் போகும்படி அழைக்கப்பட்டபோது, கீழ்ப்படிந்து, தான் போகிற இடம் இன்னதென்று அறியாமல் புறப்பட்டுப் போனான்" (எபிரெயர் 11:8)***.

இறுதியாக அவன் தன் மனைவியாகிய சாராளையும், அவனுடைய அண்ணன் மகன் லோத்தையும், அழைத்துக் கொண்டு, இஸ்ரவேல் தேசத்துக்குப் போய் சேர்ந்தான். இப்போது மீண்டும் ஆதியாகமம், அதிகாரம் 13-ஐ வாசியுங்கள். இதில், லோத்து தேசத்தின் செழிப்பான பகுதியை தெரிந்தெடுத்து சென்றான் என்பதையும் ஆபிரகாம் தேசத்தின் வறண்ட பகுதியில் தனது ஆடுமாடுக ளுக்கென்று மேய்ச்சலைத் தேடி அலைந்தான் என்றும் வாசிக்கிறோம். தேவனோ ஆபிரகாமோடு கூட இருந்து, ஊர் பட்டணத்தில் அவனுக்குத் தாம் கொடுத்திருந்த வாக்குத்தத்தத்தை விரிவு படுத்தினார், ***"நீ பார்க்கிற இந்த பூமி முழுவதையும் நான் உனக்கும் உன் சந்ததிக்கும் என்றைக்கும் இருக்கும்படி கொடுத்து, உன் சந்ததியைப் பூமியின் தூளைப்போல பெருகப் பண்ணுவேன்" (ஆதியாகமம் 13:15-16)***.

**ஒரு அருமையான வாக்குத்தத்தம்**

தேவன் இந்த முறை ஆபிரகாமுக்குக் கொடுத்த வாக்குத்தத்தம் கவனித்தீர்க ளா? அதன்படி அவர் அந்த தேசம் என்றென்றைக்கும் அவனுக்குச் சொந்தம ாகும்படி ஆபிரகாம் என்றைக்கும்

ஜீவிக்கவேண்டி இருந்தது. எனவே தேவன் அவனுக்கு உண்மையில் நித்தியஜீவனை வாக்குத்தத்தத்தம் செய்திருந்தார்.

இதுதவிர, தேவன் ஆபிரகாமின் சந்ததிக்கு அல்லது மகனுக்கு வாக்குத்தத் தம் செய்தார். அந்த வேளையில் ஆபிரகாமுக்கும் சாராளுக்கும் பிள்ளையில் லாதிருந்தது. தேவன், அவனோடு தேசத்தைப் பகிர்ந்துக் கொள்ளும்படி ஒரு 'சந்ததி'யை அல்லது மகனைக் கொடுப்பதாக வாக்குத்தத்தத்தம் பண்ணினார். அந்த ஆபிரகாமின் சந்ததி ஒரு பெரிய ஜாதியாக மாறும்.

**தேவன் ஆபிரகாமோடு ஒரு உடன்படிக்கைப் பண்ணினார்**

ஆதியாகமம் அதிகாரம் 15-ஐ பாருங்கள். தேவன் மீண்டும் ஆபிரகாமுக்குக் கொடுத்த வாக்குத்தத்தை இன்னும் விரிவாக்குகிறதை நாம் பார்க்கிறோம்.

நாட்கள் கடந்துச் சென்றன, ஆபிரகாம் முதிர்வயதுள்ளவனானான். இன்னும் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட மகன் கொடுக்கப்படவில்லை. ஆனால் மற்றும் ஒருமுறைகூட அவனுக்கு ஒருமகன் பிறப்பான் என்றும், அவனுடைய சந்த தியார் வானத்தின் நட்சத்திரங்களைப்போல பெருகப்பண்ணுவேன் என்றும் தேவன் உறுதி அளித்தார். ***வசனம் 6***-ல், ***"அவன் கர்த்தரை விசுவாசித்தான்; அதை அவர் அவனுக்கு நீதியாக எண்ணினார்"*** என்று நாம் வாசிக்கிறோம்.

ஆபிரகாம் நம்மைப்போல பாவமற்றவனாய் இருக்கவில்லை. ஆனாலும் அவன் தேவன்மேல் நம்பிக்கை வைத்ததினால், தேவன் அவன்மேல் பிரியமா யிருந்தார். இந்தமுறை தேவன் ஆபிரகாமோடு ஒரு உடன்படிக்கைப் பண்ணி னார். அது ஒருபோதும் மாற்றமுடியாத ஒரு தீர்க்கமான வாக்குத்தத்தமாக இருந்தது. இந்த உடன்படிக்கை எவ்வாறு செய்யப்பட்டது என்பதை ***ஆதி யாகமம் 15:8-18***-ல் நாம் வாசிக்கிறோம். ஆபிரகாமின் காலத்தில் ஒரு மிருகத்தைக் கொல்லுவதின்மூலம் ஒரு உடன்படிக்கைச் செய்யப்பட்டது. பின்பு கொல்லப்பட்ட மிருகம் பிளக்கப்பட்டு, அந்த இரண்டு துண்டுகளி னூடே உடன்படிக்கைச் செய்த இரண்டு பேரும் நடந்தார்கள். ஆனால் விதி விலக்காக தேவன் அந்தத் துண்டுகளின் நடுவே நடக்கவில்லை. அதற்குப் பதிலாக ஒரு அக்கினி ஜீவாலை அவைகளினூடே கடந்துப் போகிறதை ஆபிரகாம் பார்த்தான்.

இந்த உடன்படிக்கை உறுதியானது!

**வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட பிள்ளை**

ஆபிரகாமுக்கு 100 வயதும், அவனுடைய மனைவியாகிய சாராளுக்கு 90 வய தும் ஆனபோது, தேவன் தமது வாக்குத்தத்தை நிறைவேற்றி, ஒரு மகனைக் கொடுத்தார், அவனுக்கு ஈசாக்கு என்று பெயரிட்டார்கள். ***ஆதியாகமம் 22:1-14***-ல் ஆபிரகாம் தேவன்மேல் வைத்த விசுவாசத்தின் ஓர் அருமையான முன்மா திரியைக் காணலாம். தேவன் ஆபிரகாமிடம், அவனுடைய ஒரே பேறான குமார னாகிய ஈசாக்கை தகனபலியாகக் கொடுக்கும்படி கூறினார். எனினும் தேவன் ஆபிரகாமின் சந்ததியாரை ஈசாக்கின்மூலமாக பெரிய ஜாதியாக்கு வேன் என்று வாக்குப்பண்ணி இருந்தார்.

ஆபிரகாம் என்ன செய்தான்? தேவன் தனக்குக் கொடுத்த வாக்குத்தத்தத்தை நிறைவேற்றியே தீருவார் என்று ஆபிரகாம் அறிந்திருந்தான் என்பதை ***எபிரெயர் 11:17-19***-ல் விளக்கமாக பார்க்கிறோம். ***"மேலும் விசுவாசத்தினாலே ஆபிரகாம் தான் சோதிக்கப்பட்டபோது ஈசாக்கைப் பலியாக ஒப்புக் கொடுத்தான். ஈசாக்கினிடத்தில் உன் சந்ததி விளங்கும் என்று அவனோடே சொல்லப்பட்டிருந்ததே; மரித்தோரிலிருந்து எழுப்ப தேவன் வல்லவரா யிருக்கிறார் என்று எண்ணி, தனக்கு ஒரேபேறானவனையே பலியாக ஒப்புக்கொடுத்தான்;;;மதித்தோரிலிருந்து அவனை பாவனையாகத் திரும்பவும் பெற்றுக்கொண்டான்".***

தான் நேசித்த ஒரே குமாரனைத் தேவன் தனக்கு உயிரோடே திரும்பக் கொடுப்பார் என்பதை ஆபிரகாம் அறிந்ததினால், தனது மகனைத் தகனபலி யாகக் கொடுக்கும்படி ஆயத்தமானான். தேவன் அவனுடைய விசுவாசம் மற்றும் கீழ்ப்படிதலிலும் பிரியமாயிருந்தார் என்பதில் எந்த ஆச்சரியமு மில்லை. தேவன் அவனுக்குத் திரும்பவும் கொடுத்த வாக்குத்தத்தைக்குறித்து ***ஆதியாகமம் 22:15-18***-ல் வாசியுங்கள்.

**ஈசாக்கைவிட பெரிய சந்ததி**

இந்தக் காரியங்கள் ஏறக்குறைய 4,000 ஆண்டுகளுக்குமுன்பு, சம்பவித்தன. அவைகள் மிக முக்கியமாக நமக்குத் தோன்றாமற் இருக்கலாம்.

ஆனால் ஆபிரகாமுக்கு ஈசாக்கைவிட பெரியவரான ஒரு மகன் பிறந்தார். புதியஏற்பாட்டின் முதல் வசனம் (***மத்தேயு 1:1***) ***"ஆபிரகாமின் குமாரனாகிய தாவீதின் குமாரனான இயேசுகிறிஸ்து"*** வைக் குறித்துப் பேசுகிறது. இயேசுவும் ஆபிரகாமுக்கு வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட குமாரனாக இருந்தார். பவுல் இதைக் குறித்து கலாத்தியர் 3:16-ல் கூறுகிறான், ***"ஆபிரகாமுக்கும் அவன் சந்ததிக்கும் வாக்குத்தத்தம் பண்ணப்பட்டன; சந்ததிகளுக்கு என்று அனேகரைக் குறித்துச் சொல்லாமல், உன் சந்ததிக்கு என்று ஒருவனைக் குறித்துச் சொல்லியிருக்கிறார், அந்தச் சந்ததி கிறிஸ்துவே"***

எனவே ஆபிரகாம் இஸ்ரவேல் தேசத்திலே என்றென்றும் ஜீவிப்பான் என்றும், அவன் சகல ஜாதிகளுக்கும் ஆசீர்வாதமாயிருப்பான் என்றும் கூறப்பட்ட வாக்குத்தத்தமானது, கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவுக்குள் கொடுக்கப்பட்ட வாக்குத்தத்தமாகும்.

அவர் எருசலேமிலிருந்து ஆளும்படிக்குத் திரும்ப வரும்போது, இந்த வாக்குத் தத்தங்கள் நிறைவேறுகிறதை நாம் பார்ப்போம்.

**நாமும்கூட அந்த வாக்குத்தத்தங்களில் பங்கேற்கலாம்.**

நாம் இயேசுவில் விசுவாசம் வைத்து, அவர் நம்மிடத்தில் கேட்கிறதை நாம் செய்தால், நாமும் அந்த வாக்குத்தத்தங்களில் பங்கு பெறுவோம்.

ஏனெனில் கிறிஸ்துவுக்குச் சொந்தமாய் இருந்தால், ஆபிரகாமின் சந்ததியாக நாமும் இருப்போம். இதை ***கலாத்தியர் 3:29***-ல் வாசிக்கவும், ***"நீங்கள் கிறிஸ்து வினுடையவர்கள் ஆனால், ஆபிரகாமின் சந்ததியாராயும், வாக்குத்தத் தின்படியே சுதந்தரராயும் இருக்கிறீர்கள்".***

அப்படியென்றால், நாமும் வாக்குத்தத்தத்தில் பங்கு பெறுவோம். நாமும் நித்தியஜீவனைப் பெற்று, இயேசுகிறிஸ்துவுக்கு உதவியாக இருந்து, பூமியில் சந்தோஷத்தைக் கொண்டு வருகிற பெரிய பணியில் ஈடுபடுவோம்.

ஏனெனில், நாம் நினைவுகூரவேண்டிய வாக்குத்தத்தங்களில் ஒன்று என்ன வெனில், ***"உன் சந்ததிக்குள் பூமியிலுள்ள சகல ஜாதிகளும் ஆசீர்வதிக்கப் படும்" (ஆதியாகமம் 22:18)***.

இந்த வாக்குத்தத்தத்தம் இயேசுகிறிஸ்து தேவனுடைய ராஜ்யத்தை ஸ்தாபிக் கும்படி திரும்ப வரும்போது நிறைவேறும்.

**ஆபிரகாமைப்பற்றி என்ன?**
ஆனால் நீங்கள் ஒன்றை மனதில் வைக்கவேண்டும், "ஆபிரகாமைப்பற்றி என்ன? அவன் ஒருபோதும் வாக்குத்தத்தத்தைப் பெறாமலேயே மரித்து விட்டானே?"

இது உண்மைதான். ஆனால் தேவனுடைய வாக்குத்தத்தம் ஒருபோதும் தவறாது. இயேசுகிறிஸ்து திரும்ப வரும்போது அவர் ஆபிரகாம் மற்றும் ஈசாக்கு மரித்தோரிலிருந்து எழுப்புவார். அவர்களோடு இன்னும் அனேகரை எழுப்புவார். அவர்கள் எல்லாரும் என்றைக்கும் பூமியின் மேல் ஜீவிப்பார்கள். இத்தனை நாட்களுக்கு முன்பாக தேவன் வாக்குப்பண்ணின ஆசீர்வாதங் களை அவர்கள் சந்தோஷத்தோடு அனுபவிப்பார்கள்.

**பாடப்பொருள்**

1. **ஆபிரகாம் ஊர் பட்டணத்தைவிட்டு அவன் அறியாத தேசத்துக் குப் போகும்படி தேவன் அவனை அழைத்தார்.**
2. **அந்த தேசமானது இஸ்ரவேல்தேசம். அதை ஆபிரகாம் என்-றைக்கும் சுதந்தரிப்பான் என்று தேவன் வாக்குப்பண்ணினார்.**
3. **ஆபிரகாமுக்கு ஒரு மகன் பிறப்பான் என்றும், அவனுடைய சந்ததியார் ஒரு பெரிய ஜாதியாகும் என்றும், அவனுடைய மகன் எல்லா ஜாதிகளுக்கும் ஆசீர்வாதமாக இருப்பான் என்றும் தேவன் ஆணையிட்டார்.**
4. **ஆபிரகாமுக்கு ஒரு மகன் பிறந்தான். அவன் பெற்றோர்கள் முதிர்வயதாயிருக்கும்போது அற்புதமாக ஈசாக்கு பிறந்தான். இயேசுகிறிஸ்துவும்கூட**

**ஆபிரகாமுக்கு ஒரு மகனும், அவனு டைய சந்ததியுமாய் இருந்தார். (அவரும் அற்புதமாகஒரு கன்னி யினிடத்தில் பிறந்தார்).**

5. **நாம் கிறிஸ்துவினுடையவர்களானால், நாமும் ஆபிரகாமின் பிள்ளைகளாக எண்ணப்படுவோம். அவனுக்கு அளிக்கப்பட்ட வாக்குத்தத்தங்களில் நாமும் பங்கு பெறுவோம்.**
6. **இயேசுகிறிஸ்து திரும்ப வந்து தேவனுடைய ராஜ்யத்தை ஸ்தாபிக்கும்போது இந்த வாக்குத்தத்தங்கள் நிறைவேறும்.**

**ஓர் ஆலோசனை**

ஆபிரகாமின் சந்ததியைக் குறித்த இவைகளெல்லாம் முதல் தடவை படிக்கு போது புரிந்துக்கொள்ள சிரமமாக இருக்கும். ஆனால் அது அறிந்துக்கொள் வது மிக அவசியம். எனவே மீண்டும் இந்தப் பாடத்தை இப்பொழுதே படித் துப்பாருங்கள்.

**இது கிறிஸ்டடெல்ஃபியன் வேதாகம சங்கத்தாரால் இலவசமாக வெளியிடப்பட்டது.**

**பாடம் எண் 10**

.........................................................................................................................

# *தாவீதுக்கு தேவனுடைய வாக்குத்தத்தங்கள்*

**வார வாசிப்புகள் ஆதியாகமம், அதிகாரங்கள் 33-35,**
**யாக்கோபு, அதிகாரங்கள் 1- 3.**
**பாடவாசிப்பு, 2.சாமுவேல், அதிகாரம் 7.**

தாவீது ராஜா யூதர்களை அரசாண்ட இரண்டாவது ராஜாவாக இருந்தான். அவன் அனேக சோதனைகள், மற்றும் தீரசெயல்களுக்குப்பின் தாவீது எருச- லேமில் ஒரு அரன்மணையைக் கட்டி, அங்கு தங்கியிருந்து ராஜ்யபாரம் பண்ணினான்.

தாவீது தேவன் தன்னை ஆசீர்வதித்த வழியையும், தேவனுடைய கிருபாசன பெட்டி கூடாரத்தில் தங்குவதை எண்ணிப்பார்த்தான். அதை வைக்கும்படி எருசலேமில் ஒரு அழகான தேவாலயத்தை கட்ட விரும்பினான்.

(அந்தப் பெட்டிக்குள் 10 கற்பனைகள் வைக்கப்பட்டிருந்தது. அதின்மேல் கிருபாசனம் என்று அறியப்பட்ட மூடி வைக்கப்பட்டிருந்தது. அதின்மேல் தேவனுடைய மகிமை பிரகாசித்தது.)

தேவனுடைய தீர்க்கதரிசியாகிய நாத்தானிடம், தான் செய்ய நினைத்ததைத் தாவீது கூறினான். அதற்கு நாத்தான் தாவீதிடம், அப்படியே செய்யும்படி கூறினான். ஆனால் அந்த ராத்திரியிலே தேவன் நாத்தானுக்குத் தரிசனமாகி, தாவீதுக்கென்று ஒரு விசேஷ செய்தியைக் கொடுத்தார்.

**தாவீதுக்கு தேவசெய்தி**

மீண்டும் ***2.சாமுவேல் 7:12-16***-க்கு உங்கள் வேதாகமத்தைத் திருப்புங்கள். தாவீதுக்குத் தேவன் கொடுத்த மிக முக்கிய செய்தி உள்ளது.

அதில், தேவன் தாவீதுக்கு ஒரு மகனை வாக்குத்தத்தம் பண்ணினார். (மீண்டும் "வித்து" என்ற யூத வார்த்தைப் பயன்படுத்தப்பட்டுள்ளது. அதின் அர்த்தம் ஒரு மகன் அல்லது சந்ததி என்பதாகும்).

இந்த வாக்குத்தத்தம்பண்ணப்பட்ட மகனைக்குறித்து, ***"அவன் என் நாமத்திற் கென்று ஒரு ஆலயத்தைக் கட்டுவான்; அவன் ராஜ்யபாரத்தின் சிங்காச னத்தை என்றைக்கும் நிலைக்கப்பண்ணுவேன்" 2.சாமுவேல் 7:13***). என்று தேவன் கூறினார். இது தாவீதின் மரணத்துக்குப் பின்பு, சம்பவிக்கவேண்டியது, ***"உன் நாட்கள் நிறைவேறி, நீ உன் பிதாக்களோடே நித்திரை பண்ணும்போது", இது சம்பவிக்கும். (2.சாமுவேல் 7:12)***

**தாவீதின் குமாரனைப்பற்றி அதிகமாக**

இப்போது தாவீதுக்கு சாலொமோன் என்ற பெயருள்ள ஒரு குமாரன். +இருந்தான். தாவீதுக்குப் பின்பு அவன் எருசலேமை அரசாண்டான். தாவீது இன்னும் ஜீவித்திருக்கும்போதே அவன் ராஜாவாக்கப்பட்டான். ஆனாலும் அவன் என்றைக்கும் அரசாளவில்லை.

இந்த வாக்குத்தத்தம்பண்ணப்பட்ட மகன் மிக விசேஷித்த நபராக இருக்கவேண்டி இருந்தது. ஏனெனில் தேவன் அவனைக் குறித்து கூறினார், ***"நான் அவனுக்குப் பிதாவாயிருப்பேன், அவன் எனக்குக் குமாரனாயிருப்பான்" (2.சாமுவேல் 7:14).***

லூக்கா முதலாம் அதிகாரத்துக்கு உங்கள் வேதாகமத்தைத் திருப்புங்கள். இங்கு ஒரு தேவதூதன் ஒரு இளம்பெண்ணிடம், தாவீது ராஜாவின் சந்ததி யில் பிறந்த ஒருத்தியிடம் வந்து நின்று, அவளுக்கு ஒரு மகன் பிறப்பான் என்று கூறினான்.

இந்த மகன் மற்ற பிள்ளைகளைப்போல பூமிக்கடுத்த ஒரு தகப்பனிடம் பிற வாமல், தேவனுடைய வல்லமையால் பிறக்கவேண்டியிருந்தது. ஏனெனில், இப் படி கூறக்கேட்ட இளம் பெண்ணின் பெயர் மரியாள்.

***"தேவதூதன் அவளுக்குப் பிரதியுத்தரமாக: பரிசுத்த ஆவி உன்மேல் வரும்; உன்னதமானவருடைய பலம் உன்மேல் நிழலிடும்; ஆதலால் உன்னிடத்தில் பிறக்கும் பரிசுத்தமுள்ளது தேவனுடைய குமாரன் என்னப்படும்" (லூக்கா 1:35***)

அந்தத் தேவதூதன் மேலும் மரியாளிடம் கூறினதை, ***"அவர் பெரியவராயிருப் பார், உன்னதமானவருடைய குமாரன் என்னப்படுவார்; கர்த்தராகிய தேவன் அவருடைய பிதாவாகிய தாவீதின் சிங்காசனத்தை அவருக்குக் கொடுப்பார்; அவர் யாக்கோபின் குடும்பத்தாரை என்றென்றைக்கும் அரசாளுவார். அவருடைய ராஜ்யத்துக்கு முடிவிராது" (லூக்கா 1:32-33)***.

இயேசுகிறிஸ்து பிறந்தபோது, தேவன் தாவீதுக்குச் செய்த வாக்குத்தத்தம் எவ்வாறு நிறைவேறினது என்பதை இப்போது நாம் காணமுடியும்.

1. தேவன் அவருடைய பிதா.
2. அவர் என்றைக்கும் அரசாள வேண்டியவர்.

**யூதர்களின் ராஜா**

இயேசு ஒரு ராஜாவாயிருக்க பிறந்தார். இயேசு பிறந்தபோது அவரைத் தொழுதுகொள்ளும்படி வானசாஸ்திகள் வந்தபோது, ***"யூதருக்கு ராஜாவாக பிறந்திருக்கிறவர் எங்கே?"*** என்று கேட்டனர்.

இயேசுவைக் கைதுசெய்து, விசாரணைக்கென்று பிலாத்துவிடம் கொண்டு சென்றபோது, ***"நீர் யூதருடைய ராஜாவா?" என்று அவன் அவரிடம் கேட்டான். அதற்கு இயேசு பிரதியுத்தரமாக, "நீர் சொல்லுகிறபடி தான்" (மாற்கு 15:2)***. யூதர்களுடைய வழக்கப்படி, ***"ஆம், நிச்சயமாக நானே அவர்"*** என்று பதில் அளித்தார்.

ஏற்கனவே நாம் பார்த்தபடி, இயேசுகிறிஸ்து திரும்பவும் இந்த பூமிக்கு யூதரின் ராஜாவாக வந்து தாவீதின் சிங்காசனத்தில் அரசாளுவார்.

**உலகளாவிய ராஜ்யம்**

இயேசு திரும்ப வரும்போது யூதருக்கு மாத்திரம் ராஜாவாக இருக்கப்போவ தில்லை, பூமியின் மீதெங்கும் அரசாளுவார். அவரைப்பற்றி தேவன் கூறுவது, ***"யாக்கோபின் கோத்திரங்களை எழுப்பவும், இஸ்ரவேலில் காக்கப்பட்ட வர்களைத் திருப்பவும், நீர் எனக்குத் தாசனாயிருப்பது அற்பகாரியமா யிருக்கிறது; நீர் பூமியின் கடைசிபரியந்தமும் என்னுடைய இரட்சிப்பா யிருக்கும்படி, உம்மை ஜாதிகளுக்கு ஒளியாகவும் வைப்பேன்" (ஏசாயா 49:6).***

**தாவீதைக்குறித்து என்ன?**

இந்த வாக்குத்தத்தம் நீண்டநாட்களாக நிறைவேறாது என்று தாவீது உணர்ந் திருந்தும், அவன் தேவனிடத்தில் நன்றி மிகுந்தவனாய் இருந்தான். இதைத் தேவன் கூறியிருந்தார், ***"உன் வீடும், உன் ராஜ்யமும், என்றெக்கும் உனக்கு முன்பாக ஸ்திரப்பட்டிருக்கும்" (2.சாமுவேல் 7:16).***

எனவே,: இறுதியில், தாவீதுடைய பெரிய குமாரன், (கர்த்தராகிய இயேசு கிறிஸ்து) எருசலேமில் அரசாளும்போது, அவன் தானும் மரித்தோரிலிருந்து இந்த ராஜ்யத்தின் சந்தோஷங்களில் பங்கெடுக்கத்தக்கதாக எழுப்பப்படுவான் என்றும் அறிந்திருந்தான்.

தேவன் கொடுத்த இந்த தீர்க்கமான வாக்குத்தத்தம், அல்லது உடன்படிக்கை யைத் தாவீது அடிக்கடி நினைவுகூர்ந்தான். இதைக்குறித்து சங்கீதத்தில் கூறி யிருப்பதை நாம் வாசிக்கிறோம். ***"கிருபை என்றென்றைக்கும் ஸ்திரப்பட்டி ருக்கும்; உமது உண்மையை வானங்களிலே ஸ்தாபிப்பீர். என்னால் தெரிந் துக்கொள்ளப்பட்டவனோடே உடன்படிக்கைப்பண்ணி, என் தாசனாகிய தாவீதை நோக்கி: என்றென்றைக்கும் உன் சந்ததியை நிலைப்படுத்தி, தலைமுறைதலைமுறையாக உன் சிங்காசனத்தை ஸ்தாபிப்பேன் என்று ஆணையிட்டேன்" (சங்கீதம் 89:2-4)***.

மேலும் இவற்றைக் குறித்து வேறொரு சங்கீதத்தில் தாவீது இவ்வாறு கூறுகி றான், ***"என் ஆத்துமாவைப் பாதாளத்தில் விடீர், உம்முடைய பரிசுத்தவானை அழிவைக் காணவொட்டீர்" (சங்கீதம் 16:10)***.

இயேசுவானவர் தேவனுடைய பரிசுத்தவானாய் இருந்தார். அவர் "அழிவை" காணவில்லை. தேவன் அவரை மூன்றாம் நாள் மரித்தோரிலிருந்து உயிரோடு எழுப்பினபடியால் அவருடைய சரீரம் அழுகிப்போகவில்லை.

**நாம் இதில் பார்க்கவேண்டிய சில காரியங்கள்**

***எபிரெயர் 11:39-40***-ல் பவுல் இவ்வாறு கூறுகிறான், ***"இவர்களெல்லாரும் விசுவா சத்தினாலே நற்சாட்சி பெற்றும், வாக்குத்தத்தம்பண்ணப்பட்டதை அடையா மற்போனார்கள். அவர்கள் நம்மையல்லாமல் பூரணராகதபடிக்கு விசேஷித்த நன்மையானதொன்றை தேவன் நமக்கென்று முன்னதாக நியமித்திருந்தார்."***

இப்பொழுது ஆபிரகாம் மற்றும் தாவீது மற்றும் விசுவாசிகளான அனேகர் இயேசுகிறிஸ்துவின் நாளில் மீண்டும் எழுப்பப்பட்டு, ***"பரிபூரணம் அடைந்து",*** இயேசுவோடுகூடஜீவித்த அனைவருக்கும் நித்தியஜீவன் அளிக்கப்படும் என்று அறிந்து மரித்தார்கள்.

**ஒரு தங்க வாக்கியம்**

இயேசுகிறிஸ்து ஆபிரகாமின் சந்ததியும், தாவீதின் சந்ததியுமாய் இருக்கிறார் என்று நாம் பார்த்தோம். புதியஏற்பாட்டின் முதல்வசனம் இவ்வாறு ஆரம்பிக் கிறது, ***"ஆபிரகாமின் குமாரனாகிய தாவீதின் குமாரனான இயேசு கிறிஸ்துவின் வம்சவரளாறு" (மத்தேயு 1:1)***. எனவே பழைய ஏற்பாட்டை வாசித்து புரிந்துக்கொண்டிருந்தால் மாத்திரம் புதியஏற்பாட்டின் வசனங்களைப் புரிந்துக்கொள்ள முடியும்.

பாடப்பொருள்

1. **தேவன் தாவீதுக்கு ஒரு குமாரனை வாக்குத்தத்தம்பண்ணினார்.**
2. **இந்த மகன் தேவனுடைய குமாரனாக வேண்டியிருந்தது.**
3. **அவர் தாவீதின் சிங்காசனத்தில் என்றென்றைக்கும் அரசாள வேண்டும்.**
4. **இந்தக் குமாரன் இயேசுவாக இருந்தார்.**
5. **அவர் திரும்ப ஆளும்படி வரும்போது தேவனுடைய அனைத்து விசுவாசிகளுக்கும் பூமியில் நித்தியஜீவன் அளிக்கப்பட்டு அவருடைய ராஜ்யத்தில் பங்கெடுப்பார்கள்.**

**தயவுசெய்து இந்தப் புத்தகத்தின் பக்கம் 99-ல் காணும் இந்தப் பாடங்களுக்குச் சம்பந்தப்பட்ட கேள்வி/விடைத்தாளுக்குச் சென்று, "ஆசிரியர் பிரதி"யை எங்களிடம் அனுப்பி வையுங்கள்.**

இது கிறிஸ்டடெல்ஃபியன் வேதாகம சங்கத்தாரால் இலவசமாக வெளியிடப்பட்டது.பாடம் எண் 11

# *ஜீவன் மற்றும் மரணத்தைக் குறித்ததான வேதாகம போதனை-க*

**வார வாசிப்புகள்: ஆதியாகமம், அதிகாரங்கள் 36-38,**
**யாக்கோபு, அதிகாரங்கள் 4- 5.**
**பாட வாசிப்புகள்:: சங்கீதம், 49,**
**ஆதியாகமம், அதிகாரம் 2.**

"நான் இளைஞனாய் இருந்தபோது, செய்தவற்றை இப்போது செய்யமுடியாது" இந்த வார்த்தைகளை நாம் அடிக்கடி பேசக் கேட்கிறோம். அது எவ்வளவு உண்மையானது! நமது பெலன் குன்றிப்போவதை கண்டுப்பிடிக்கும்படி நாம் 70 வரைக்கும் காத்துக்கொண்டிருக்க அவசியமில்லை. சிலவேளை நமது வாலிபப் பருவத்தில், அதிகமாக அசைவாடவும், நினைக்கவும், காரியங்களைச் செய்யவும், கூடாமற் போகக்கூடும்.

நாம் வயதாகிறதில் நமது ஜீவியத்தைச் செலவு செய்கிறோம். நாம் ஒருநாளில் மரிப்போம் என்பதைச் சிந்திக்காமல் விட்டாலும், அது நிச்சயமாக நடக்கும் என்பதை நாம் அறிவோம். சங்கீதக்காரன் இதைக்குறித்து பேசுகிறதை உண் மையாக உள்ளது, ***"எங்கள் ஆயுசுநாட்கள் எழுபது வருஷம், பெலத்தின் மிகுதியால் எண்பது வருஷமாயிருந்தாலும், அதின் மேன்மையானது வருத்த மும் சஞ்சலமுமே; அது சீக்கிரமாய்க் கடந்து போகிறது; நாங்களும் பறந்து போகிறது (சங்கீதம் 90:10)***.

அனைவரும் மரிக்கிறார்கள். நமது ஜீவியத்தைக் குறித்துச் சொல்லப்படுகிற பழமொழியானது எவ்வளவு உண்மையானது, "ஒருநாளில் நாம் மரித்தே தீரு வோம்"

**பூமியில் முதல் மனிதன்**

நாம் அனைவரும் வயதாகி ஏன் மரிக்கிறோம்? இதற்கு விடையைக் கண்டு பிடிக்க, வேதாகமத்தின் முதல் புத்தகத்துக்கு நாம் திரும்பவேண்டும். அதில் முதல் மனிதன் மற்றும் மனுஷியைப்பற்றி நாம் வாசிக்கவேண்டும்.

ஆண்களும் பெண்களும் வாழ்வதற்காக தேவன் ஒரு அருமையான ஒரு வாசஸ்தலமாக இந்தப் பூமியை உண்டாக்கினார். அவர் தாவரங்க ளையும், மிருகங்களையும் முதலில் உண்டாக்கினார். எல்லாவற்றையும் ஆயத்தஞ் செய்தபின்பு அவர் ஒரு மனிதனை உண்டாக்கினார்.

***ஆதியாகமம் 2:7*** அதைப்பற்றி கூறுகிறது: ***"தேவனாகிய கர்த்தர் மனுஷனைப் பூமியின் மண்ணினாலே உருவாக்கி,"*** ஆச்சரியமான திறமையினால் ஒரு மனித சரீரம் உருவானது.
உயிரற்ற ஒரு சரீரம் மண்ணின் மேல் கிடக்கிறதை நாம் கற்பனைச் செய்ய முடியும். அடுத்தபடியாக என்ன நிகழ்ந்தது? ***"தேவன் ஜீவசுவாசத்தை அவன் நாசியிலே ஊதினார், மனுஷன் ஜீவாத்துமாவானான்" (ஆதியாகமம் 2:7).***
மனுஷன் சுவாசிக்க ஆரம்பித்தான். அவன் ஜீவனுள்ளவனாயிருந்தான்! அவனால் இப்போது பார்க்கவும், கேட்கவும் உணரவும், சிந்திக்கவும் முடிந்தது தேவன் உண்டாக்கினவைகளிலேயே மிக ஆச்சரியமான சிருஷ்டியாக அவன் இருந்தான்.

**ஆதாமின் தனிமை**

***ஆதியாகமம் 2:8 "தேவனாகிய கர்த்தர் கிழக்கே ஏதேன் என்னும் தோட் டத்தை உண்டாக்கி, தாம் உருவாக்கின மனுஷனை அதிலே வைத்தார்".***

இந்த மனிதனுக்கு தேவன் கொடுத்த பெயர் ஆதாம். அவன் தோட்டத்தைப் பராமரித்தான். ஒரு மரத்தின் கனியைத் தவிர, அனைத்து மரங்களின் கனிக ளையும் நீ புசிக்கலாம் என்று தேவன் அவனிடம் கூறினார். அந்த மரம் **"நன் மைத் தீமை அறியத்தக்க மரம்"** என்று அழைக்கப்படது. தேவன் எச்சரித்தார். ***"அதை நீ புசிக்கும் நாளில் சாகவே சாவாய் (ஆதியாகமம் 2:17***)

ஆதாமின் துணைக்கு மிருகங்கள் மாத்திரம் இருந்தன. அவன் சிந்தித்த வித மாக அவைகளால் சிந்திக்க முடியவில்லை. அவன் தனிமையாக இருந்தான்.

***"“மனிதன் தனிமையாயிருப்பது நல்லதல்ல, ஏற்றதுணையை அவனுக்கு உண்டாக்குவேன்” (ஆதியாகமம் 2:18)***. என்று தேவன் கூறினார்.

வசனங்கள் 21-13-ல் தேவன் எவ்வாறு ஆதாமுக்கு நித்திரையை வரப்பண்ணி, அவன் விலாவிலிருந்து ஒரு எலும்பை எடுத்து, அதை ஒரு மனுஷியாக உரு வாக்கினார் என்பதை நாம் வாசிக்கிறோம். அவள் ஆதாமோடே இருந்து அவனுடைய ஜீவியத்தில் பங்கேற்றாள்.

**ஆதாமும் ஏவாளும் தேவனுடைய கட்டளையை மீறுகிறார்கள்**

இப்பொழுது வாசிப்போம் ***ஆதியாகமம் 3:1-13.*** இதில் முதல் மனுஷியான ஏவாள் சர்ப்பத்துக்கு செவிகொடுத்து, தேவனுடைய கட்டளையை எவ்வாறு மீறினாள் என்பதையும், எவ்வாறு ஆதாமும் தேவனுக்குக் கீழ்ப்படியாமற் போனான் என்பதையும் நாம் பார்ப்போம்.

அவர்கள் தேவனுடைய கட்டளையை மீறினதினால் பாவஞ்செய்தனர். நாம் ஏற்கனவே பார்த்தபடி, பாவத்தின் சம்பளம் மரணம். ஆதாமும் ஏவாளும் அதை நன்றாக அறிந்திருந்தனர். ஏனெனில் தேவன் அவர்களிடம் ஏற்கனவே கூறியிருந்தார், ***“அதை நீ புசிக்கும் நாளிலே சாகவே சாவாய்” (ஆதியாகமம் 2:17***).

**தண்டனை**

அந்தப் பிரச்சனையை உருவாக்கின சர்ப்பம் தனது பங்கிற்குத் தண்டனைப் பெற்றது. ஆதாமும் ஏவாளும் மரணத் தண்டனைப் பெற்று தோட்டத்தை விட்டு வெளியேற்றப்பட்டனர்.

அதற்குப் பின்பு அவர்கள் அநேக ஆண்டுகள் ஜீவித்திருந்தும், ஆதாம் மற்றும் ஏவாள் மரிக்கக்கூடிய சிருஷ்டிகள் ஆனார்கள். நம்மைப் போலவே அவர்க ளும் இளைப்படைந்து, நோய்வாய்ப்பட்டு, முதிர் வயதடைந்து மரித்தார்கள். தேவனுடைய வார்த்தை நிஜமாக இருந்தது) ஆதாமை தேவன் உருவாக்கும்போது, ***”அவன் நாசியில் ஜீவசுவாசத்தை ஊதி னார். மனுஷன் ஜீவாத்துமாவானான்” (ஆதியாகமம் 2:7)*** எவ்வாறு என்பதை நீங்கள் நினைவுகூருவீர்கள்.

எல்லா மனிதர்களும் "ஜீவாத்துமாக்கள்" ஆனால் அவர்கள் சுவாசிக்கிறதை நிறுத்தும்போது அவர்களுடைய ஜீவன் போகிறது, அவர்கள் ***"செத்த ஆத்துமாக்கள்"*** ஆகிறார்கள்.

பிரசங்கி புத்தகத்தை எழுதினவர் இவ்வாறு கூறுகிறார், ***உயிரோடிருக்கிறவர்கள் தாங்கள் மரிப்பதை அறிவார்களே, மரித்தவர்கள் ஒன்றும் அறியார்கள்; இனி அவர்களுக்கு ஒரு பலனுமில்லை, அவர்கள் பேர்முதலாய் மறக்கப்பட்டிருக்கிறது. அவர்கள் சிநேகமும், அவர்கள் பகையும், அவர்கள் பொறாமையும், எல்லாம் ஒழிந்துப் போயிற்று; சூரியனுக்குக் கீழே செய்யப்படுகிற தொன்றிலும் அவர்களுக்கு இனி என்றும் பங்கில்லை" (பிரசங்கி 9:5-6)*** அல்லது ***சங்கீதம் 146:3-4-***ல் நாம் வாசிக்கிறபடி, ***"பிரபுக்களையும் இரட்சிக்கத் திராணியில்லாத மனுபுத்திரனையும் நம்பாதேயுங்கள். அவனுடைய ஆவி பிரியும்; அவன் தன் மண்ணுக்குத் திரும்புவான்; அந்நாளிலே அவன் யோசனைகள் அழிந்துப் போகும்".***

**உலகத்தில் பாவமும் மரணமும்**

இது நம்மை எவ்வாறு பாதிக்கிறது என்பதை நாம் தெரிந்துக்கொள்ளும்படி அப்போஸ்தலனாகிய பவுல் ***ரோமர் 5:12*** இவ்வாறு கூறி, உதவி செய்கிறான் ***"இப்படியாக, ஒரே மனுஷனாலே பாவமும் பாவத்தினாலே மரணமும் உலகத்திலே பிரவேசித்தது, எல்லா மனுஷரும் பாவஞ்செய்தபடியால், மரணம் எல்லாருக்கும் வந்ததுபோலவும் இதுவுமாயிற்று"***

ஆதாமும் ஏவாளும் பாவிகளானார்கள். நாமும் அவர்களுடைய பிள் ளைகளா னதால் பாவிகளாயிருக்கிறோம். நமது சுபாவமேபாவ சுபாவமாயிருக்கிறது. அல்லது பவுல் கூறுகிற விதமாக, சுபாவத்தின்படி நாம் ***"கீழ்ப்படியாமையின் பிள்ளைகள்"***ஆக இருக்கிறோம். நமது பிதாவாகிய ஆதாமைப்போல நாம் பாவஞ்செய்கிறோம். ஆகையால் அவனைப்போல நாமும் மரிப்போம்

நமக்கு ஒரு பாவசுபாவம் இருப்பது நமது தவறல்ல. அது நிச்சயமாக தேவனு டைய தவறும் அல்ல. அது ஆதாமின் தவறு, அது நமது துரதிருஷ்டம்.

நாம் தேவனைக் குற்றப்படுத்தினால், பெரிய மதியீனர்களாய் இருப்போம். அதற்குப் பதிலாக நாம் அவருக்கு நன்றி கூறவேண்டும். ஏனெனில், நாம் ஜீவிக்கும்படியாக ஒரு வாய்ப்பை நமக்குக் கொடுத்திருக்கிறார். அது நமது உரிமை என்று கூறும்படி நமக்கு

எந்த அருகதையும் இல்லை. நமது நம்பிக்கையற்ற நிலையிலிருந்து தப்பும்படியான ஒரு வழியை அவர் நமக்குக் கொடுத்திருக்கிறார். அது நமது உரிமை என்று கூறும்படி நமக்கு எந்த அருகதையும் இல்லை. நமது நம்பிக்கையற்ற நிலையிலிருந்து தப்பும்படியான ஒரு வழியை அவர் நமக்குக் கொடுத்திருக்கிற படியால், தேவனிடம் நன்றியுள் ளவர்களாய் இருக்கக் கடமைப்பட்டிருக்கிறோம். பாவசுபாவம் உள்ளவர்களாய் பிறந்திருப்பதற்காக நம்மை நாம் குற்றப்படுத்த முடியாது. ஆனாலும் நாம் தப்பும்படியான வழியைத் தேவன் அருளியிருப்பதைத் தள்ளிவிட்டால் நாம் குற்றவாளிகளாய் இருப்போம்.

பாடப்பொருள்

1. **பூமியின் தூளிலிருந்து தேவன் ஆதாமை உண்டாக்கினார்.**
2. **அவனுடைய நாசிக்குள் தமது ஜீவசுவாசத்தை ஊதி, அவன் ஜீவிக்கும்படி செய்தார்.**
3. **தேவன் ஆதாமுக்கு ஒரு கட்டளை கொடுத்தார். அந்தக் கட்ட ளையை மீறினால், அதன் தண்டனை மரணமாக இருக்கும் என்று தேவன் கூறினார்.**
4. **ஆதாமும் ஏவாளும் தேவனுடைய கட்டளையை மிறினார்கள். அவர்கள் மரிக்கிற சிருஷ்டிகள் ஆனார்கள்.**
5. **எல்லா மனிதர்களும் ஆதாமின் சந்ததியார்.அவர்கள் எல்லாரும் பாவிகள், அதினால் அவர்கள் எல்லாரும் மரிக்கிறார்கள்.**
6. **அடுத்த மூன்று பாடங்களில், நாம் பார்க்கப் போகிறபடி கிறிஸ்து மனிதர்களுக்கு ஜீவனின் நம்பிக்கையைக் கொண்டு வந்தார்.**

தி கிறிஸ்டடெல்ஃபியன் வேதாகம சங்கத்தாரால் இலவசமாக வெளியிடப்பட்டது.

**பாடம் எண்.12**

---

## *ஜீவன் மற்றும் மரணத்தைக்குறித்த வேதாகமப் போதனை - 2*

**வார வாசிப்புகள்: ஆதியாகமம், அதிகாரங்கள் 39-41**
**யோனா, அதிகாரங்கள் 1- 4.**
**பாட வாசிப்பு பிரசங்கி, அதிகாரம் 3.**

**நம்மைநாமே நேசிப்பது**

யோனத்தான் தன் சினேகிதனான தாவீதுக்குக் காண்பித்த பெரிய அன்பைக் குறித்து வேதாகமம் இவ்வாறு கூறுகிறது, ***"யோனத்தானுடைய ஆத்துமா தாவீதின் ஆத்துமாவோடே ஒன்றாய் இசைந்திருந்தது; யோனத்தான் அவனை தன் உயிரைப்போல் சிநேகித்தான்" (1.சாமுவேல் 18:1)***.
"

நாம் அனைவரும் நமது சொந்த ஆத்துமாவை அல்லது நம்மையே நேசிக்கிறோம். எபேசியர் 5:29-ல் பவுல் கூறுகிறான், ***"தன் சொந்த மாம்சத்தைப் பகைத்தவன் ஒருவனுமில்லையே; கர்த்தர் சபையைப் போஷித்துக் காப்பாற்றுகிறது போல ஒவ்வொருவனும் தன் மாம்சத்தைப் போஷித்துக் காப்பாற்றுகிறான்".***

நம்மைநாமே கவனியாமல், சரியாக ஆகாரம் புசியாமலும், எதையும் குடியாம லும் இருந்தால், நாம் சீக்கிரத்தில் இறந்துப் போவோம்.

**சர்ப்பத்தின் பொய்**

நம்மில் அநேகர் நம்மை நாமே மிக அதிகமாய் நேசிக்கிறோம். நம்மைக் குறித்து நாமே மிக அதிகமாய் சிந்திக்கிறோம். இதனாலே என்னவோ தாங் கள் மரிப்பதையும், தங்கள் சத்துருக்களைப் போலவே தாங்களும் ஈனமடை வதையும் நம்ப சிரமப்படுகின்றனர்.

தாங்கள் மரணத்திற்குப் பின்பும் எங்கே யோ தொடர்ந்து வாழப்போவதாக எண்ணும்படி துடிக்கிறார்கள்.

சர்ப்பம் ஆதாம் மற்றும் ஏவாளிடம் கூறினது,***"நீங்கள் சாகவே சாவதில்லை" (ஆதியாகமம் 3:4)*** இது ஒரு பொய். எனினும் ஏவாள் தேவன் கூறின வார்த் தையை நம்பாமல், சர்ப்பத்தின் பொய்யை நம்பும்படி தெரிந்து கொண்டாள்.

மேலும் மனிதர்கள் எப்போதும் சர்ப்பத்தின் பொய்யை நம்பும்படி தெரிந்துகொள்ளுகிறார்கள்.ஆனாலும் அவர்கள் தேவன் கூறின,***"நீ மண் ணாயிருக்கிறாய், மண்ணுக்கேத் திரும்புவாய்" (ஆதியாகமம் 3:19),*** வார்த்தைகளை நம்பாதிருக்கிறதால், மரணத்தின்போது தங்களுக்குச் சம்பவிப்பதைக்குறித்து எல்லாவிதமான கதைகளையும் கற்பனை செய் கிறார்கள்.

**மிருகங்களைப்போல அழிந்து போகுதல்**

உங்கள் வேதாகமத்தை ***பிரசங்கி 3:10***-க்குத் திருப்பி வாசியுங்கள். ***"மனுபுத்திர ருக்குச் சம்பவிக்கிறது மிருகங்களுக்கும் சம்பவிக்கும்; அவர்களுக்கும் இவைகளுக்கும் ஏகசம்பவமுண்டு; இவைகள் சாகிறது போலவே அவர்களும் சாகிறார்கள்; ஜீவன்களுக்கெல்லாம் சுவாசம் ஒன்றே; மிருகத்தைப் பார்க்கி லும் மனுஷன் மேன்மையுள்ளவன் அல்ல"***

செத்த மிருகத்தின் சடலத்தைப் பார்க்கும்போது, அந்த மிருகத்தின் முக்கிய பகுதிகளின் ஒன்று பரலோகத்துக்கு ஜீவிக்கும்படி சென்றதாக நீங்கள் கற்ப னை செய்கிறதில்லை. இந்த மிருகம் அழகுள்ளதாக இருந்தாலும், அந்த சிருஷ்டியின் மீதியாக விடப்பட்ட சரீரமானது, வாழ்ந்திருக்கும்போது சுவா சித்து நடமாடி, இப்போது செத்த சரீரமாக இருப்பதை நாம் அறியமுடியும்.

அதைப்போலவே மனிதனும் இருக்கிறான். அவன் மரிக்கும்போது ஒரு ஜீவ னற்ற சரீரம் மீதியாக விடப்பட்டுள்ளது. ஆனால் ***சங்கீதம் 49:12*** கூறுகி றது,***"ஆகிலும் கனம்பொருந்தினவனாயிருக்கிற மனுஷன் நிலைத் திருக்கிற தில்லை; அழிந்துபோகும் மிருகங்களுக்கு ஒப்பாயிருக்கிறான்"*** என்பதை நீங் கள் கவனித்தீர்களா?

மிருகங்களைப்போலவா? ஆம், அதே எழுத்தாளர் இதைக்குறித்து எந்த சந்தேகமுமில்லாமல் ***வசனம் 14***-ல் இவ்வாறு தொடருகிறான். ***"ஆட்டு மந்தை யைப்போல*** *பாதாளத்திலே* ***கிடத்தப்படுகிறார்கள்;".***

**ஒரு தவறான எண்ணம்**

நாம் மரிக்கும்போது நம்மிலுள்ள ஜீவனின் ஒரு பகுதி ஜீவித்துக் கொண்டே இருக்கும் என்று அநேகர் நம்புகின்றனர். மனிதருக்கு ஒரு "அழிவைக்காணாத ஆத்துமா"பரலோகத்தில் என்றைக்கும் ஜீவிக்கும் என்று நினைக்கிறார்கள். **ஆத்துமா "அழிவில்லாதது"அல்ல.** தீர்க்கதரிசியான எசேக்கியேல்மூலம் தேவன் கூறுகிறார், ***"இதோ, எல்லா ஆத்துமாக்களும் என்னுடைய வைகள்; தகப்பனின் ஆத்துமா எப்படியோ, மகனின் ஆத்துமாவும் என்னுடையது; பாவஞ்செய்கிற ஆத்துமாவே*** (சாவான்) ***சாகும்" (எசேக்கியேல் 18:4).***

வேதாகமம் மரணத்தைக் குறித்து பேசும்போது அது என்ன அர்த்தத்தில் என்பதை நாம் காண்கிறோம். அதின் அர்த்தம், வாழ்க்கையின் முழுவதுமான முடிவு. அதனால் சரீரமும் சிந்தையும் அழுகிப்போய் மண்ணுக்குத் திரும்பும்.

**நம்பிக்கையின் வெளிச்சம்**

நீங்கள் உங்கள் வேதாகமத்தை மூடி வைத்துவிட்டு, இந்தப் பக்கத்தை கிழித்து எறிந்து விட்டால் நலமாக இருக்கும் என்று சிந்திக்கலாம். ஆனாலும் சற்றுப் பொறுங்கள். வேதாகமம் தேவனுடைய வார்த்தை. மற்றும் அது என்ன கூறுகிறதோ அது முற்றிலும் உண்மையே. சொல்லப்பட்ட சத்தியம் மனரம்ய மாய் இராததினால் அதை நம்பி ஏற்றுக்கொள்ள மறுப்பது மிகப்பெரிய மதியீனமாகும்.

மரணம் நிஜமே என்று கூறுகிற அதே வேதாகமம் கல்லறையைக் கடந்த நம்பிக்கையாகிய உயிர்த்தெழுதலின் நம்பிக்கை உள்ளது என்றும் கூறுகிறது. கர்த்தராகிய இயேசுகிறிஸ்து மரணத்திலிருந்து எழுப்பப்பட்டு சரீர உயிர்த் தெழுதல் அடைந்ததுபோல, அவர் வரும் நாளில் கிறிஸ்துவுக்குச் சொந்தமா னவர்கள் அவரைப்போலவே கல்லறையிலிருந்து எழுப்பப்பட்டு உயிர்பெறுவார் கள்.

**உயிர்த்தெழுதலின் நம்பிக்கை.**

ஆனால், இது மற்றொரு பாடத்தின் பொருளாகும்!

**பாடப்பொருள்**

1. **மனிதர்கள் மரித்தபின்பு, மிருகங்களைப்போல அழிந்துப் போவார்கள் என்று வேதாகமம் நமக்குப் போதிக்கிறது.**
2. **வேதாகமம் நம்மில் யாரும் பரலோகத்துக்குப் போவோம் என்ற நம்பிக்கையைத் தருகிறதில்லை.**
3. **இயேசு பூமிக்குத் திரும்பவரும்போது, யார் அவர்மேல் விசுவா சம் வைத்தார்களோ அவர்களுக்கு ஜீவனைக் கொண்டுவருவார்.**

**நரகம் எங்கே உள்ளது?**

வேதாகமம் நமக்குக் கூறுகிறது,***"வானங்கள் கர்த்தருடையவைகள்; பூமியை யோ மனுபுத்திரருக்குக் கொடுத்தார்" (சங்கீதம் 115:16).***

பரலோகம் தேவன் வசிக்கும் இடம் என்று நமக்குத் தெரியும். பூமியைத் தேவன் மனுஷனுடைய குடியிருப்புக்கென்று உண்டாக்கினார் என்பதும் நமக் குத் தெரியும்.ஆனால் நரகத்தைக்குறித்து என்ன? அது எங்கே இருக்கிறது? மற்றும் அங்கே ஜீவிக்கிறவர்கள் யார்?

மனிதன் எப்போது மரிக்கிறானோ, அப்போதே மண்ணின் தூளுக்குத் திரும்பு கிறான் என்பதை ஏற்கனவே நாம் பார்த்தோம். அவன் இனி மேல் எதையும் சிந்திக்கவும், உணரவும் முடியாது. அவன் உங்கள் விரல்களின் நடுவே நீங்கள் நசுக்கிப்போட்ட ஒரு பூச்சியைப்போல ஜீவனற்று கிடக்கிறான்.

துன்மார்க்கர் மரிக்கும்போது தண்டனைக்காக ஒரு இடத்துக்கு அனுப்பப் படுவார்கள் அந்த இடம் 'நரகம்' என்று அழைக்கப்படுகிறது என்றும் சிலர் நினைக்கின்றனர். ஆனால் அதைக்குறித்து வேதாகமம் கூறுகிறதை நாம் பார்க்கவேண்டும்.

பழைய ஏற்பாடானது முதலில் எபிரெய மொழியில் எழுதப்பட்டது. அதற்குப் பின்பு அது ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்டது. எபிரெய வார்த்தையான "ஷியோல்" என்பதன் அர்த்தம் "மூடப்பட்ட இடம்" ஆகும். அந்த வார்த் தையே 31 முறைகள் "நரகம்" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. மூடப் பட்ட இடமானது கல்லறையை குறிப்பிடுகிறது. மொழிபெயர்ப்பாளர்கள் "ஷியோல்" என்பதை

“கல்லறை” என்று 31 முறைகளும் குறிப்பிட்டது ஆச்சரியமாக உள்ளது. கல்லறை என்பதும் நரகம் என்பதும் ஒன்றே தான். அவை இரண்டும் ஒரே இடத்தைக் குறிப்பிடுகிறது.

**ஹேட்ஸ்**

முதலில் பழைய ஏற்பாடு எபிரெய மொழியில் எழுதப்பட்டது அதன்பின்பு புதிய ஏற்பாடு முதலில் கிரேக்கு மொழியில் எழுதப்பட்டது. பழைய ஏற்பாடு எபிரெய மொழியில் எழுதப்பட்டதுபோலவே, புதியஏற்பாடு கிரேக்க மொழி யில் எழுதப்பட்டது. “நரகம்” என்ற வார்த்தைக்கு “ஹேட்ஸ்” என்ற கிரேக்கு வார்த்தை பயன்படுகிறது. அதன் அர்த்தம் எபிரெய மொழியிலுள்ள “ஷியோல்” என்ற வார்த்தைக்குச் சரிசமமாக உள்ளது.

இயேசுவைக்குறித்து நாம் இவ்வாறு வாசிக்கிறோம், ***“என் ஆத்துமாவைப் பாதாளத்தில் விடீர்” (அப்போஸ்தலர் 2:27).***

இயேசு நரகத்துக்கு (ஹேட்ஸ்) சென்றார். வேறு வார்த்தைகளில் கூறினால் பாதாளத்துக்குச் சென்றார். ஆனால் அங்கு அவர் விடப்படவில்லை. அவர் மரித்தோரிலிருந்து எழுப்பப்பட்டார்.

**ஆனால் நரக அக்கினியைக் குறித்து என்ன?**

***மாற்கு 9:43***--ல் ***“நீ இரண்டு கையுடையவனாய் அவியாத அக்கினியுள்ள நரகத்திலே தள்ளப்படுவதைப் பார்க்கிலும்”*** என்று நாம் வாசிக்கிறோம்..

மற்றொரு கிரேக்க வார்த்தை இதேப்போன்ற வசனங்களை “நரகம்” என்பதற்குப் பதிலாக **“கெஹென்னா”** என்று பயன்படுத்தப்பட்டுள்ளது. **கெஹன்னா** என்பது எருசலேமுக்கு வெளியே உள்ள ஒரு பள்ளத்தாக்கின் பெயராகும். அந்த இடமானது, இயேசு குறிப்பிடும் போதெல்லாம் யூதர்களுக்கு மிகவும் தெரிந்த இடமாக இருந்தது. அந்த இடமானது நகரத்து அனைத்து குப்பை கூளங்களை எரிக்கும் இடம். பட்டணத்தின் முற்றுகை, போர் காலங்களில், இறந்துப் போனவர்களின் சடலங்களை எரிக்கப்படும்படி கெஹென்னாவில் வீசி எறிவதுண்டு. அது அழிவின் இடமாக இருந்தது. எனவே கெஹென்னாவில் போடப்படுவது சர்வ நாசத்தின் அறிகுறியாகும். எனவே இயேசு ஜனங்களுக்குப் போதிக்கும்போது, தேவனிடமிருந்து அவர்களை பிரிக்கக்கூடிய அவயவங்களைத் தறித்துப்போடுதல் நலமென்றும்,

இவ்வாறாக முழு அழிவாகிய நித்திய மரணத்திலிருந்து தப்பி ஜீவிக்கலாம் என்றும் எச்சரித்து வந்தார்.

**தயவுசெய்து இந்தப் புத்தகத்தின் பக்கம் 100-ல் காணும் இந்தப் பாடங்களுக்குச் சம்பந்தப்பட்ட கேள்வி/விடைத்தாளுக்குச் சென்று, "ஆசிரியர் பிரதி"யை எங்களிடம் அனுப்பி வையுங்கள்.**

**இது கிறிஸ்டடெல்ஃபியன் வேதாகம சங்கத்தாரால் இலவசமாக வெளியிடப்பட்டது.**

**பாடம் எண்.13**

........................................................................................................................

## *உயிர்த்தெழுதல்*

**வார வாசிப்புகள் ஆதியாகமம், அதிகாரங்கள் 42-44;**
**பிலிப்பியர், அதிகாரங்கள் 1- 2.**
**பாடவாசிப்பு - 1.கொரிந்தியர், அதிகாரம் 15..**

**"உயிர்த்தெழுதல்"** என்ற வார்த்தைக்கு அர்த்தம், **"மீண்டும் ஜீவனுக்குத் திரும்புதல்"** ஆகும். இயேசு மரித்து மூன்று நாட்களுக்குப் பிறகு கல்லறை யிலிருந்து வெளியே வந்தபோது, அது உலக சரித்திரத்திலேயே மிகுந்த ஆச்சரியமான சம்பவமாக இருந்திருக்கும்.

அவருடைய சீஷர்கள் அவரைப் பார்த்தபொழுது தங்கள் கண்களையே அவர்களால் நம்பமுடியவில்லை. அது ஆவி என்று நினைத்தார்கள்.

ஆனால் இயேசு அவர்களிடம் கூறினார், ***"நான்தான் என்று அறியும்படி, என் கைகளையும், என் கால்களையும் பாருங்கள், என்னைத் தொட்டுப் பாருங்கள்; நீங்கள் காண்கிறபடி, எனக்கு மாம்சமும் எலும்பும் உண்டாயிருக்கிறதுபோல ஒரு ஆவிக்கு இராதே என்று சொல்லி, தமது கைகளையும் கால்களையும் அவர்களுக்குக் காண்பித்தார். ஆனாலும் சந்தோஷத்தினால் அவர்கல் இன்னும் விசுவாசியாமல் ஆச்சரியப்படுகையில், புசிக்கிறதற்கு ஏதாகிலும் இங்கே உண்டா என்று அவர்களிடத்தில் கேட்டார். அப்பொழுது பொரித்த மீன்கண்டத்தையும் தேன்கூட்டுத் துணிக்கையையும் அவருக்குக் கொடுத் தார்கள். அவைகளை அவர் வாங்கி புசித்தார்" லூக்கா 24:39-43).***

கடைசியில் அவர் உயிரோடு எழும்பினார் என்பதை உறுதிப்படுத்தினார். தேவன் அவருக்கு நித்திய ஜீவனைக் கொடுத்தார். ***வெளிப்படுத்தல் 1:18***-ல் இயேசு கூறுகிறதை நாம் இவ்வாறு வாசிக்கிறோம், ***"இதோ, நான் சதாகாலங்களிலும் உயிரோடிருக்கிறேன்"***

**இயேசு தம்மைப் பின்பற்றுகிறவார்களை உயிரோடு எழுப்புவார்**
அவார்களும் கூட மரித்தோரிலிருந்து எழுப்படுவார்கள் என்று இயேசு தமது சீஷர்களுக்குப் போதித்தார். இப்போது குறிப்பிட்ட வசனத்தை மீண்டும் எடுத்து வாசியுங்கள். ***"மரித்தேன், ஆனாலும், இதோ சதாகாலங்களிலும் உயிரோடிருக்கிறேன். ஆமென்; நான் மரணத்திற்கும் பாதாளத்திற்குமுரிய திறவுகோல்களை உடையவராயிருக்கிறேன்" (வெளிப்படுத்தல் 1:18).***

இப்போது, ஒரு கதவின் சாவி உங்களிடம் இருந்தால், அதன் அர்த்தம் அதை உங்களால் திறக்கமுடியும் என்பதாகும். கல்லறையின் திறவுகோல் இயேசு விடம் உண்டு. அதாவது கல்லறையில் வைக்கப்பட்டவர்களை விடுதலைச் செய்யக்கூடிய அதிகாரம் அவரிடத்தில் உண்டு என்றும் கூறலாம்.

இந்த அதிகாரம் தேவனால் அவருக்குக் கொடுக்கப்பட்டது என்பதை ***யோவான் 5:20-29***-ல் வாசியுங்கள். குறிப்பாக ***21-ம் வசனத்தை*** வாசியுங்கள். அது கூறுகிறது, ***""பிதாவானவர் மரித்தோரை எழுப்பி உயிர்ப்பிக்கிறதுபோல, குமாரனும் தமக்குச் சித்தமானவர்களை உயிர்ப்பிக்கிறார்".***

"உயிரோடெழுப்புவது" என்னவென்றால், "மரித்தவனுக்கு ஜீவன் கொடுப்பது" ஆகும்.

ஆண்களையும் பெண்களையும் மீண்டும் உயிரோடு கொண்டு வருவதற்கான வல்லமையை தேவன் இயேசுவுக்குக் சொடுத்தார்.

**எல்லா விசுவாசிகளும் பகரக்கூடிய ஒரே நம்பிக்கை**
தேவனுடைய மனிதர்கள் அனைத்து காலங்களிலும் மரித்திருக்கிறார்கள். அவர்கள் அனைவரும் தாங்கள் மீண்டும் எழுப்பப்படும் நாளை எதிர்நோ க்கியிருந்தார்கள். இவர்களில் சிலரைக் குறித்து பவுல் நமக்குக் கூறுகிறான், ***"இவர்களெல்லாரும் வாக்குத்தத்தம் பண்ணப்பட்டவைகளை அடையாமல், தூரத்திலே அவைகளைக் கண்டு, நம்பி, அணைத்துக்கொண்டு, விசுவாசத்தோடே மரித்தார்கள்" (எபிரெயர் 11:13)***

மேலும் இந்த மனிதர்களைக் குறித்து அவன் எழுதுகிறான்
***"இவர்களெல்லாரும் விசுவாசத்தினாலே நற்சாட்சி பெற்றும், வாக்குத்தத்தம் பண்ணப்பட்டதை அடையாமற் போனார்கள்.***

***அவர்கள் தம்மையல்லாமல் பூரணராகாதபடிக்கு விசேஷித்த நன்மையானதொன்றை தேவன் நமக்கென்று முன்னதாக நியமித்திருந்தார்" (எபிரெயர் 11:39-40***).

இந்த வசனத்திலிருந்து நாம் பார்ப்பது என்னவென்றால் நித்தியஜீவன் ஈவா னது தேவனை உண்மையாய்த் தொழுதுகொள்ளுகிற யாவருக்கும் அதே நேரத்தில் அளிக்கப்படும்.

ஆதி கிறிஸ்தவர்களும் இந்த வேளையை எதிர்பார்த்தனர். அவர்களில் ஒருவன் மரிக்கும்போது, அவர்கள் அவனைப்பற்றி, "நித்திரை அடைந்ததாக" பேசிக் கொண்டனர். ஏனென்றால், மனிதர் தூக்கத்தி;லிருந்து எழும்புவதுபோல, ஒவ்வொரு சீஷனும் மரணத்திலிருந்து "எழுப்பப்படுவான்" ***1.கொரிந்தியர் 15***-ம் அதிகாரத்தில் நீங்கள் வாசித்திருக்கிறபடி, இயேசுவின் உயிர்த்தெழுதலுக்கு பின்பு அவரைக் கண்ட 500 சீஷர்களைக்குறித்து அவன் கூறுகிறபோது, :அவர்களில் ***"சிலர் மாத்திரம் நித்திரை அடைந்திருக்கிறார்கள்" வசனம் 6***-ல் குறிப்பிடுகிறான்.

**உயிர்த்தெழுதல் எப்பொழுது நடைபெறும்?**

இயேசு மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்து ஏறக்குறைய 2000 ஆண்டுகள் கடந்துவிட்டது. ***"விசுவாசத்தோடு மரித்தவர்களை" எப்போது உயிர்ப்பிக்கப் போகிறார்? "அப்போஸ்தாலனாகிய பவுல் இந்தக் கேள்விக்கு . 1.கொரிந்தியர் 15***:*ல்பதில் அளிக்கிறார்*

***"ஆதாமுக்குள் எல்லாரும் மரிக்கிறதுபோல, கிறிஸ்துவுக்குள் எல்லாரும் உயிர்ப்பிக்கப்படுவார்கள். அவனவன் தன்தன் வரிசையில் உயிர்ப்பிக்கப் படுவான்; முதற்பலனானவார் கிறிஸ்து; பின்பு அவர் வருகையில் அவருடைய வர்கள் உயிர்ப்பிக்கப்படுவார்கள்" (1.கொரிந்தியர் 15:22-23).***

ஏற்கனவே நாம் பார்த்தபடி, இயேசுகிறிஸ்து முழு உலகத்தையும் அரசாட்சி செய்யும்படியாகவும், தேவனுடைய ராஜ்யத்தை ஸ்தாபிக்கும்படியாகவும் வரப் போகிறார். அவர் இதைசெய்யும்படியாக வரும்போது, மரித்தோரை உயிரோடு எழுப்புவார். அப்போது எவர்கள் உண்மை விசுவாசத்தோடு இருந்தார்களோ அவர்களுக்கு நித்தியஜீவன் அளிக்கப்படும். இந்தப் பூமியை அரசாளும்படி இயேசுவுக்கு உதவிசெய்யும் பெரிய சிலாக்கியத்தை அனுபவிப்பார்கள். அந்த நாளில்

அவர்கள் பாடப்போகிற பாட்டின் வார்த்தைகளை பின்வரும் வசனங்க ளில் வாசியுங்கள்.

***"நீர் அடிக்கப்பட்டு, சகல கோத்திரங்களிலும், பாஷைக்காரரிலும் ஜனங்களி லும் ஜாதிகளிலுமிருந்து எங்களைத் தேவனுக்கென்று உம்முடைய இரத்தத் தினாலே மீட்டுக்கொண்டு, எங்கள் தேவனுக்கு முன்பாக எங்களை ராஜாக்க ளும் ஆசாரியர்களுமாக்கினீர்; நாங்கள் பூமியிலே அரசாளுவோம்".***
***(வெளிப்படுத்தல் 5:9-10*** .

**இயேசு வரும்போது சிலர் உயிரோடு இருப்பார்கள்**

இயேசு திரும்ப வரும்போது, இன்னும் ஜீவித்திருக்கிறவர்கள் என்ன ஆவார் கள்? இயேசு வரும்போது தாம் செய்யப்போகிறதை கூறுகிறார்,

***"வலுவாய் தொனிக்கும் எக்காள சத்தத்தோடே அவர் தமது தூதர்களை அனுப்புவார்; அவர்கள் அவரால் தெரிந்துக்கொள்ளப்பட்டவர்களை வானத்தின் ஒருமுனை முதற்கொண்டு மறுமுனை மட்டும் நாளு திசைகளிலுமிருந்து கூட்டிச்சேர்ப்பார்கள்" (மத்தேயு 24:31)*** .

***1.தெசலோனிக்கேயர் 4:14-17-***ல் பவுல் மேலும் இதைப்பற்றிக் கூறுகிறார்,

***"அப்படியே இயேசுவுக்குள் நித்திரையடைந்தவர்களையும் தேவன் அவரோடே கூட கொண்டு வருவார். கர்த்தருடைய வருகை மட்டும் உயிரோடிருக்கும் நாம் மரித்தவர்களுக்கு முந்திக்கொள்வதில்லை. ஏனெனில் கர்த்தர் தாம்ற் ஆரவாரத்தோடும், பிரதான தூதனுடைய சத்தத்தோடும், தேவ எக்காளத் தோடும் வானத்திலிருந்து இறங்கி வருவார்; அப்பொழுது கிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள் முதலாவது எழுந்திருப்பார்கள். பின்பு உயிரோடிருக்கும் நாமும் கர்த்தருக்கு எதிர்கொண்டுபோக, மேகங்கள்மேல் அவர்களோடேகூட ஆகா யத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டு, இவ்விதமாய் எப்பொழுதும் கர்த்தருடனே கூட இருப்போம்"***

மரித்தோர் உயிர்த்தெழுவார்கள். பின்பு உயிரோடிருக்கிறவர்களும் ஒன்றாகக் கூட்டிச் சேர்க்கப்படுவார்கள். அவர்கள் கர்த்தராகிய இயேசுவுக்கு முன் தோன் றுவார்கள். நித்தியஜீவனை அவர்களுக்குக் கொடுக்கும் முன்பதாக அவர்க ளுக்கு நியாயத்தீர்ப்பு இருக்கும். நீங்கள்

இதைக்குறித்து இன்னும் அதிகமாக அடுத்த வாரத்தின் பாடத்தில் கேள்விப்படுவீர்கள்.

***1.கொரிந்தியர் 15:51-58***-ஐ மீண்டும் வாசியுங்கள். உண்மை விசுவாசிகளான கிறிஸ்தவர்களுக்கு மகா பெரிய ஈவாகிய நித்தியஜீவன் அளிக்கப்படும் என்று பவுல் அப்போஸ்தலன் கூறுகிறார்.
அந்தக் காலத்திற்காக நாம் காத்திருக்கும்போது, நாம் கர்த்தருடைய வேலை யில் தொடர்ந்து எப்போதும் பெருகுகிறவர்களாக இருக்கவேண்டும் என்று பவுல் அப்போஸ்தலன் கூறுகிறான்.

**நாம் நினைவுகூர வேண்டிய சில குறிப்புகள்**

1. **மரித்தோரை உயிரோடு எழுப்பும் வல்லமையை தேவன் இயேசுவுக்குக் கொடுத்திருக்கிறார்.**
2. **அவர் பூமிக்குத் திரும்ப வரும்போது இதைச் செய்வார்.**
3. **அவர் வரும்போது "கிறிஸ்துவுக்குள்" ஜீவித்துக்கொண்டிருக்கிற அனேகரை அதே வேளையில் கூட்டிச் சேர்ப்பார்.**
4. **உண்மையாய் ஜீவிக்கிறவர்களுக்கு நித்தியஜீவனை அவர் கொடுப்பார். அவர்கள் அவரோடுகூட வாழ்ந்து அரசாளுவார்கள்.**

**இது கிறிஸ்டடெல்ஃபியன் வேதாகம சங்கத்தாரால் இலவசமாக வெளியிடப்பட்டது.**

**பாடம் எண் 14**

................................................................................................................................

## *நியாயாசனம்*

**வார வாசிப்புகள்: -ஆதியாகமம் அதிகாரங்கள் 45-47,**
**பிலிப்பியர், - அதிகாரங்கள் 3- 4.**
**பாடவாசிப்பு - மத்தேயு - அதிகாரம் 25.**

இயேசுவை யூதாஸ் காட்டிக்கொடுத்த அன்று ராத்திரியில் அவர் அவனுக்குக் கடைசி எச்சரிப்பைக் கொடுத்தார்.

***"மனுஷகுமாரன் தம்மைக்குறித்து எழுதியிருக்கிறபடியே போகிறார்; ஆகிலும், எந்த மனுஷனால் மனுஷகுமாரன் காட்டிக்கொடுக்கபடுகிறாரோ, அந்த மனுஷனுக்கு ஐயோ! அந்த மனுஷன் பிறவாதிருந்தானானால் அவனுக்கு நலமாயிருக்கும்" (மாற்கு 14:21).***

தனது எஜமானனை காட்டிக்கொடுத்ததின்மூலம், யூதாஸ் கர்த்தராகிய இயே சுவுக்கு விரோதமாக அறிந்து தெரிந்து பொல்லாத வழியை தெரிந்தெடுத்தான். ஒவ்வொரு தலைமுறையிலும் கர்த்தருக்கு விரோதமாக கடின இருதயத்தோடு

திரும்பி, பொல்லாதவழிகளைத் தெரிந்துகொள்ளும் மனிதர்கள் இன்னும் இருக்கிறார்கள். அவர்கள் ஒளியைவிட இருளையே விரும்பினதின் பொறுப்பை தாங்களே சுமந்தே தீரவேண்டும். அப்படிப்பட்டவர்களுக்கு கடினமான நியாய தீர்ப்பு தேவைப்படுகிறது.

அதினாலேயே இயேசு யூதாஸைப்பற்றி, **"அப்படிப்பட்ட மனுஷன் பிறவாதி ருந்தானானால் அவனுக்கு நலமாயிருக்கும்"** என்று கூறினார்.

**ஒரு நியாயத்தீர்ப்பு நடந்தே தீரவேண்டும்.**

இதைக்குறித்து நினைத்துப் பார்த்தால், உயிர்த்தெழுதலுக்குபின்பு கட்டாய மாக ஒரு நியாயத்தீர்ப்பு அவசியம் என்று நாம் கூறுவோம். தேவன் அன்புள்ள வர். ஆனாலும் அவர் நீதியும், நேர்மையும்

உள்ளவராய் இருக்கிறார். தமது அன்பை இகழ்ந்து, நிராகரித்த ஆண்கள் பெண்களுக்கு நித்தியஜீவனை அவர் அளிப்பதில்லை. இயேசு தங்களுக்காக மரித்தார் என்று அறிந்திருந்தும், அவ ரைச் சேவிக்கவும், அவருக்குக் கீழ்ப்படியவும் எந்த முயற்சியும் செய்யாமல் இருந்தவர்களுக்குத் தண்டனை நிச்சயம் கிடைக்கும்.

sஏனெனில், ***"நாமெல்லாரும் கிறிஸ்துவினுடைய நியாயாசனத்திற்கு முன்பாக நிற்போமே"*** *என்று பவுல்* ***ரோமர் 4:10-***ல் கூறுகிறான்.

மீண்டும் ***2.கொரிந்தியர் 5:10-***ல் பவுல் கூறுகிறான்
***"ஏனென்றால், சரீரத்தில் அவனவன் செய்த நன்மைக்காவது தீமைக்காவது தக்க பலனை அடையும்படிக்கு நாமெல்லாரும் கிறிஸ்துவின் நியாயாசனத் திற்கு முன்பாக வெளிப்படவேண்டும்".***

**ஒரு நீதியுள்ள நியாயாதிபதி**
இயேசு திரும்பவரும்போது, மரித்தோரை எழுப்பி தம்மைப் பின்பற்றி அந்த
வேளையில் ஜீவிக்கிற அனைவரையும் கூட்டிச் சேர்ப்பார். அது நியாயத் தீர்ப்பின் வேளையாக இருக்கும். அந்த நியாயத்தீர்ப்புக்குபின்பு அவரால் ஏற்று கொள்ளப்பட்டவர்களுக்கு நித்தியஜீவன் கிடைக்கும். அப்பொழுது இயேசு அவர்களிடம் கூறப்போவதை **மத்தேயு 25:34-**ல் நாம் வாசிக்கலாம்,

***"வாருங்கள் என் பிதாவினால் ஆசீர்வதிக்கப்பட்டவர்களே, உலகம் உண்டானது முதல் உங்களுக்காக ஆயத்தம் பண்ணப்பட்டிருக்கிற ராஜ்யத்தைச் சுதந்தரித்துக் கொள்ளுங்கள்".***

இயேசு தாமே நியாயாதிபதியாக இருப்பார் ***யோவான் 5:28-30***-ல் இயேசு உயிர்த்தெழுதலைப் பற்றி பேசுகிறதை நாம் வாசிக்கிறோம்**,**

***"ஏனெனில், பிரேதக்குழிகளில் உள்ள அனைவரும் அவருடைய சத்தத்தைக் கேட்கும் காலம் வரும். அப்பொழுது நன்மைசெய்தவர்கள் ஜீவனை அடையும்படி எழுந்திருக்கிறவர்களாகவும், தீமைசெய்தவர்கள் ஆக்கினையை அடையும்படி எழுந்திருக்கிறவர்களாகவும் புறப்படுவார்கள்."***

***"நான் என் சுயமாய் ஒன்றுஞ்செய்கிறதில்லை; நான் கேட்கிறபடியே நியாயந்தீர்க்கிறேன்; எனக்குச் சித்தமானதை நான் தேடாமல்,***

***என்னை அனுப்பின பிதாவுக்குச் சித்தமானதையே நான் தேடுகிறபடியால், என் தீர்ப்பு நீதியாய் இருக்கிறது".***

தேவன் அவருக்குக் கொடுத்த ஞானத்தின்படியே அவர் நியாயம் தீர்ப்பார். ***ஏசாயா 11:3-4-***ல் நாம் வாசிக்கிறோம்,

***"அவர் தமது கண் கண்டபடி நியாயந்தீர்க்காமலும், தமது காது கேட்டபடி தீர்ப்புச்செய்யாமலும், நீதியின்படி ஏழைகளை நியாயம் விசாரித்து, யதார்த்தத் தின்பாடி பூமியிலுள்ள சிறுமையானவர்களுக்கு தீர்ப்புச் செய்வார்".***

மனிதர் தாங்கள் பார்த்து, கேட்கிறபடி மாத்திரம் நியாயந்தீர்க்க முடியும். ஆனால் கர்த்தராகிய இயேசு மனிதர்களின் இருதயங்களை அறிந்தவரானபடி யால், அவருடைய நியாயத்தீர்ப்பில் எந்த தவறையும் செய்யமாட்டார்.

**நியாயாசனத்தில் யார் இருப்பார்கள்?**

தேவனுடைய கிருபையான ஈவாகிய ஜீவனை ஏற்றுக்கொண்டவர்களும், கிறிஸ்துவுக்குள் ஞானஸ்நானம் பெற்றவர்களும் நியாயாசனத்துக்கு முன்பாக கூட்டிசேர்க்கப்படுவார்கள். அவர்கள் மாத்திரம் அங்கே இருப்பதில்லை. மே லும் பழையஏற்பாட்டிலுள்ள விசுவாசிகளும் அதில்கூட இருப்பார்கள். மேலும் உண்மையில்லாமல் ஜீவித்தவர்களும்கூட அதில் இருப்பார்கள். நாம் **எபிரெயர் 10:26-27-**ல் இவ்வாறு வாசிக்கிறோம்,

***"சத்தியத்தை அறியும் அறிவை அடைந்தபின்பு, நாம் மனப்பூர்வமாய்ப் பாவஞ் செய்கிறவர்களாய் இருந்தால், பாவங்களினிமித்தம் செலுத்தத்தக்க வேறொரு பலி இனியிராமல், நியாயத்தீர்ப்பு வருமென்று பயத்தோடே எதிர்பார்க்குதலும், விரோதிகளைப் பட்சிக்கும் கோபாக்கினையுமே இருக்கும்"***

தேவனையும் அவருடைய குமாரனாகிய இயேசுகிறிஸ்துவையும் அறியாத வர்களும் அந்த நியாயத்தீர்ப்புக்கு உயிர்த்தெழுவதில்லை. நீங்கள் நினைவுகூரு வீர்கள். ***சங்கீதம் 49:19-20*** கூறுகிறது,

***"அவன் என்றென்றைக்கும் வெளிச்சத்தைக் காணாத தன் பிதாக்களின் சந்ததியைச் சேருவான். கனம்***

***பொருந்தினவனாயிருந்தும் அறிவில்லாத மனுஷன் அழிந்துப்போகும் மிருகங்களுக்கு ஒப்பாயிருக்கிறான்"***

நாம் ***ஏசாயா 26:13-14***--ல் உள்ள வசனங்களை வாசித்தோமானால் இதே காரியத்தையே நமக்குப் போதிக்கிறது.

**தள்ளப்பட்டவர்களுக்கு என்ன சம்பவிக்கும்?**
கிறிஸ்துவினுடைய நியாயாசனத்துக்கு முன்பாக வந்தவர்கள் இரு வகுப்பாக பிரிக்கப்படுவார்கள். கிறிஸ்து சிலரை ஏற்றுக்கொண்டு, சிலரை தள்ளிவிடுவார். அவரால் ஏற்றுக்கொள்ளப்படுபவர்களுக்கு நித்தியஜீவனை அவர் அளிப்பார். ஆனால் தள்ளப்பட்டவர்களுக்கு என்ன சம்பவிக்கும்? அவர்களுடைய தண்ட னை என்ன?

அவர்களுடைய தண்டனையின் விவரம் நமக்குத் தெரியாது. ஆனால் அவைகளில் சில காரியங்கள் நிச்சயம் நடக்கும். முதலில் அவர்கள் எல்லோ ரும் எவ்வளவு மதியீனர்களாய் இருந்தார்கள் என்று அவர்களுக்குக் காண்பிக் கப்படும். அவர்கள் எதை இழந்தார்கள் என்பதை அறிந்து உணருவார்கள். மேலும் இது அவர்கள் மனதை வாதிக்கச்செய்யும். அப்படிப்பட்டவர்களைப் பற்றி இயேசு கூறினார்:

***"நீங்கள் ஆபிரகாமையும் ஈசாக்கையும் யாக்கோபையும் சகல தீர்க்கதரிசி களையும் தேவனுடைய ராஜ்யத்திலிருக்கிறவர்களாகவும், உங்களையோ புறம்பே தள்ளப்பட்டவார்களாகவும் காணும்போது உங்களுக்கு அழுகையும் பற்கடிப்பும் அங்கே உண்டாயிருக்கும்" (லூக்கா 13:28)***.

கடைசியாக அவர்கள் முழுவதுமாக அழிக்கப்படுவார்கள். இயேசு இந்த நியா யத்தீர்ப்பை ஒரு அறுவடைக்கு ஒப்பிட்டுப் பேசுகிறார். அதில் நல்ல தானியம் பயனற்ற களைகளிலிருந்துப் பிரிக்கப்படுகிறது. தானியம் பத்திரமாக பாதுகாக் கப்படும். களைகளோ விவசாயியின் நெருப்பிலே முழுவதுமாக சுட்டெரிக்கப் படும், **(மத்தேயு 13:36-43)**. இதே காரியத்தைப் பவுல் மிகத்தெளி வாகப் போதிக்கிறான்,

***"தேவனை அறியாதவர்களுக்கும், நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படியாதவர்களுக்கும் நீதியுள்ள ஆக்கினையைச் செலுத்தும்படிக்கு, கர்த்தராகிய இயேசு தமது வல்லமையின் தூதரோடும், ஜீவாலித்து எரிகிற அக்கினியோடும், வானத்திலிருந்து வெளிப்படும்போது அப்படியாகும்.***

***அவர்கள் கர்த்தருடைய சந்நிதானத்திலிருந்தும், அவருடைய வல்லமைபொருந்திய மகிமையிலிருந்தும் நீங்கலாகி, நித்திய அழிவாகிய தண்டனையை அடைவார்கள்" (2.தெசலோனிக்கேயர் 1:7-8,10).***

**அன்பு அல்லது பயம்**

நியாயத்தீர்ப்பைக்குறித்து நமது நிலைமை என்னவாக இருக்கும் என்று நம்மை எச்சரிக்கக்கூடிய சில வேதபகுதிகள் உள்ளன. இவற்றில் சில வேத வாக்கியங்கள் நம்முடைய மனதை தைரியத்தினால் நிரப்பி, நம்மை உற் சாகப்படுத்துவதாய் உள்ளன. இதைக்குறித்து எந்த மனபேதமும் இருக்கக் கூடாது. நமக்கு நம்மில்நாமே தைரியம் கொண்டிருப்பது தவறாகும். அதற்குப் பதிலாக, தேவனுடைய இரட்சிப்பின் வல்லமையில் நாம் நம்பிக்கை வைத்தால் அதுவே சிறந்ததாகும்.

நாம் முதலில் தேவனுக்குப் பயந்தவர்களாய் இருக்கும்போது நாம் போகப் போக அவரை நேசிக்கக் கற்றுக்கொள்வோம். இவ்வாறு அவரில் முழுநம் பிக்கை வைப்போம். யோவான் இவ்வாறு கூறுகிறான்,

***"அன்பிலே பயமில்லை; பூரண அன்பு பயத்தைப் புறம்பே தள்ளும்; பயமானது வேதனையுள்ளது; பயப்படுகிறவன் அன்பில் பூரணப்பட்டவன் அல்ல" (1.யோவான் 4:18).***

எனவே நாம் செய்யவேண்டியதை யோவான் முந்தி கூறுகிறான், ***"நியாயத் தீர்ப்பு நாளிலே நமக்குத் தைரியம் உண்டாயிருக்கத்தக்கதாக அன்பு நம்மிடத்தில் பூரணப்படுகிறது" (1.யோவான் 4:17).***

**பாடப் பொருள்**

1. **நியாயத்தீர்ப்பு நாள் ஒன்று நிச்சயமாக வரும்.**
2. **அது உயிர்த்தெழுதலைத் தொடர்ந்து வரும்.**
3. **தேவனுடைய சத்தியத்தை அறிந்த அனைவரும் நியாயத் தீர்ப்புக்குக் கொண்டு வரப்படுவார்கள்.**
4. **கிறிஸ்துவினுடைய நியாயாசனத்திற்குமுன் அவரால் ஏற்றுக் கொள்ளப்பட்டவர்களுக்கு நித்தியஜீவன் கிடைக்கும்.**

5. அந்த நியாயத்தீர்ப்பில் அவரால் தள்ளப்பட்டவர்கள் மனதில் கிலேசப்பட்டு, பின்பு முற்றிலும் அழிக்கப்படுவார்கள்.

தயவுசெய்து இந்தப் புத்தகத்தின் பக்கம் 101-ல் காணும் இந்தப் பாடத்துக்குச் சம்பந்தப்பட்ட விடைத்தாளுக்குச் சென்று, “ஆசிரியர் பிரதி”யை எங்களிடம் அனுப்பி வையுங்கள்.

**இது கிறிஸ்டடெல்ஃபியன் வேதாகம சங்கத்தாரால் இலவசமாக வெளியிடப்பட்டது.**

**பாடம் எண் 15**

---

## *பிதா மற்றும் குமாரன்*

**வார வாசிப்புகள்: ஆதியாகமம், அதிகாரங்கள் 48-50,**
**1.பேதுரு, அதிகாரங்கள் 1- 3.**
**பாட வாசிப்பு : ஏசாயா, அதிகாரம் 45.**

ஒரு முறை இயேசு தமது பிதாவிடம் ஜெபிக்கும்போது, இந்த வார்த்தைகளை அவர் பயன்படுத்தினார், ***"ஒன்றான மெய்த்தேவனாகிய உம்மையும் நீர் அனுப்பினவராகிய இயேசுகிறிஸ்துவையும் அறிவதே நித்தியஜீவன்" (யோவான் 17:3)***.

ஆகையால் நாம் பிதாவாகிய தேவனையும், அவருடைய குமாரனாகிய இயேசுகிறிஸ்துவையும் அறிந்திருக்க வேண்டும். நித்தியஜீவன் இந்த அறிவைப் பொறுத்ததாகும்.

நாம் வேத வசனத்தை வாசிக்கிறதைத் தவிர வேறெந்த வழியில் தேவனையும், கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவையும் பற்றி கற்றுக்கொள்ள முடியும்? தேவன் தாமே நமக்களித்த செய்தியை வாசித்தாலொழிய, நாம் அவரைக்குறித்து எதையும் அறிய வாய்ப்பில்லை.

தேவன்தாமே கூறியுள்ளார், ***" என் நினைவுகள் உங்கள் நினைவுகள் அல்ல; உங்கள் வழிகள் என் வழிகளும் அல்ல; பூமியைப் பார்க்கிலும் வானங்கள் எப்படி உயர்ந்திருக்கிறதோ, அப்படியே உங்கள் வழிகளைப் பார்க்கிலும் என் வழிகளும், உங்கள் நினைவுகளைப் பார்க்கிலும் என் நினைவுகளும் உயர்ந்திருந்திருக்கிறது" (ஏசாயா 55:8-9)***.

### எல்லாருக்கும் ஒரே தேவனும் பிதாவும்

வேதாகமத்திலிருந்து தேவனைப்பற்றி எதைக் கற்றுக்கொள்ள முடியும்? அப் போஸ்தலனாகிய பவுல் தீமோத்தேயுவுக்கு எழுதும்போது.

இவ்வாறு கூறுகிறான் ***"அவரே நித்தியானந்தமுள்ள ஏகசக்கராதிபதியும், ராஜாதிராஜாவும், கர்த்தாதி கர்த்தாவும், ஒருவராய் சாவாமையுள்ளவரும்,, சேரக்கூடாத ஒளியில் வாசம்பண்ணுகிறவரும், மனுஷரில் ஒருவரும் கண்டிராதவரும், காணக் கூடாதவருமாய் இருக்கிறவர்; அவருக்கே கனமும் நித்திய வல்லமையும் உண்டாயிருப்பதாக" (1.தீமோத்தேயு 6:15-16)***.

தேவனுடைய வல்லமையையும், பரிசுத்தத்தையும்குறித்து மாத்திரமே வேதாக மம் கூறுகிறதுண்டானால் அவருக்கு நான் நிச்சயமாக பயப்படவேண்டும். அதனால் அவரை நேசிப்பது நமக்கு கடினமாகத் தோன்றலாம். தேவன் இரக்கமும் கிருபையும் உள்ளவர் என்பதை நமக்குக் காட்டியுள்ளார்.

மோசே இஸ்ரவேல் ஜனங்களை வனாந்திரத்தினூடே வழிநடத்தும்போது, சந்தித்த பிரச்சனைகளைக் கண்டு அவன் சோர்ந்துப்போனான். அவன் தொ டர்ந்து ஊழியஞ்செய்யும்படி, உதவிசெய்ய தேவனிடம் ஜெபிக்கும்போது இவ் வாறு கூறினான், ***"உமது மகிமையை எனக்குக் காண்பியும்."*** இதைக் குறித்து நாம் ***யாத்திராகமம் 33:17-23***, மற்றும் **34:6-7**-ல் மோசேக்குத் தேவன் தம்மை வெளிப்படுத்தினார்.

**"கர்த்தர், கர்த்தார்; இரக்கமும், கிருபையும், நீடிய சாந்தமும், மகா தயையும், சத்தியமுமுள்ள தேவன்" (யாத்திராகமம் 34:6)**.

தேவனுடைய நன்மைகளைக் குறித்து நாம் நினைக்கும்போது, சங்கீதக்கார னோடுகூட சேர்ந்து, ***"என் ஆத்துமாவே கர்த்தரை ஸ்தோத்தரி; என் முழு உள்ளமே, அவருடைய பரிசுத்த நாமத்தை ஸ்தோத்தரி" (சங்கீதம் 103:1)*** என்று நாமும் சொல்லக்கூடும்.

**தேவனுடைய குமாரன்.**

ஆதிமுதற்கொண்டு, தேவன் தமது குமாரனை நமது இரட்சகராக அனுப்பும் படி திட்டம் வைத்திருந்தார். இயேசுவைப்பற்றி அநேக தீர்க்கதரிசனங்கள் பழையஏற்பாட்டில் உள்ளன. அவற்றில் ஒன்று, ஏசாயா 7:14-ல் நாம் வாசிக்கிறோம்,

***"இதோ, ஒரு கன்னிகை கர்ப்பவதியாகி, ஒரு குமாரனைப் பெறுவாள், அவருக்கு இம்மானுவேல் என்று பேரிடுவார்கள்".***

***இம்மானுவேல் என்பதற்கு "தேவன் நம்மோடு" என்று அர்த்தமாம்***. இதில் தேவன் தம்முடைய சொந்தக் குமாரனை அனுப்புவதாக வாக்குத்தத்தம் அருளியுள்ளார். அதனால், அப்போஸ்தலனாகிய பவுல் கூறினவிதமாக அது நிறைவேறிற்று,

***"காலம் நிறைவேறினபோது, ஸ்திரீயினிடத்தில் பிறந்தவரும், நியாயப் பிரமாணத்திற்குக் கீழானவருமாகிய தம்முடைய குமாரானை தேவன் அனுப்பினார்" (கலாத்தியர் 4:5).***

அவருடைய பிறப்புக்கு முன்பு, தேவதூதன் அவருடைய தாயாரிடம் கூறினது என்னவென்றால்,

***"பரிசுத்த ஆவி உன்மேல் வரும்; உன்னதமானவருடைய பலம் உன்மேல் நிழலிடும்; ஆதலால் உன்னிடத்தில் பிறக்கும் பரிசுத்தமுள்ளது தேவனுடைய குமாரன் என்னப்படும்" (லூக்கா 1:35)***

அவருடைய பிரசங்க ஊழியம் ஆரம்பிக்கிறதற்குமுன்பு, யோர்தான் நதியில் யோவானால் இயேசு ஞானஸ்நானம் பெற்றார். அந்தவேளையில் தேவன் அவ ருக்குப் பரிசுத்த ஆவியை அளித்தார். அதன் அர்த்தம், அவரிடம் அளவில் லாத வல்லமை இருந்தது என்பதாகும். மேலும் தேவன் இயேசுவிடம் கூறி னார், :***நீர் என்னுடைய நேசகுமாரன்; நான் உம்மில் பிரியமாயிருக்கிறேன்" (மாற்கு 1:11)***.

**கிறிஸ்துவின் சுபாவம்**

இயேசு ஒரு பெண்ணிடம் பிறந்ததால், அவருக்கு நம்மைப்போன்ற ஒரு சுபாவம் இருந்தது.

***"எவ்விதத்திலும் தாம்முடைய சகோதரருக்கு ஒப்பாக வேண்டியிருந்தது" (எபிரெயர் 2:17)***.

உண்மையாகவே இயேசுவானவர் தமது உயிர்த்தெழுதலுக்கு முன்பு நம்மைப் போலவே இருந்தார். அவருடைய உயிர்த்தெழுதலுக்குப் பின்பு ஒரு வல்லமை நிறைந்த அழிவில்லாத சரீரம் அவருக்குக் கொடுக்கப்பட்டது.

இயேசு தேவனுடைய குமாரனாக இருந்ததால், அவருடைய குணலட்சணம் பரிபூரணமாக இருந்தது. ஆனாலும் அவர் பலவீனமான மனிதசுபாவத்தை உடையவராகவும் இருந்தார்.

**ஒரு தவறான எண்ணம்**

அநேகர் தேவனைக் குறித்த வேதாகமப் போதனைகளைத் தள்ளிவிட்டபடி யால், அவர்கள் "திரித்துவம்" என்று அழைக்கிற ஒன்றை நம்பிவந்திருக் கிறார்கள்.

அவர்கள் நம்மிடம் கூறுவது என்னவெனில், பிதா, குமாரான், மற்றும் பரிசுத்த ஆவி என்ற மூன்று நபர்களும் தம்மில் ஒருவருக்கொருவர் சமமானவர்கள் என்றும் இவர்கள் மூவரும் தேவனுக்குள் அடங்கியுள்ளனர் என்பதாகும். (நாம் அடுத்த பாடத்தில் பரிசுத்த ஆவியானவர், அல்லது மிகத்துல்லியமாக பரிசுத்த ஆவியைக் குறித்து கவனிக்கப் போகிறோம்).

"திரித்துவம்" என்ற வார்த்தை மற்றும் "குமாரனாகிய தேவன்" என்ற சொற் றொடரும் வேதாகமத்தில் வருவதில்லை, காணப்படுவதுமில்லை. மெய்யா கவே இந்த முழு எண்ணமும் வேத போதனைக்கே எதிராகவும், விரோதமாக வும் உள்ளது. அதேவிதமாக, ஒரு குமாரன் தனது தகப்பனுக்குச் சரிசமமாக ஒருபோதும் இருக்கமுடியாது. எனவே இயேசுவும் தேவனுக்குச் சரிசமமாக ஒருபோதும் இருக்கமுடியாது. அவர் ஒருபோதும் அவ்விதமாக உறவுமில்லை. ஆனால் அனைத்து காரியங்களுக்கும் தமது பிதாவாகிய தேவனையே சார்ந்திருந்தார்.

அவர் கூறியது, ***"மெய்யாகவே மெய்யாகவே நான் உங்களுக்குச் சொல்லு கிறேன்; பிதாவானவர் செய்யக் குமாரன் காண்கிறதெதுவோ, அதையேயன்றி, வேறொன்றையும் தாமாய்ச் செய்யமாட்டார்; அவர் எவைகளைச் செய்கி றாரோ, அவைகளைக் குமாரனும் அந்தப்படியே செய்கிறார்" (யோவான் 5:19)***.

***"நானும் என் பிதாவும் ஒன்றாயிருக்கிறோம்" (யோவான் 10:30)*** என்று ஒருமுறை இயேசு கூறினது உண்மைதான்.

ஆனால் நாம் இன்னொருவரோடு கூட பரிபூரணமாக சம்மதித்தால், அந்த நபரோடு நாம் ஒன்றாக இருக்கிறோம் என்றும் கூறுவதுண்டு.

இவ்விதமாய் யோசித்தால், இயேசு தமது சீஷரோடுகூட ஒன்றாக இருந்தார், ஏனெனில், அவர் ஜெபிக்கும்போது பின்வருமாறு கூறுகிறார்,

***"நீர் என்னிலேயும் நான் உம்மிலேயும் இருக்கிறதுபோல அவர்களெல்லாரும் நம்மில் ஒன்றாயிருக்கவும், நாம்***

***ஒன்றாயிருக்கிறதுபோல அவர்களும் ஒன்றா யிருக்கவும், வேண்டிக்கொள்கிறேன்" (யோவான் 17:21)***

இபொழுது ***1.கொரிந்தியர் 15:24-28***-க்கு உங்கள் வேதாகமத்தைத் திருப் புங்கள் குறிப்பாக ***28-ஐ*** கவனியுங்கள்,

***"சகலமும் அவருக்குக் கீழ்ப்பட்டிருக்கும்போது, தேவனே சகலத்திலும் சகலமுமாய் இருப்பதற்கு, குமாரன் தாமும் தமக்குச் சகலத்தையும் கீழ்ப்படுத்தினவருக்குக் கீழ்ப்பட்டிருப்பார்" (1.கொரிந்தியர் 15:28)***.

இந்த வசனம் நமக்குக் கூறுகிறது என்னவெனில், இயேசுகிறிஸ்து இந் தப் பூமியில் 1000 ஆண்டுகள் அரசாட்சி செய்து முடித்தப்பின், அவருடைய பிதாவாகிய தேவனுக்குக்கீழே அடங்கியிருப்பார். அப்போது தேவன் மாத்திரம் எல்லாவற்றுக்கும் எல்லாமுமாய் இருப்பார்.

**திரித்துவம் என்ற நம்பிக்கை எங்கேயிருந்து வந்தது?**

ஆதிகிறிஸ்தவர்கள் திரித்துவத்தில் நம்பிக்கை வைக்கவில்லை. அவர்-கள் வேதாகமம் போதித்ததையே விசுவாசித்தார்கள். அவர்கள்

***"தேவன் ஒருவரே. தேவனுக்கும் மனுஷருக்கும் மத்தியஸ்தரும் ஒருவரே, மனுஷனாகிய கிறிஸ்து இயேசு அவரே" (1.திமோத்தேயு 2:5-6) என்று*** விசுவாசித்தனர்.

கிறிஸ்து பிறந்து சுமார் 300 ஆண்டுகளுக்குப் பின்பு தான் கிறிஸ்த வர்கள் "திரித்துவம்" என்பதில் நம்பிக்கை வைக்க ஆரம்பித்தனர். இந்த நம்பிக்கை வேதாகமத்தின் அடிப்படையில் இருக்கவில்லை. மேலும் ஒரே மெய்யான தேவனைப்பற்றி அறியாதிருந்த புராதன கிரேக்கர்களின் எண்ணங்களின்மேல் இது ஆரம்பித்தது.

**தல் கிறிஸ்தாவர்களின் உண்மையான நம்பிக்கை**

இயேசு பரத்திற்குப் போனபின் சுமார் 100 ஆண்டுகள் ஆனபின் **"அப்போஸ்த லர்களின் விசுவாசப்பிரமாணம்"** என்பது உருவாயிற்று. இது ஆதிகிறிஸ்தவர் களின் விசுவாசத்தை முன்வைத்தது. நாம் வாசிக்கிறோம்:

**“வானத்தையும் பூமியையும் படைத்த சர்வவல்லமையுள்ள பிதாவாகிய ஒரே தேவனை விசுவாசிக்கிறேன்; அவருடைய ஒரே குமாரனாகிய நம்முடைய நாதர் இயேசுகிறிஸ்துவையும் விசுவாசிக்கிறேன்; அவர் பரிசுத்த ஆவியினாலே கன்னிமரியாளிடத்தில் உற்பவித்து பிறந்தார்”**

வேதாகமத்தின் உண்மையான போதனையாகும்.

**பாடப் பொருள்**

1. ஒரே தேவன் மாத்திரம் உண்டு.
2. தேவன் “மூன்றில்-ஒருவரல்லர்”. திரித்துவத்தின் உபதேசம் வேதாகமத் தில் இல்லை.
3. இயேசு கிறிஸ்து தேவன் அல்ல. அவர் தேவனுடைய குமாரன்.
4. இயேசு மனிதனாய் இருந்தாலு,ம் அவர் மற்ற எல்லாமனிதரைக் காட்டிலும் மிகமிகப் பெரியவர்.
5. அவருடைய பிறப்பு ஒரு பெரிய அதிசயம். ஏனென்றால், அவாருடைய தாயார் ஒரு கன்னிகையாயிருந்தார். அவருடைய ஒரே பிதாவான தேவன் சர்வவல்லமையுள்ளவர்.

**இது கிறிஸ்டடெல்ஃபியன் வேதாகம சங்கத்தாரால் இலவசமாக வெளியிடப்பட்டது.**

**பாடம் எண்.16**

........................................................................................................................

## *தேவனுடைய பரிசுத்த ஆவி*

**வார வாசிப்புகள்: யாத்திராகமம், அதிகாரங்கள் 1-6,**
**1.பேதுரு, அதிகாரங்கள் 4-5.**
**பாட வாசிப்பு: சங்கீதம் 51.**

**அளவிடமுடியாத வல்லமை**

***"ஆதியிலே தேவன் வானத்தையும் பூமியையும் சிருஷ்டித்தார்" (ஆதியாகமம் 1:1).*** ஒரு வீட்டைக் கட்டும்படிக்குச் செய்யவேண்டிய வேலைகள் அனைத்தை யும் நினைத்துப்பாருங்கள். திட்டமிடுதல், ஆயத்தம், மற்றும் ஒவ்வொருதொழி லிலும் திறமைமிக்க வேலைக்காரரின் தேவை அனைத்தையும் நினைத்துப் பாருங்கள். அதற்கென்று செலவாகும் சிந்தனை மற்றும் பெலன் எவ்வளவாக இருக்கும்! வானத்தையும் பூமியையும் சிருஷ்டிக்க எவ்வளவு சிந்தனை மற்றும் பெலன் தேவைப்பட்டிருக்கும்? இந்தப் பெரிய வேலையைச் செய்கிறதற்குத் தேவையான வல்லமை எங்கேயிருந்து கிடைத்திருக்கும்? நமக்கு சங்கீதம் இவ்வாறு கூறியுள்ளது

***"கர்த்தருடைய வார்த்தையினால் வானங்களும், அவருடைய வாயின் சுவாசத் தினால் அவைகளின் சர்வ சேனைகளும் உண்டாக்கப்பட்டது. அவர் சொல்ல ஆகும்; அவர் கட்டளையிட நிற்கும்" (சங்கீதம் 33:6,9).***

**தேவனுடைய ஆவி**

வேதாகமத்தில், தேவனுடைய நோக்கத்தை நிறைவேற்றுகிற வல்லமையே "ஆவி" என்று அழைக்கப்படுகிறது எனவே ***ஆதியாகமம் 1:2***-ல் நாம் வாசிக் கிறோம்

***"தேவ ஆவி****(யானவர்)* ***ஜலத்தின்மேல் அசைவாடிக் கொண்டிருந்தார்".*** .

மேலும் ***யோபு 26:13*** கூறுகிறது,***"தமது ஆவியினால் வானத்தை அலங்க ரித்தார்".***

தேவனுடைய வல்லமையானது வேதாகமத்தை எழுதினவர்களுடைய மனதை ஆட்கொண்டு இயக்கும்படியாகவும் பயன்படுத்தப்பட்டது. அவர்கள் தங்கள் சொந்த எண்ணங்களைக் கொண்டு அவற்றை எழுதவில்லை. தேவன் தமது வார்த்தைகளை எழுதும்படி அவர்களைப் பயன்படுத்தினார். எனவே நாம் ***2.பேதுரு ':21***-ல் இவ்வாறு வாசிக்கிறோம்,

***"தீர்க்கதரிசனமானது ஒரு காலத்திலும் மனுஷருடைய சித்தத்தினாலே உண்டாகவில்லை; தேவனுடைய பரிசுத்த மனுஷர்கள் பரிசுத்த ஆவியினாலே ஏவப்பட்டுப் பேசினார்கள்".***

"தீர்க்கதரிசனம்" நாம் பேசும்போது, எதிர்காலத்தில் நடக்கக்கூடியவைகளை முன்னுரைப்பதை வழக்கமாக நாம் நினைப்பதுண்டு..ஆனால் வேதாகமத்தில் கூறப்படுகிற **"தீர்க்கதரிசனம்"** என்ற வார்த்தையின் அர்த்தம், கடந்த காலம், நிகழ்காலம், அல்லது எதிர்காலத்தைக்குறித்த தேவனுடைய வார்த்தைகளைப் பேசுவது ஆகும்.

தேவனுடைய ஆவி என்பது அவருடைய "பரிசுத்த ஆவி" என்று அழைக்கப் பட்டதை பேதுரு எழுதின வார்த்தைகளில் கவனித்திருப்பீர்கள். **"பரிசுத்த"** என்ற வார்த்தையின் அர்த்தம், "ஒரு சிறப்பான நோக்கத்துக்காக பிரித்தெடுக் கப்படுவதைக்" குறிக்கும். வேதாகமத்தில் நாம் "பரிசுத்த ஆவி" என்று வாசிக் கிறோம். ஆனால் கிரேக்க வார்த்தையில் மொழிபெயர்க்கப்பட்ட "ஆவி" (மாயாரூபம்) என்பது பிறஇடங்களிலும் "ஆவி" என்றும் மொழிபெயர்க்கப்பட் டுள்ளது. மாயா ரூபத்தைக் குறித்த "ஆவி" என்ற வார்த்தையானது மிகவும் சுலபமாக தவறாய்ப் புரிந்துக்கொள்ளக்கூடியதாக இருக்கிறபடியால், "பரிசுத்த ஆவி" என்பதை தேவனுடைய வல்லமை என்று எடுத்துக்கொள்வது நல்லதாக இருக்கும்.

**பரிசுத்த ஆவி மற்றும் கர்த்தராகிய இயேசுகிறிஸ்து**

இயேசுகிறிஸ்துவின் பிறப்புக்குக் காரணமாயிருந்தது பரிசுத்த ஆவியாகும். மரியாளுக்குத் தேவதூதனால் இவ்வாறே கூறப்பட்டது, ***"பரிசுத்த ஆவி உன்மேல் வரும்; உன்னதமானவருடைய பலம்***

***உன்மேல் நிழலிடும்; ஆதலால் உன்னிடத்தில் பிறக்கும் பரிசுத்தமுள்ளது தேவனுடைய குமாரன் என்னப்படும்'' (லூக்கா 1:35)***. இந்த இடத்தில், ''பரிசுத்த ஆவி'' என்பதும் ''உன்னதமானவருடைய பலம்'' என்பதும் ஒன்றே, அவையிரண்டும் அதே காரியத்தைக் குறிக்கிறது. இயேசு யோர்தான் நதியில் ஞானஸ்நானம் பெற்றபோது அவருக்குப் பரிசுத்த ஆவி அளவில்லாமல் கொடுக்கப்பட்டதைக் குறித்து யோவான் குறிப்பிடுகிறான், ***"தேவனால் அனுப்பப்பட்டவர் தேவனுடைய வார்த்தைகளைப் பேசுகிறார்; தேவன் அவருக்குத் தமது ஆவியை அளவில்லாமல் கொடுத்திருக்கிறார்'' (யோவான் 3:34).***

இயேசுவுக்குச் சகல வல்லமையும் அளிக்கப்பட்டது. வேதாகமத்தில் பிற மனி தருக்குத் தேவன் தமது ஆவியின் ஒரு பகுதியை அளித்தார். ஆனால், தேவன் இயேசுவுக்குக் கொடுத்த வல்லமையைப்போல எந்த ஒரு மனிதனும் அப்படிப் பட்ட வல்லமையைப் பெற தகுதி பெறவில்லை.

**சீஷர்களுக்குப் பரிசுத்த ஆவி வாக்குத்தத்தம் பண்ணப்பட்டது**.

அவர்களிடமிருந்து அவர் போனபின்பு, இயேசு தமது பன்னிரெண்டு சீஷர்க ளுக்கும் பரிசுத்த ஆவியை அளிப்பதாக வாக்குப்பண்ணி இருந்தார். யோவான் இதைக்குறித்து எழுதுகிறான்,

***"நான் உங்களுடனே தங்கியிருக்கையில் இவைகளை உங்களுக்குச் சொன் னேன். என் நாமத்தினாலே பிதா அனுப்பப்போகிற பரிசுத்த ஆவியாகிய தேற்றரவாளனே எல்லாவற்றையும் உங்களுக்குப் போதித்து, நான் உங்களுக் குச் சொன்ன எல்லாவற்றையும் நினைப்பூட்டுவார்'' (யோவான் 14:25-26)***.

இங்கே இயேசு ஒரு மனிதனைக் குறித்து பேசுகிறதுபோல, பரிசுத்த ஆவி யைக் குறிப்பிடுகிறார். இதனால் சிலர் இது ஒரு நபர் அல்லது கடவுளில் ஒரு-வர் என்று தத்ரூபமாக நினைக்கிறார்கள். ஆனால் நாம் ஏற்கனவே வேதாக மத்திலிருந்து தெளிவாகப் பார்த்திருப்பது என்னவெனில், அவருடைய பரிசுத்த ஆவி என்பது தேவனுடைய வல்லமையைக் குறிக்கிறது எனவே இந்த எண்ணம் சரியாக இருக்கமுடியாது என்பதை நாம் அறிவோம். பின்னே ஏன் இயேசு பரிசுத்த ஆவியை சில வேதவாக்கியங்களில் ஒரு நபருக்கு ஒப்பிட்டுப் பேசுகிறார்? இப்போது ***சங்கீதம் 65:13***-க்கு உங்கள் வேதத்தைத் திருப்பி படி யுங்கள்.

***“மேய்ச்சலுள்ள வெளிகளில் ஆடுகள் நிறைந்திருக்கிறது; பள்ளத்தாக்குகள் தானியத்தால் மூடியிருக்கிறது; அவைகள் கெம்பீரித்துப் பாடுகிறது”***

இப்போது, இதை நாம் வாசிக்கையில், தானியங்கள் பள்ளத்தாக்குகளில் விளைந்து கெம்பீரித்து நிற்கிற ஒரு அழகான சித்திரத்தை அது நமக்குத் தரு கிறது. ஆனால் ஒரு நிமிஷம்,பள்ளத்தாக்குகள் கெம்பீரித்துப் பாடுகின்ற காட் சியைக் கற்பனை செய்யத் தூண்டுகிறது! இந்தச் சித்திரத்தை விளக்குவது நமது சங்கீதக்காரனின் போக்காகும்.

எனவே இயேசு பரிசுத்த ஆவியை ஒரு நபருக்கு ஒப்பிட்டுப் பேசுகையில் இந்த ஆவி அல்லது தேவனுடைய வல்லமை எவ்வளவு உண்மையானது என்ப தைக் காட்டும்படியாக அப்படிக் கூறினார். என்று விளங்குகிறது.

**சீஷர்கள்மேல் ஆவி வருகிறது.**

இயேசு பரலோகத்துக்கு ஏறுமுன்பு, தமது சீஷர்களுக்கு இயேசுவானவர் வல்ல மையை வாக்குப்பண்ணினார் என்று பார்த்தோம். அவர்கள் எருசலேமில் தங் கியிருந்து ***“பிதா வாக்குத்தத்தம் பண்ணினதை” (அப்போஸ்தலர் 1:5)*** பெறும்வரை காத்திருக்கும்படி அவர் கூறினார்.

மேலும் ***“நீங்கள் சில நாளைக்குள்ளே பரிசுத்த ஆவியினாலே ஞானஸ்நானம் பெறுவீர்கள்” (அப்போஸ்தலர் 1:4)*** என்றும் அவர்களுக்கு வாக்குப்பண்ணினார்.

***அப்போஸ்தலர் 2-ம் அதிகாரத்தில்*** சீஷர்கள் காத்துக்கொண்டிருக்கையில், பரிசுத்த ஆவி அவர்களிடம் வந்தது. ***வசனங்கள் 1-3***-ஐப் படித்துப் பாருங்கள்.

***“பலத்தகாற்று அடிக்கிற முழக்கம் போல” ஒரு சத்தம் உண்டாகி அவர்க ளிருந்த வீடு முழுவதையும் நிரப்பினது. மேலும் அக்கினிமயமான நாவுகள் போல பிரிந்திருக்கும் நாவுகள் அவர்கள் ஒவ்வொருவர் மேலும் க+ாணப் பட்டது.***

இது அவர்களுக்கு பரிசுத்த ஆவி கொடுக்கப்பட்டதின் அடையாளமாக இருந் தது. அதுமுதல், இயேசு அவர்களுக்கு வாக்கு கொடுத்தபடியே, அவர்களால் அநேக அற்புதங்களைச் செய்யமுடிந்தது.

**ஆவி நமக்கு வருகிறது**

வேதாகமத்தை எழுதினவர்கள் பரிசுத்த ஆவியின் வல்லமையால் அப்படி செய்தார்கள் என்று நாம் பார்த்தோம். மேலும் இயேசு ஒருமுறை கூறினார், ***"நான் உங்களுக்குச் சொல்லுகிற வசனங்கள் ஆவியாயும், ஜீவனாயும் இருக்கிறது" (யோவான் 6:63***).

தேவனுடைய வசனத்தை நாம் வாசிக்கும்போது, ஒருவகையில் தேவனுடைய ஆவியைப் பெறுகிறோம். இது நமது ஜீவியத்தில் ஒரு ஆச்சரியமான மாற் றத்தை உண்டுபண்ணி, தேவனுக்குப் பிரியமுள்ளவர்களாக நாம் வளர உதவ முடியும்.

எனவே நாம் வேத வசனத்தை வாஞ்சையோடும் ஜெபத்தோடும் வாசித்து, பேதுரு தன் முதல் நிருபத்தில் கூறின வார்த்தைகளை நினைவுகூருவோமாக,

***"நீங்கள் வளரும்படி, புதிதாய் பிறந்த பிள்ளைகளைப்போல, திருவசனமாகிய ஞானப்பாலின் மேல் வாஞ்சையாயிருங்கள்" (1.பேதுரு 2:3)***.

**நாம் பரிசுத்த ஆவியைப்பற்றி எதைக் கற்றுக்கொண்டோம்?**

1. **பரிசுத்த ஆவி என்பது தேவனுடைய வல்லமையாகும்.**
2. **வேதாகமம் பரிசுத்த ஆவியின் வல்லமையால் எழுதப்பட்டது.**
3. **பரிசுத்த ஆவியின் வல்லமையால் இயேசு பிறந்தார்.**
4. **தேவனுடைய தீர்க்கதரிசிகளிடம் அவருடைய ஆவியின் ஒரு பகுதி இருந்தது. ஆனால் இயேசுவுக்கு அது "அளவில்லாமல்" கொடுக்கப்பட்டது.**
5. **இயேசு பரலோகத்திற்குள் சென்றபின்பு, பரிசுத்தஆவி அவரு டைய சீஷர்களுக்குக் கொடுக்கப்பட்டது.**

**தயவுசெய்து இந்தப் புத்தகத்தின் பக்கம் 102-ல் காணும் இந்தப் பாடங்களுக்குச் சம்பந்தப்பட்ட கேள்வி/விடைத்தாளுக்குச் சென்று, "ஆசிரியர் பிரதி"யை எங்களிடம் அனுப்பி வையுங்கள்.**

**இது கிறிஸ்டடெல்ஃபியன் வேதாகம சங்கத்தாரால் இலவசமாக வெளியிடப்பட்டது.**

**பாடம் எண் 17**

.......................................................................................................................

## *பரிசுத்த ஆவி ஈவுகள்*

**வார வாசிப்புகள்: யாத்திராகமம், அதிகாரங்கள் 7-14,**
**மல்கியா, அதிகாரங்கள் 1 – 2.**
**பாட வாசிப்புகள்: எபேசியர், அதிகாரம் 4,**
**1.கொரிந்தியர், அதிகாரம் 14.**

இயேசு தமது சீஷர்களிடம், அவர்களுக்குப் பரிசுத்த ஆவி கொடுக்கப்படும், என்று வாக்குத்தத்தம் பண்ணினார். அவர் அவர்களிடம் கூறினது,

***"விசுவாசிக்கிறவர்களால் நடக்கும் அடையாளங்களாவன: என் நாமத்தினாலே பிசாசுகளைத் துரத்துவார்கள்; நவமான பாஷைகளைப் பேசுவார்கள்;சர்ப்பங் களை எடுப்பார்கள்;சாவுக்கேதுவான யாதொன்றைக் குடித்தாலும் அது அவர்களைச் சேதப்படுத்தாது; வியாதியஸ்தர்கள்மேல் கைகளை வைப்பார்கள், அப்பொழுது அவர்கள் சொஸ்தமாவார்கள்" (மாற்கு 16:17-18)*.**

இந்த வாக்குத்தத்தங்கள் ஏன் சீஷர்களுக்குக் கொடுக்கப்பட்டது?

**சீஷர்களின் செய்தி தேவனிடமிருந்து வந்தது என்பதை நிரூபித்தனர்.** இயேசு சிலுவையில் அடிக்கப்பட்டு மரித்திருந்தார். ஆனால் தேவன் அவரை உயிரோடு எழுப்பியிருந்தார். அவர் தமது சிறு மந்தையாகிய சீஷர்களிடம் ***"உலகமெங்கும் போய்,, சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள்" (மாற்கு 16:15)*** என்று கூறிவிட்டு, பரலோகத்திற்குள் சென்றார்.

அது ஒரு பெரிய வேலையாக இருந்தது. ஜனங்கள் அவர்களுக்குச் செவிகொடுப்பார்களா? அந்த நாட்களில் மரித்துப்போன ஒரு மனிதன் மீண்டும் மூன்று நாட்களுக்குப் பின்பு உயிரோடு எழுந்த கதையை நிச்சயமாக அவர்-கள் நம்பமாட்டார்கள் அல்லவா? எனவே சீஷர்கள்

கூறினசெய்தி தேவனிட மிருந்து வந்தது என்பதை அறியும்படிக்கு ஒரு அடையாளம் நடப்பிக்கும் வல் லமை அவர்களுக்குக் கொடுக்கப்பட்டது.

பெந்தேகொஸ்தே (**ஷ்விட்சன்** என்று இப்போது அழைக்கப்படுகிற) நாள் வந்த போது, தாங்கள் ஒருபோதும் கற்றிராத மொழிகளில் யூதர்களுக்கு அவர்கள் பிரசங்கித்தார்கள். அவர்கள் தேவனுடைய வல்லமையினால் அன்றி அந்த மொழிகளில் பேசியிருக்க முடியாது. இதைத்தான் ‘‘அந்நியபாஷையில் பேசுகி றது’’ அல்லது ‘‘நவமான பாஷை பேசுதல்’’ என்று அழைக்கிறோம். ஜனங்கள் ஆச்சரியப்பட்டதிலும் ,செவிகொடுத்துக் கேட்டதிலும் எந்த அதிசயமுமில்லை.

**பரிசுத்த ஆவி ஈவுகள் திருச்சபையை வழிநடத்த உதவிற்று.**
பெந்தேகொஸ்தே நாளில் பிரசங்கித்ததின் விளைவாக 3000 ஆண்-பெண்க ளும் சீஷர்களோடுகூட சேர்ந்து கிறிஸ்தவர்கள் ஆனார்கள், ***(அப்போஸ்தலர் 2:41)*** எனவே கிறிஸ்தவ திருச்சபை ஒரு நல்ல ஆரம்பத்தில் துவங்கினது.

இவ்வளவு பெரிய கிறிஸ்தவ குடும்பத்தில் என்ன பிரச்சனைகள் இருந்திருக்கும்
என்று கற்பனைச் செய்யுங்கள்.அவர்களுக்கென்று செய்யவேண்டிய ஒழுங்கு களைக் குறித்து அவர்களுக்கு ஆலோசனை கூறி, வழிநடத்தவும், போதிக்க வும் ஒருசிலர் தேவைப்பட்டனர். அவர்கள் புதிய ஏற்பாட்டிலிருந்து கற்றுக் கொள்ள முடியாதிருந்தது. ஏனெனில் அது இன்னும் எழுதப்படவில்லை.

அப்போஸ்தலர்களுடைய செய்தியின் சாரமான சத்தியத்தைக்கொண்டு புறம் பே இருக்கிறவர்களைத் திருப்திபடுத்தவும் மாத்திரம் அன்றி, ஆதி கிறிஸ்தவர் களுக்கு உதவிசெய்து, போதித்து, ஆதித்திருச்சபைகளை ஒழுங்குப்படுத்தி வைப்பதற்கென்றும் பரிசுத்த ஆவியின் ஈவுகள் அனுப்பப்பட்டன.

**இந்த ஈவுகள் எவை?**
***1.கொரிந்தியர் 12:22-ல்,*** அப்போஸ்தலனாகிய பவுல் திருச்சபை அங்கத்தினர் ஒவ்வொருவரும் எவ்வாறு வெவ்வேறு ஈவுகளை உடையவர்களாய் இருக்கிறார் கள் என்பதையும், ஒவ்வொரு

அங்கத்தினார்களும் மற்றவர்களுடைய நன்மை கென்று எவ்வாறு உழைக்கவேண்டும் என்றும் காட்டுகிறான். பின்பு ***28-29 வசனங்களில்*** அவன் அந்த ஈவுகளின் பட்டியலைக் கொடுக்கிறான்,

***"தேவனானவர் சபையிலே முதலாவது அப்போஸ்தலரையும், இரண்டாவது தீர்க்கதரிசிகளையும், மூன்றாவது போதகர்களையும், பின்பு அற்புதங்களையும், பின்பு குணமாக்கும் வரங்களையும், ஊழியங்களையும், ஆளுகைகளையும், பலவித பாஷைகளையும் ஏற்ப்.டுத்தினார்"***

முதல் மூன்று ஈவுகளும் மிக முக்கியமானவைகள். மேலும் அவைகள் ஆதி கிறிஸ்தவர்களுக்குப் போதிக்கும்படியாக பயன்பட்டன.

**ஈவுகளின் முடிவு**

நாம் ஏற்கனவே பார்த்தபடி ஆதிகிறிஸ்தவர்களின் நாட்களில் புதிய ஏற்பாடு இல்லை. ஏனென்றால் அப்பொழுது புதியஏற்பாடு இன்னும் எழுதப்படவில் லை. ஏன் ஆவியின் ஈவுகள் அவ்வளவு முக்கியமானவை என்பதன் காரணங் களில் இதுவும் ஒன்று என்பது ஒருசிலரின் கருத்தாகும்.

கர்த்தாராகிய இயேசுவின் ஜீவியசரித்திரத்தைப்பற்றி நாம் இப்போது படிக்க முடியும். மேலும் அப்போஸ்தலர்களின் கடிதங்களையும் நாம் படிக்கமுடியும். ஆனால் அவர்களிடம் எழுதப்பட்ட தஸ்தாவேஜீகள் எதுவும் இருக்கவில் லை. அப்போஸ்தலர்கள், தீர்க்கதரிசிகள், மற்றும் போதகர்கள் தங்களு டைய ஆவியின் ஈவுகளோடு முதல் திருச்சபைகளுக்கு ஒரு தேவைப்பட்ட உதவியாக இருந்தனர்.

எப்பொழுது புதிய ஏற்பாட்டு எழுத்துக்கள் எழுதி முடிக்கப்பட்டதோ, அந்தச் சமயத்திலிருந்து தேவனிடமிருந்து எந்த சிறப்பான உதவிகளும் தேவைப்ப டாமல் இருந்தது. கிறிஸ்தவர்கள் அறியும்படி தேவையான அனைத்துக் காரி யங்களும் வேதாகமத்தில் எழுதி வைக்கப்பட்டுள்ளதால், ஆவியின் ஈவுகள் நம்மைவிட்டு நீக்கப்பட்டு விட்டன,

அப்போஸ்தலனாகிய பவுல் இப்படி நடக்கும் என்று கூறுகிறான்,

***“அன்பு ஒருக்காலும் ஒழியாது, தீர்க்கதரிசனங்களானாலும் ஒழிந்துபோம்; அந்நிய பாஷைகளானாலும் ஓய்ந்துபோம்; அறிவானாலும் ஒழிந்துபோம்” (1.கொரிந்தியர் 13:8).***

புதியஏற்பாடு முடிவுக்கு வந்தப்பின், ஒரு குறிப்பிட்ட நேரத்தில் அந்த ஈவுகள் எடுக்கப்பட்டு திடீரென்று நீக்கப்படவில்லை என்பது போன்று தோன்றுகிறது. ஆனால் காலஞ்செல்லும்போது இந்த ஈவுகளைக் கொண்டவர்கள் மரித்துப் போயினும் அவர்களைப் பின்பற்றின கிறிஸ்தவர்களுக்கு அவைகள் கொடுக்கப் படவில்லை.

**இந்த ஈவுகளை இன்று யாராவது கொண்டிருக்கிறார்களா?**

ஆனால் சிலர் இந்த ஆவியின் ஈவுகளை செயல்படுத்துகிறதாய் கூறுகின்றனர். விசேஷமாக அந்நியபாஷை பேசுதல், வியாதியஸ்தரைக்குணமாக்குதல் முதலி யவைகளை உடையவர்கள் என்று பேசிக்கொள்கின்றனர். தேவனுடைய ஆவி யைக் கொண்டுதான் அற்புதங்களைச் செய்கிறார்கள் என்பதை நாம் எவ்வாறு சோதித்து அறியமுடியும்?

முதலாவதாக அப்போஸ்தலனாகிய பவுல் 1.கொரிந்தியர் 113-ம் அதிகாரத்தில், இந்த “ஈவுகள்” ஓய்ந்து போகும் காலம் ஒன்று வரப்போவதாக கூறினான் என் பதை நாம் நினைவுப்படுத்திக் கொள்ளவேண்டும். புதிய ஏற்பாட்டு முடிவடை யும்போது இந்தக்காலம் ஆரம்பிக்கவில்லை என்றால், பின்னே எப்போது ஆரம்பிக்கும்? நிச்சயமாக அது வரப்போகிற ராஜ்யத்தில் இராது. ஏனென்றால், அப்போது அதில் இன்னும் அதிகமான ஈவுகள் இருக்கும். உண்மையில் பரிசுத்தஆவி ஈவுகள் “வரப்போகிற உலகத்தின் வல்லமைகள்”என்று அழைக்க படுகிறது.ஆகையால் தான் முதல் அப்போஸ்தலர்கள் அந்த ஈவுகளின் “முதற் பலன்களை” உடையவர்களாய் இருந்தனர்.

இரண்டாவதாக, பரிசுத்தஆவி ஈவுகள் உண்மை திருச்சபைக்கு உதவும்படி கொடுக்கப்பட்டன என்பதைக் கவனியுங்கள். உண்மை திருச்சபை தேவனு டைய வார்த்தையை விசுவாசித்து அதையே போதிக்கின்றன. இந்நாட்களில் இந்த வல்லமைகளை நாங்கள் கொண்டுள்ளோம் என்று உரிமை பாராட்டுகிற பெரும்பான்மையானோர் (எல்லாருமல்ல) தேவனுடைய வார்த்தையில்

போதிக் கப்படாத காரியங்களைப் பிரசங்கிக்கின்றனர்.ஆகையால் நாம் இப்படிப்பட்ட உரிமைக்கொண்டாடுதல்களை நிராகரிக்கவேண்டும்.

மூன்றாவதாக, இப்படிப்பட்ட அநேக அற்புதங்களைக்கொண்டு நாங்கள் ஈர்க்க படவில்லை என்பதை நாம் அறிக்கையிட்டேஆகவேண்டும். அவைகளில் குணமானவை என்று கூறப்படுகிற அனேக அற்புதங்கள் வெகு சீக்கிரத்தில் உண்மையில் குணமாகவில்லை என்று காணப்படுகிறது. இவைகளில் சில விஞ்ஞானரீதியாக விளக்கமுடியும். உதாரணமாக, கண்கட்டும் மந்திரவாதிக ளுக்கும் அடிக்கடி அதே பலன்களைக் காட்டமுடியும்

வேதாகமத்தில் எழுதப்பட்ட எல்லாவற்றையும் நம்புகிற ஒருவராவது இந்தக் காலத்தில் தங்களிடம் பரிசுத்தஆவி ஈவுகள் உண்டென்று கூறமாட்டார்கள். ஏனெனில், இந்த ஈவுகள், புதியஏற்பாட்டின் எழுத்துகள் முடிவடைந்தபின்பு, ஓய்ந்து மறைந்துபோகும் என்பதை அவர்கள் அறிவார்கள்.

இறுதியாக, நாம் வேதத்தை வாசிக்கும்போது, உண்மையாகவே தேவனுடைய ஆவியைப் பெறுகிறோம் என்பதை நாம் நினைவுகூரவேண்டும். நாம் இரட்சிக் கப்படவேண்டும் என்றால், இந்த தேவனுடைய அற்புதமான ஈவை நாம் பாராட்டுகிறோம் என்பதைக் காண்பித்து நம்மால் முடிந்தமட்டும் அதை வாசித்துக்கொண்டே இருக்கவேண்டும்.

**பாடப் பொருள்**

1. **பரிசுத்த ஆவி ஈவுகள் ஆதிகிறிஸ்தவர்களுக்குக். கொடுக்கப் பட்டிருந்தன.**
2. **இரண்டு நோக்கங்களுக்காக இந்த ஈவுகள் கொடுக்கப்பட் டிருந்தன. அ) அவிசுவாசிகளுக்கு ஒரு அடையாளமாக இருப்பதற்காக. ஆ) ஆதி திருச்சபையைக் கட்ட உதவியாக.**

3. புதிய ஏற்பாடு எழுதி முடிக்கும்வரை இந்த ஈவுகள் கொடுக்கப்பட்டிருந்தன. அதற்குப் பின்பு அவைகள் “மறைந்து ஓய்ந்து” போகவேண்டியவைகள்.
4. அதற்குப்பின் ஒருவராலும் பரிசுத்த ஆவியின் வல்லமையால் அற்புதங்களைச் செய்யமுடியவில்லை.
5. இந்த நாட்களில் அற்புதங்களைச் செய்கிறோம் என்று கூறுகிற வர்கள் கண்கட்டி மந்திரவாதிகளைப்போல் வேறு விநோதமான வல்லமையால் இதைச் செய்யக்கூடும். ஆனால் அவை ஒன்றும் பரிசுத்த ஆவியின் வல்லமையால் செய்யப் படவில்லை.

**இது கிறிஸ்டடெல்ஃபியன் வேதாகம சங்கத்தாரால் இலவசமாக வெளியிடப்பட்டது.**

**பாடம் எண் 18**

# *சிலுவை*

**வார வாசிப்புகள்: யாத்திராகமம், அதிகாரங்கள் 15-20,**
**மல்கியா, அதிகாரங்கள் 3- 4.**
**பாட வாசிப்புகள்: சங்கீதம், 22,**
**ஏசாயா, அதிகாரம் 53.**

**கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் பாடுகளைக்குறித்த தீர்க்கதரிசனம்**
நமது கர்த்தராகிய இயேசுவின் பாடுகளைக்குறித்து சுவிசேஷங்களில் நாம் வாசிக்கமுடியும். ஆனால் நாம் பழையஏற்பாட்டு தீர்க்கதரிசனங்களில் சில வற்றை வாசித்தோமென்றால், நமக்கு அதைக்குறித்த முழுகாட்சியும் கிடைக்கும்.

***சங்கீதம் 22***-க்கு திருப்புங்கள். இயேசு சிலுவையில் அறையப்படும்போது எவ்வாறு உணர்ந்திருப்பார் என்பதைபுரிந்துக்கொள்ள அது உதவுகிறது,

***"நானோ ஒரு புழு, மனுஷனல்ல; மனுஷரால் நிந்திக்கப்பட்டும், ஜனங் களால் அவமதிக்கப்பட்டும் இருக்கிறேன். என்னைப் பார்க்கிறவர்கள் எல்லாரும் என்னைப் பரியாசம்பண்ணி, உதட்டைப் பிதுக்கி, தலையைத் துலுக்கி: கர்த்தர்மேல் நம்பிக்கையாயிருந்தானே, அவர் இவனை விடுவிக்கட்டும்; இவன்மேல் பிரியமாயிருக்கிறாரே, இப்பொழுது இவனை மீட்டுவிடட்டு மென்கிறார்கள்" (சங்கீதம் 22:6-8)***.

வேதனையினால் மாத்திரமல்ல, சிலுவையில் அறையப்படுகிறதின்மூலம் வரும் அவமானத்தினாலும், அழுந்தப்பட்ட பாரத்தையும் சுமந்தார். இந்தச் சங்கீ தத்தை மிகவும் கவனமாக படியுங்கள். ஒருவேளை வேதாகமத்திலுள்ள மற்ற வார்த்தைகளைவிட அதிகமாய் இந்த வார்த்தைகள், இயேசு நமக்காக சகித்த வற்றை நாம் போற்ற உதவும். மீண்டும் ***வசனங்கள் 15-16***-ஐ கவனியுங்கள்.

***"என் பெலன் ஓட்டைப்போல் காய்ந்தது; என் நாவு மேல்வாயோடே ஒட்டிக் கொண்டது; என்னை மரணத்தூளிலே போடுகிறீர்.***

***நாய்கள் என்னைச் சூழ்ந்திருக்கிறது; பொல்லாதவர்களின் கூட்டம் என்னை வளைந்துகொண்டது; என் கைகளையும் கால்களையும் உருவக்குத்தினார்கள்" (சங்கீதம் 22:15-16)***.

**ஏன் இயேசு அவ்வளவு தூரம் பாடுகள் சகித்தார்?**

இயேசு சிலுவையில் தொங்குகிற காட்சியை நாம் உற்றுநோக்கும்போது, அவர் ஒருபோதும் பாவஞ்செய்யவில்லை என்றும், ஆனால் எப்போதும் தேவனுக்குப் பிரியமானவைகளை மாத்திரம் செய்தார் என்பதையும் நினைவுகூரக்கூடும். மேலும், "ஏன் இயேசு இவ்வளவற்றையும் சகிக்கவேண்டியிருந்தது?" என்று நம்மைநாமே கேட்கிறோம்.

ஒரு காரியம் முக்கியமானது. மனிதர் பாவத்திலிருந்து இரட்சிக்கப்படுவதற்கு அது ஒன்றே வழியாக இருந்தது. இயேசுவானவர் மூன்றுமுறை தமது பிதாவிடம் பின்வரும் வார்த்தைகளைக்கூறி ஜெபித்தார், ***"பிதாவே உமக்குச் சித்தமானால், இந்தப் பாத்திரம் என்னைவிட் டு நீங்கும்படி செய்யும், ஆயினும் என்னுடைய சித்தத்தின்படியல்ல, உம்முடையா சித்தத்தின்படியே ஆகக்கடவது" (லூக்கா 22:42)***. அது முடிந்திருந்தால், தேவன் தாமே தமது குமாரனை அந்த மனோவேதனையினின்று பாதுகாத்திருக்க முடியும், என் பதை உறுதியாக கூறமுடியும். எனினும் அது ஒன்றே வழியாக இருந்தது.

**பாவத்துக்கு விரோதமான ஒரு போராட்டம்**

ஆனால் இன்னும் நாம் கேட்கக்கூடும், ஏன் இந்த சிலுவையின் பாடுகளும், அவமானமும்? இயேசு சிலுவையில் தொங்குகிறதை நாம் பார்க்கும்போது, மனித சுபாவத்திற்கு இது உண்மையாய்த் தகும் என்பது அதன் பதில்களில் ஒன்றாகும்.

நாங்கள் இதை விவரிக்க முயற்சி செய்கிறோம்; இயேசுவும் நம்மைப்போல ஒரு மனிதனாய் இருந்தார் மேலும் நம்மைப்போலவே, அவரும் தவறான காரி யங்களைச் செய்யவும். பேசவும் அடிக்கடி சோதிக்கப்பட்டார். ***"எல்லாவிதத்தி லும் நம்மைப்போல் சோதிக்கப்பட்டும், பாவமில்லாதவராயிருக்கிற" (எபிரெயர் 4:16)*** என்று நாம் வாசிக்கிறோம்.

நம்மைப்போல், அவரும் சோதிக்கப்பட்டாலும், நம்மைப் போலல்லாமல் ஒருபோதும் அவர் சோதனைக்கு இடங்கொடுக்கவில்லை. அவர் ஒருபோதும் தனக்குத்தானே இடங்கொடாமல் அவர் என்ன செய்ய தேவன் விரும்பி னாரோ, எப்போதும் அதையே செய்தார்.

ஏனெனில் அவர் நம்மைப்போலவே ஒரு சுபாவத்தைக் கொண்டிருந்தார். அந்தச் சுபாவத்துக்கு விரோதமாக அவர் தொடர்ந்து போராடிக்கொண்டே இருக்கவில்லை என்றால் அது அவரைப் பாவத்துக்கு வழிநடத்தியிருக்கும். ஆதாமின் மேல் மரணத்தண்டனை விதித்தபடியால், ***"பாவத்தின் சம்பளம் மரணம்" (ரோமர் 6:23)*** என்று தேவன் காட்டினார். இயேசுவின் சிலுவை மரணத்தின் மூலம் (ஆதாமின் பாவமில்லாத பிள்ளையாக) மரண சுபாவ மானது அவமானத்துக்கும், சிலுவை மரணத்துக்கும் தகுதிபெற்றது என்பதை தேவன் வெளிப்படுத்தினார்.

எனினும் இயேசுவின் குணலட்சணம் குற்றமில்லாதிருந்தது. அவர் ஒருபோ தும் சிந்தையிலும், செயலிலும் பாவஞ்செய்யவில்லை. இதனாலேயே தேவன் இயேசுவை மரணத்திலிருந்து உயிரோடு எழுப்பினார். இது, பாவத்தின் சம்ப ளம் மரணம் என்ற தேவ கட்டளையை முறிக்காமல் நடந்தேறியது.

எனவே தேவன் இயேசுவுக்கு ஒரு புதிய சுபாவத்தைக் கொடுத்தார். அதன்படி அந்தச் சுபாவமானது பாவஞ்செய்ய ஒருபோதும் தூண்டாதபடியும், அதனால் ஒருபோதும் அவர் சாகாமல் இருக்கும்படியும் கொடுக்கப்பட்டது.

**சிலுவையின் பாடங்கள்**

இயேசுவின் சிலுவை மரணத்தின் மூலம், சுபாவத்தின்படி நாம் எவ்வளவு பொல்லாதவர்கள் என்பதைத் தேவன் காட்டினார். மேலும் நாம் தேவனுக்குப் பிரியமாக வாழுகிற ஒரு வாழ்க்கையை ஆரம்பிக்குமுன் இதை நாம் அறியவேண்டும்.

ஆனால் இதுதவிர வேறு முக்கியமான பாடங்களும் உள்ளன. கர்த்தராகிய இயேசு ஒரு அங்கீகரிக்கப்பட்ட பலியாக இருந்தார் என்ற உண்மையை நாம் தியானிப்பது நமக்கு நன்மையாக இருக்கும். அவர் குற்றமில்லாத ஆட்டைப் போல இருந்தார். இதனால், இயேசு

***“உலகத்தின் பாவத்தைச் சுமந்துத் தீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டி” (யோவான் 1:29)*** என்பதை விசுவாசிக்கிற அனைவருக்காகவும் கொடுக்கப்பட்ட காணிக்கையைப்போல இந்தப் பரிபூரண பலியைத் தேவன் ஏற்றுக்கொள்ள சித்தமுள்ளவராயிருந்தார்.

மற்றொரு முக்கியபாடம் என்னவெனில், கிறிஸ்துவின் சிலுவையானது நமக் கென்று தேவன் காட்டின அன்பை வெளிப்படுத்துகிறது. பவுல் இவ்விதமாக அதை முன்வைக்கிறான்,

***“தம்முடைய சொந்த குமாரனென்றும் பாராமல், நம்மெல்லாருக்காகாவும் அவரை ஒப்புக்கொடுத்தவர், அவரோடுகூட மற்ற எல்லாவற்றையும் அருளாதி ருப்பது எப்படி? (ரோமர் 8:32)***.

சிலுவையானது நமது ஜீவனின் வழியாகும். பவுல் ***1.கொரிந்தியர் 1:18-***ல் கூறுகிறபடி, ***“சிலுவையின் உபதேசம் கெட்டுப்போகிறவர்களுக்குப் பைத்திய மாயிருக்கிறது; இரட்சிக்கப்படுகிற நமக்கோ அது தேவ பெலனாயிருக்கிறது”***

**ஒரு புதிய ஜீவன்**

நாம் அனைவரும் ஆதாமின் பிள்ளைகள். எனவே ஆதாமைப்போலவே தேவ னுடைய வழிகளுக்கு விரோதமாக நமது சொந்த வழிகளைத் தெரிந்தெடுத் திருக்கிறோம்.

ஆனால் இயேசு தம்மைத்தாமே பாவத்திற்குப் பலியாக ஒப்புக்கொடுத்தபோது, நாம் தேவனுடைய பிள்ளைகளாகும்படி தேவையானவற்றைச் செய்தார். இயேசு கூறினார், ***“ஒருவன் என் பின்னே வர விரும்பினால், அவன் தன்னைத் தானே வெறுத்து, தன் சிலுவையை அனுதினமும் எடுத்துக்கொண்டு என்-னைப் பின்பற்றக்கடவன்” (லூக்கா 9:23)*** நாம் இயேசுவோடு சிலுவையில் அறையப்பட வேண்டும்! நமது பாவசுபாவத்தை நாம் சிலுவையில் அறைய வேண்டும். நம்முடைய சொந்த பாவவழிகளில் நாம் நடக்கிறதற்குப் பதிலாக, நாம் பாவத்துக்கு மரிக்கவேண்டும். மேலும் கிறிஸ்துவோடுகூட நாம் ஜீவனை புதுப்பித்தலில் நடந்து, எப்போதும் நம்முடைய சொந்த வழிகளுக்குப் பதிலாக தேவனுடைய வழியைத் தெரிந்துக்கொள்ளவேண்டும்.

அப்போஸ்தலனாகிய பவுல் நமக்குக் கூறுகிறான், ***"கிறிஸ்துவினுடையவர்கள் தங்கள் மாம்சத்தையும் அதன் ஆசை இச்சைகளையும் சிலுவையில் அறைந் திருக்கிறார்கள்.***

***நாம் ஆவியினாலே பிழைத்திருந்தால், ஆவிக்கேற்றபடி நடக்கவும் கடவோம்" (கலாத்தியர் 5:24- -25)***

பாடப் பொருள்

1. பொல்லாதவர்கள் இயேசுவை "சிலுவையில் அறையப்படுதல்" என்று அழைக்கப்பட்ட சிறிதுசிறிதாக சரீரக் கொடுமைக்குட்படுத்தி மரணத் தை அனுபவிக்கச் செய்தனர். அவரை ஆணிகளால் சிலுவையில் அடித்து அதில் அவரை மரிக்க விட்டனர்.
2. தேவன் இதை சம்பவிக்கும்படி அனுமதித்தார். ஏனெனில் நமது பாவங்களிலிருந்து நம்மை இரட்சிக்க இது ஒன்றே வழியாக இருந்தது.
3. நாம் எவ்வளவு துன்மார்க்கர் என்பதையும், இந்தவிதமான மரணத் திற்கு நாம் பாத்திரர் என்பதையும் உணரச்செய்யும்படி இது ஒன்றே வழியாக இருந்தது.
4. நாம் "இயேசுவோடு சிலுவையில் அறையப்படவேண்டும்" என்று வேதாகமம் நமக்குக் கூறுகிறது. இதன் அர்த்தம், நமது சொந்த பாவமான எண்ணங்கள் யாவும் அழிக்கப்பட வேண்டும், என்பதாகும்.
5. இயேசுவின் சிலுவை மரணம் நமக்கு மேலும் போதிப்பது என்ன வென்றால், இயேசுவைப்போல, நாமும் தேவனுக்கு எப்போதும் கீழ்ப் படிய முயற்சித்து, அது எவ்வளவு நம்மை உறுத்தினாலும் தேவனுக்கு அடிபணிந்து இருக்கவேண்டும். என்பதாகும்.

**தயவுசெய்து இந்தப் புத்தகத்தின் பக்கம் 103-ல் காணும் இந்தப் பாடங்களுக்குச் சம்பந்தப்பட்ட கேள்வி/விடைத்தாளுக்குச் சென்று, "ஆசிரியர் பிரதி"யை எங்களிடம் அனுப்பி வையுங்கள்.**

இது கிறிஸ்டடெல்ஃபியன் வேதாகம சங்கத்தாரால் இலவசமாக வெளியிடப்பட்டது.

**பாடம் எண்.19**

.........................................................................................................................

## *வேதாகமத்தில் பிசாசு*

**வார வாசிப்புகள்: யாத்திராகமம், அதிகாரங்கள் 21-26,**
**நீதிமொழிகள் அதிகாரம் 3.**
**பாட வாசிப்பு: எபிரெயர், அதிகாரம் 2.**

### நான் அதைச் செய்யவில்லை

ஒரு பிள்ளை விளையாடிக் கொண்டிருக்கையில், அநேக கிழிந்தகாகித துண் டுகளைத் தரையிலே அங்குமிங்கும் சிதறி, எறிந்திருந்தது. அந்த வேளையில் அந்த வழியைக் கடந்துச் சென்ற அதின் தாயார் அதைக் கண்டாள். ''யார் அதைச் செய்தது?'' என்று கேட்டாள். அந்தச் சிறுவன் எந்தத் தாமதமுமின்றி ''அப்பா'' என்று பதிலளித்தான்.

ாமெல்லாரும் அந்தச் சிறுவனைப்போலவே ஒருவகையில் இருக்கி றோம். நாம் அனைவரும் ஒரு தவறைச் செய்தவுடன், அதை நாம்தான் செய்தோம் என்று இலகுவில் ஒத்துக்கொள்ள விரும்புவதில்லை. வேறு யார் மேலேயாவது அந்தப் பழியைச் சுமத்த விரும்புகிறோம். அப்போஸ்தலனாகிய யாக்கோபு இவ்வாறாக நமக்குக் கூறுகிறான்,***''அவனவன் தன் சுய இச்சையினாலே இழுக் கப்பட்டு, சிக்குண்டு, சோதிக்கப்படுகிறான்'' (யாக்கோபு 1:14)*** நாம் நேர்மை யுள்ளவர்களாய் இருந்தால், நமது மனதில் இருக்கிற பொல்லாத எண்ணங் களே, நாம் செய்கிற மற்றும் பேசுகிற பொல்லாதவைகளைத் தூண்டுவதாக உள்ளது என்பதை நாம் ஒத்துக்கொண்டே ஆகவேண்டும். நமது பாவங்களை வேறு யார்மேலேயும் நாம் சுமத்த முடியாது.

### அப்படியென்றால், பிசாசு என்பது யார்?

வேதாகமம் பிசாசைக் குறித்து உண்மையாக நமக்குக் கூறுகிறது. மனிதர் தீமைசெய்யும்படி சோதிக்கக்கூடிய இயற்கைக்கு அப்பாற்பட்ட ஒரு சக்தி யில்லை என்றால், பின்னே. ''யார் அவன்'' என்று நாம் கேள்விகேட்டே தீர வேண்டும்.

வேதாகமத்திலிருந்து இதைக் கண்டுப்பிடிக்கzடியுமா என்று நாம் பார்ப்போம். தலாவதாக, ***1.யோவான் 3:8-***ஐ பார்ப்போம். இயேசு ஏன் அனுப்பப்பட்டார் என்று இந்த வசனம் நமக்குக் கூறுகிறது. ***"பிசாசினுடைய கிரியைகளை அழிக்கும்படிக்கே தேவனுடைய குமாரன் வெளிப்பட்டார்"***

நாம் சற்று முன்பு திருப்பினால் ***எபிரெயர் 2:14***-ல் நாம் வாசிக்கிறபடி அதே எண்ணம் நமக்குக் கிடைக்கிறது.

***"ஆதலால், பிள்ளைகள் மாம்சத்தையும் இரத்தத்தையும் உடையவர்க ளாயிருக்க, அவரும் அவர்களைப்போல மாம்சத்தையும் இரத்தத்தையும் உடையவரானார்; மரணத்துக்கு அதிகாரியான பிசாசானவனைத் தமது மரணத்தினாலே அழிக்கும்படிக்கும்"***.

இரண்டாவது வேத பகுதி இயேசு பிசாசை அழிக்க வந்தார் என்றும், எப்படி அதை செய்துமுடித்தார் என்றும் விளக்குகிறது. அவர் பலவீனமான மனிதசரீ ரத்தில் வந்து, பிசாசை அழிக்கும்படியாக மரித்தார்.

என்ன விநோதம்! பிசாசு மிகப் பலமும், வஞ்சனையுமுள்ள ஒரு காட்டுமிரு கத்தைப்போல இருப்பானென்றால் அது கட்டுப்படுத்தமுடியாததாய் இருந்தி ருக்கும். அதற்குப் பதிலாக வேதாகமத்தில் கூறப்பட்ட பிசாசு, இயேசு சிலு வையில் மரித்ததின்மூலம் அழித்த பிசாசு, பாவம் என்பதாகும். ***எபிரெயர் 9:26-***ல் நாம் வாசிக்கிறோம், ***"அவர் தம்மைதாமே பலியிடுகிறதினாலே பாவங் களை நீக்கும் பொருட்டாக இந்தக் கடைசிகாலத்தில் ஒரேதரம் வெளிப் பட்டார்"***.

***"இயேசு நம்மைப்போல ஒரு சுபாவத்தை உடையவரானார்"*** என்பதை முந் தின பாடம் ஒன்றில் (''சிலுவை'') பார்த்தோம். அந்த சுபாவமானது பாவத்தால் சோதிக்கப்படக்கூடியதாக இருந்தது. இயேசு பூமியில் ஜீவித்த காலமுழுவதும் பாவத்துக்கு விரோதமாக போராடினார். இறுதியாக சோதிக்கப்படக்கூடிய பாவசுபாவத்தை அழித்ததின்மூலம் அவர் பாவத்தை முற்றிலுமாக அழித்தார். இதனாலேயே தேவன் அவரை மரித்தோரிலிருந்து எழுப்பி, அழியாத மகிமை யின் சரீரத்தைக் கொடுத்தார் அது ஒரு பாவமும் இல்லாதிருந்தது.

**பிசாசு மற்றும் பாவம்**

பாவம் மற்றும் பிசாசு ஒன்று என்பதைக் காட்டும்படி சாதாரண வழி ஒன்று உண்டு. வேதாகமத்தில் எங்கெல்லாம் பிசாசைக்குறித்து கூறப்படுகிறதோ,அது எல்லாமே பாவத்தைக் குறித்ததாக உள்ளது.

- பிசாசு தேவனுடைய விரோதி, பாவமும் அதைப்போலவே தேவனு டைய விரோதி,
- பிசாசு மனிதனை சோதிக்கிறவன், பாவமும் அதைப்போலவே மனித னை சோதிக்கிறது..
- பிசாசு வஞ்சிக்கிறது. பாவமும் அதைப்போலவே வஞ்சிக்கிறது.
- பிசாசு மரணத்தை உருவாக்குகிறது. பாவமும் அதைப்போலவே மர ணத்தை உருவாக்குகிறது.
- கிறிஸ்துவினுடைய மரணத்தினாலே பிசாசு அழிக்கப்பட்டது.. பாவ மும் அதைப்போலவே அழிக்கப்பட்டது.

இந்த ஒப்பிடுதலை நாம் பார்க்கும்போது, பாவமும் பிசாசும் ஒன்றையே குறிக்கிறது.

**“பிசாசு” என்ற பதத்திற்கு உண்மயான அர்த்தம் எது?**

பிசாசு என்ற பதத்திற்கு உண்மையான அர்த்தம், “அவதூறு பேசுகிறவன்” அல்லது “பொய் குற்றஞ்சாட்டுகிறவன்” என்பதாகும். ***1.திமோத்தேயு 3:11-ல் நாம் வாசிக்கிறோம், “அப்படியே ஸ்திரீகளும் நல்லொழுக்கமுள்ளவர்களும், அவதூறு பண்ணாதவர்களும்” .“அவதூறு பண்ணுதல்”*** என்று மொழிபெயர்க் கப்பட்ட வார்த்தையானது பிற இடங்களில் “பிசாசு” என்று மொழிபெயர்க் கப்பட்ட வார்த்தைக்கு சமமாக உள்ளது.

புதியஏற்பாட்டில் “சாத்தான்” என்ற வார்த்தை அனேக முறை பயன் படுத்தப்பட்டுள்ளது. ஒரு “சாத்தான்” என்பது ஒரு விரோதி அல்லது எதிர்க் கிறவன் என்பதாகும். தேவன் கூறின வழியை (சிலுவையின் பாதை” விட்டு, விலகும்படிக்கு இயேசுவை பேதுரு கண்டித்தபோது, பேதுரு ஒரு விரோதி ஆனான். உடனே இயேசு அவனைப்பார்த்து, ***“அப்பாலே போ சாத்தானே” (மத்தேயு 16:23)*** என்றார்.

தேவனுக்கு விரோதமாக எது கிரியைசெய்தாலும், அது “சாத்தான்” என்று அழைக்கப்படுகிறது. எனவே பவுல் தெசலோனிக்கேயரைப் பார்க்கச் செல்லு வது தடைப்படும்போது அவன் அவர்களுக்கு

எழுதினது, ***"சாத்தானோ எங்க ளைத் தடைபண்ணினான்" (1.தெசலோனிக்கேயர் 2:18)*** என்கிறான்.

மற்றொரு வேதபகுதி பழையஏற்பாட்டிலிருந்து நாம் பார்த்தாகவேண்டும். ஏனெனில், அது, சாத்தான் விழுந்துபோன தூதன் என்று போதிப்பதாக சிலர் எண்ணுகின்றனர். அந்த வேதபகுதி ஏசாயா 14:12 இவ்விதமாக கூறுகிறது, ***"அதிகாலையின் மகனாகிய விடிவெள்ளியே (லூசிபர்) நீ வானத்திலிருந்து விழுந்தாயே!"***. இந்த அதிகாரம் முழுமையாக படித்தால் இந்த "லூசிபர்" பாபிலோனின் ராஜா என்று நாம் பார்க்கிறோம். அவனுடைய வீழ்ச்சியைக் குறித்து 15-ம் வசனத்தில் தீர்க்கதரிசியானவன் முன்குறித்துப் பேசுகிறான், பின்னும் ஏசாயா இந்த ராஜாவின் மரணத்தைக்குறித்து 16-ம் வசனத்தில் குறிப்பிட்டுள்ளான், ***"ஆனாலும் நீ அகாதமான பாதாளத்தில் தள்ளுண்டு போனாய். உன்னைக் குறித்து சிந்தித்து: இவன்தானா பூமியைத் தத்த ளிக்கவும் செய்தான்?"*** என்பார்கள்.

**பிசாசுகளைத் துரத்துதல்**

புதிய ஏற்பாட்டு எழுத்தாளர்கள் அடிக்கடி இயேசு செய்த குணமாக்கும் அற்புதங்களைக் குறித்துப் பேசும்போது "பிசாசுகளைத் துரத்தினார்" என்று கூறுகின்றனர். நாம் இதை எவ்வாறு புரிந்துக்கொள்வது?

இயேசுவின் நாட்களில், சில வியாதிகள், மற்றும் செவிடு ,ஊமை, மற்றும் குருடு போன்ற சரீர பெலவீனங்கள் பிசாசினால் ஒரு மனிதன் ஆட்கொள்ளப் படும்போது உண்டாகிறது என்று பொதுவாக கருதப்பட்டது. அப்படிப்பட்ட மனிதன் குணமாகும்போது "பிசாசு அவனைவிட்டு வெளியேறினது" என்று சொல்லுவது சுவிசேஷ எழுத்தாளர்கள், அந்த நாட்களில் பழக்கத்தில் இருந்த. ஒரு பொதுவான சொற்றொடரில் குறிப்பிட்டு பயன்படுத்தினது இயற்கையே. அவர்கள் இப்படி எழுதினதினாலே, மனிதனில் பொல்லாத ஆவிகள் ஜீவிக் கிறது என்பதை அவர்கள் உண்மையாகவே விசுவாசித்தார்கள் என நாம் கற்பனை செய்யக்கூடாது.

**ஒரு பெரிய சிருஷ்டிகர்**

தேவனுக்குப் பெரிய சத்துருவாக இருக்கிற ஒரு பொல்லாத சிருஷ்டியை நம்பு வது புதியது ஒன்றுமல்ல. தீர்க்கதரிசியான ஏசாயாவின் காலத்தில் தேவனுக் கும் பிசாசுக்கும் சம்பந்தப்பட்ட இரண்டு பெரிய வல்லமைகள் உள்ளன என்று பாரசீகர்கள் விசுவாசித்தனர். இதன்படி தேவனானவர்

ஒளி மற்றும் நன்மைகளைச் சிருஷ்டிக்கிறவர் என்றும், பிசாசானவன் இருளையும் தீமை மயான எல்லாவற்றையும் உருவாக்குகிறவன் என்று நம்பினர்.

இந்த தவறான நம்பிக்கைக்குப் பிரதியுத்தரமாக ஏசாயா தீர்க்கதரிசி மூலமாக தேவன் ஒரு செய்தியை அனுப்பினார். இதை நாமே ஏசாயா 45:5-7 -ல் வாசிக்கலாம்.

***"நானே கர்த்தர், வேறொருவர் இல்லை; என்னைத்தவிர தேவன் இல்லை. என்னைத்தவிர ஒருவரும் இல்லையென்று***

***சூரியன் உதிக்கிற திசையிலும், அது அஸ்தமிக்கிற திசையிலும் அறியப்ப டும்படிக்கு நீ என்னை அறியாதிருந்தும் நான் உனக்கு இடைக்கட்டு கட்டினேன்;***

***நானே கர்த்தர்; வேறொருவர் இல்லை. ஒளியைப் படைத்து இருளையும் உண்டாக்கினேன். சமாதானத்தைப் படைத்து, தீங்கையும் உண்டாக்குகிறவர் நானே; கர்த்தராகிய நானே இவைகளையெல்லாம் செய்கிறவர்"***.

இங்கு "தீமை" என்ற வார்த்தையை பாவத்தோடு சேர்த்து கலக்கக்கூடாது. அது பாவிகள்மேல் தேவன் கொண்டு வருகிற "தொல்லை"களைக் குறிப் பிடுகிறது. இறுதியாக இந்த வேதபகுதி நமக்கு ஊர்ஜிதப்படுத்துகிறது என்ன வென்றால், சர்வவல்லமையுள்ள தேவனாகிய கர்த்தர் என்னும் ஒரே பெரிய சிருஷ்டிகர் எல்லாவற்றையும் ஒழுங்குபடுத்துகிறவரும், அண்டசாராசரங்களில் ஒரு பெரிய வல்லமையாகவும் இருக்கிறார் என்பதாகும். அவருடைய வல்ல மைக்கு எந்த சிருஷ்டியும் சவாலாக இருக்கமுடியாது. மேலும் பிசாசு எனப்பட்ட எந்த ஒரு சக்தியும் வஞ்சனையும் நிறைந்த காட்டுமிருகத்துக்குத் தேவனை எதிர்க்கக்கூடிய தைரியம் இல்லை.

ஒரு கடைசி வார்த்தை. ஏன் வேதாகமம் "பாவம்" என்ற வார்த்தைக்குப் பதிலாக அடிக்கடி "பிசாசு" என்ற வார்த்தையைப் பயன்படுத்துகிறது? என்று கேட்க நீங்கள் விரும்பக்கூடும். மேலும் பிசாசை ஒரு சக்தி வாய்ந்த வஞ்சனையுள்ள மனிதனுக்கு ஒப்பிட்டு விளக்கி பேசுகிறது? என்று நீங்கள் கேட்க விரும்பலாம்.

பாவமானது எவ்வளவு சக்தி வாய்ந்ததும், வஞ்சனை நிறைந்ததுமாய் இருக்கிறது என்பதை நாம் புரிந்துக்கொள்ளும்படியாக அது அவ்வாறாக எழுதப்பட்டுள்ளது. நாம் பாவத்திலிருந்து இரட்சிக்கப்படும்படிக்கு எவ்வளவாக தேவைப்படுகிறது என்பதை நாம் பாராட்டுமுன்பதாக இந்தப் பாடத்தைக் கற்றிருக்க வேண்டும்.

**நாம் கற்றுக்கொண்டவை**

1. **பிசாசு என்பது ஒரு பெரிய பொல்லாத ஆவி அல்ல.**
2. **பிசாசு மற்றும் சாத்தான் என்பது நாம் இப்போது கூறுகிற “மனித சுபாவம்” என்பதற்கு வேதாகமம் கொடுக்கும் பெயர்கள்**
3. **சோதனைகள் நமக்குள்ளே இருக்கிற நமது சொந்த பாவ சுபாவத்தின் நிமித்தம் நமக்குள்ளே இருந்து வருகிறது.**
4. **சோதானைக்குப் பணிந்து பொல்லாத காரியங்களை நடப்பிக்கிற வர்களும், “சாத்தான்” என்று அழைக்கப்படுகிறார்கள்**

இது கிறிஸ்டடெல்ஃபியன் வேதாகம சங்கத்தாரால் இலவசமாக வெளியிடப்பட்டது.

**பாடம் எண் 20**

.................................................................................................................

## *ஞானஸ்நானம்*

**வார வாசிப்புகள்: யாத்திராகமம்,, அதிகாரங்கள் 27-32,**
**மத்தேயு,, அதிகாரங்கள் 5- 7.**
**பாட வாசிப்புகள்: அப்போஸ்தலர், அதிகாரம் 8,**
**ரோமர் அதிகாரம் 6.**

### ஓர் புதிய ஆரம்பம்

ஒரு சிறிய பிள்ளை தனது நோட்டுப் புத்தகத்தில் எழுதும்போது, ஒரு புதிய பக்கத்தில் எழுத ஆரம்பிக்கிறதை நீங்கள் எப்போதாவது கவனித்ததுண்டா? அந்த புதிய பக்கத்தில் எழுத ஆரம்பிக்கையில் அதை சுத்தமாக அழுக்கில்லாமல் இருக்கும்படி கூடுதல் கவனம் செலுத்தும். அவன் புத்தம் புதிய ஆரம்பத்தில் ஈடுபடுகிறான்.

நமக்காக இயேசு எவ்வளவாக என்னென்ன செய்திருக்கிறார் என்பதை நாம் உணர ஆரம்பிக்கும்போது, நமது ஜீவியத்தில் "ஒரு புதிய பக்கத்துக்குத் திருப்பி", ஒரு புத்தம்புதிய ஆரம்பத்தில் ஈடுபட நாடுவோம். நாம் அவரைப் பின்பற்ற விரும்புவோம்.

### தேவனுடைய வழி

***மத்தேயு 28:19-20***-ல், இயேசு பரலோகத்துக்குச் செல்லுமுன்பாக தமது சீஷரிடம் கூறினவற்றை நாம் வாசிக்கிறோம்.

***"ஆகையால் நீங்கள் புறப்பட்டுப்போய், சகல ஜாதிகளையும் சீஷராக்கி, பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்திலே அவர்களுக்கு ஞானஸ்நானங் கொடுத்து, நான் உங்களுக்குக் கட்டளையிட்டயாவையும் அவர்கள் கைக் கொள்ளும்படி அவர்களுக்கு உபதேசம் பண்ணுங்கள்" (மத்தேயு 28:19-20).***

இந்த வசனங்களைக் கவனமாக படியுங்கள். அவர்களைச் சீஷராக்கி, அவர்க ளுக்கு ஞானஸ்நானம் கொடுக்கவேண்டும் என்பதை நீங்கள்

கவனித்திருப் பீர்கள். ஒரு புதிய ஆரம்பத்தை நமக்கென்று தேவன் தெரிந்துக்கொண்ட வழியே ஞானஸ்நானம் ஆகும்.

நாம் அவருடைய கட்டளைகளைக் கைக்கொள்ளும்போது நமது கடந்தகால பாவங்களைத் தேவன் மன்னிக்கிறார். இயேசுதாமே, ஒரு பாவமும் செய்யா திருந்தும், நமக்கு ஒரு முன்மாதிரியாக ஞானஸ்நானம் பெற்றார். ***மத்தேயு 3:13-17***-ஐ நாம் வாசிக்கையில் எவ்வாறு இயேசு யோர்தானுக்கு வந்து தமது ஒன்றுவிட்ட சகோதரனாகிய யோவானால் அங்கு ஞானஸ்நானம் பெற்றார் என்பதைக் காண்கிறோம்.

யோவான் இயேசுவுக்கு ஞானஸ்நானம் கொடுக்க தான் தகுதியற்றவன் என்று கூறினபோது இயேசு அவனுக்குப் பிரதியுத்தரமாக, ***"இப்பொழுது இடங்கொடு, இப்படி எல்லா நீதியையும் நிறைவேற்றுவது நமக்கு ஏற்றதாயிருக்கிறது" (மத்தேயு 3:15)*** என்று கூறினதை நீங்கள் கவனித்திருப்பீர்கள். அவர் "நான்" என்று கூறாமல், "நாம்" என்று கூறினதின் மூலம் நாமும் கூட ஞானஸ்நானம் பெறவேண்டும் என்பதை நமக்குக் காட்டினார். அது நமது இரட்சிப்புக்கு மிக அவசியம்.

**தண்ணீருக்குள் அடக்கம்**

ஞானஸ்நானம் என்பதன் அர்த்தம், தண்ணீருக்கு அடியில் முழுவதுமாக அடக்கஞ்செய்யப்படுதல் என்பதாகும். தண்ணீருக்கடியில் நாம் செல்லும் போது மரிக்கிறோம், பின்பு தண்ணீரிலிருந்து மீண்டும் வெளியில் வரும்போது நாம் ஒரு புதிய வாழ்க்கை ஆரம்பிக்க ஆயத்தமாயிருக்கிறோம் என்பதன் நிழலாட்டமாய் இருக்கிறது. இந்த வழியில் நாம் கிறிஸ்துவோடே மரித்து, அவரோடேகூட எழுந்திருக்கவும் செய்கிறோம். பவுல் அப்போஸ்தலன் இதைக்குறித்து ***ரோமர் 6:3-4***-ல் எழுதியிருக்கிறதை நாம் வாசிக்கிறோம்,

***"கிறிஸ்து இயேசுவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்ற நாமனைவரும் அவருடைய மரணத்துக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றதை அறியாமா லிருக்கிறீர்களா?***

***மேலும் பிதாவின் மகிமையினாலே கிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுப்பப் பட்டதுபோல, நாமும் புதிதான ஜீவனுள்ளவர்களாய் நடந்துகொள்ளும்படிக்கு, அவருடைய மரணத்திற்குள்ளாக்கும்***

***ஞானஸ்நானத்தினாலே கிறிஸ்துவுடனே கூட அடக்கம் பண்ணப்பட்டோம்"***

**தண்ணீர் தெளித்தல் மற்றும் ஞானஸ்நானம்**

ஒருவேளை குழந்தையின் நெற்றியில் தண்ணீர் தெளித்து "ஞானஸ்நானம்" கொடுப்பதைக் கேள்விப்பட்டிருப்பீர்கள். ஆனால் இது உண்மையாக ஞான ஸ்நானம் அல்ல. இயேசு கூறினதை நீங்கள் நினைவுகூருவீர்கள்,

***"விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான்" (மாற்கு 16:16)***.

நாம் முதலாவதாக இதைப் புரிந்துகொள்ள வேண்டும். பின்பு விசுவாசிக்க வேண்டும். ஒரு குழந்தையால் இதைச் செய்யமுடியாது. தண்ணீரை நெற்றி யில் தெளிப்பது என்பது, தண்ணீருக்கு அடியில் அடக்கஞ்செய்யப்பட்டு மீண்டும் வெளியில் வருவதற்கு எந்தவிதத்திலும் சமமாகாது. கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் அடக்கத்தையும், மீண்டும் உயிரோடு எழுவதையும் அது நமக்கு நினைப்பூட்ட முடியாது.

**விசுவாசித்து ஞானஸ்நானம் பெறுகிறவர்கள்**

அப்போஸ்தலர் 8:36-ஐ வாசிக்கும்போது, எத்தியோப்பிய ராணியின் மந்திரி கூறின வார்த்தை, ***"இதோ, தண்ணீர் இருக்கிறதே, நான் ஞானஸ்நானம் பெறுகிறதற்குத் தடையென்ன?"*** என்று கேட்டதை நீங்கள் கவனித்திருப்பீர்கள். பிலிப்பு அவனிடம் கூறின ஒரு நிபந்தனை என்னவெனில், ***"நீ முழு இருதயத்தோடும் விசுவாசித்தால் தடையில்லை" (அப்போஸ்தலர் 8:37)."அவர்கள் இருவரும் தண்ணீரில் இறங்கினார்கள்" (அப்போஸ்தலர் 8:38)*** என்பதை நீங்கள் கவனியுங்கள். அப்படி செய்வது தேவையாக இருந்தது. ஏனெனில் பிலிப்பு தண்ணீருக்குள் இறங்கி ஞானஸ்நானம் கொடுக்கும்போது அந்த மந்திரியை முழுவதுமாக தண்ணீருக்கடியில் அடக்கஞ்செய்ய வேண்டி யிருந்தது.

**ஒரு பெரிய தீர்மானம்**

இங்கு ஞானஸ்நானத்தைக் குறித்த மிக முக்கியமான மற்றொரு வேதபகுதி உள்ளது.

***“தேவனுடைய ராஜ்யத்துக்கும் இயேசுகிறிஸ்துவினுடைய நாமத்துக்கும் ஏற்றவைகளைக் குறித்து, பிலிப்பு பிரசங்கித்ததை அவர்கள் விசுவாசித்தபோது, புருஷரும் ஸ்திரீகளும் ஞானஸ்நானம் பெற்றார்கள்” (அப்போஸ்தலார் 8:12)***

ஆயத்தமாவதற்கு முன்னால் ஞானஸ்நானம் பெறுவதற்கு ஜனங்கள் அவசரப் படக்கூடாது என்று இந்த வேதபகுதியிலிருந்து கற்றுக்கொள்கிறோம். சமாரி யாவிலுள்ள ஆண்களும் பெண்களும் **“தேவனுடைய ராஜ்யத்தைக் குறித்தும், இயேசுகிறிஸ்துவின் நாமத்தைக் குறித்தும் விசுவாசிக்கிறதற்கு”** முன்பு வரை அவர்கள் ஞானஸ்நானம் பெறவில்லை.

ஞானஸ்நானம் பெறுவதற்குத் தீர்மானிப்பது வாழ்க்கையின் மிகமுக்கிய தீர்மா னங்களில் ஒன்றாகும். அது சுலபமாக எடுக்கக்கூடிய தீர்மானமும் அல்ல. ஞானஸ்நானம் எடுக்குமுன் வேதாகமத்தின் உண்மைப் போதனைகளைப் புரிந்துக்கொண்டு விசுவாசிப்பது மிக முக்கியம். ஞானஸ்நானம் பெற்றுக் கொண்ட பிறகு சோதனைகளுக்கு எதிர்த்து நின்று, எப்போதும் தேவனுடைய கட்டளைகளுக்குக் கீழ்ப்படிய முயற்சி செய்வதும் மிக அவசியம்.

உண்மையான வேதாகம போதனைகளை நம்புவதும் தேவனுக்குக் கீழ்ப்படி வதுமாகும். இந்த இரண்டு காரியங்களும் இல்லாமல், ஞானஸ்நானம் விலைம திப்பற்றதாகும்.

### தேவனுடைய பிள்ளைகள்

நாம் ஆதாமின் பிள்ளைகளாக பிறந்திருக்கிறோம். ஆனால் நாம் ஞான ஸ்நானம் பெறும்போது தேவனுடைய குடும்பத்தில் இணைக்கப்பட்டு, தேவனு டைய பிள்ளைகளாகிறோம்.

ஒவ்வொரு ஆணும் பெண்ணும் ஆதாமின் பிள்ளையாக இருக்கிறார்கள். அவர் கள் எல்லாரும் “ஆதாமுக்குள்” இருக்கிறதாக வேதாகமம் கூறுகிறது.

நாம் ஞானஸ்நானம் பெறும்போது **“கிறிஸ்துவைத் தரித்துக்கொள்”கிறோம்.** அப்போது நாம் **“கிறிஸ்துவுக்குள்”** இருக்கிறவர்கள் என்று அழைக்கப்படு கிறோம். பவுல், **கலாத்தியர் 3:26-27**-ல் கூறுகிறான்,

***“நீங்களெல்லாரும் கிறிஸ்து இயேசுவைப்பற்றும் விசுவாசத்தினாலே தேவனு டைய புத்திரராக இருக்கிறீர்களே.***

***ஏனெனில், உங்களில் கிறிஸ்துவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றவர்கள் எத்தனை பேரோ அத்தனை பேரும் கிறிஸ்துவைத் தரித்துக்கொண்டீர்களே”***

நமக்கு ஜீவியத்தின் புதிய நம்பிக்கை ஒன்று உள்ளது. ஏனெனில், ***1.கொரிந்தியார் 15:22***-ல் நாம் வாசிக்கிறோம், ***“ஆதாமுக்குள் எல்லோரும் மரிக்கிறதுபோல, கிறிஸ்துவுக்குள் எல்லோரும் உயிர்ப்பிக்கப்படுவார்கள்.”***

**கிறிஸ்து நமது மத்தியஸ்தர்**

நாம் ஞானஸ்நானம் பெறும்போது புத்தம்புதிய ஆரம்பத்தைத் துவங்குகிறோம். ஆனாலும் நாம் பாவமில்லாமல் ஜீவிக்கமுடியாது. நாம் ஞானஸ்நானம் பெற்ற பிற்பாடு பாவஞ்செய்தால் என்ன சம்பவிக்கும்?

நாம் ‘‘கிறிஸ்துவுக்குள்’’ இருக்கிறபடியால், இயேசுகிறிஸ்து நமது மத்தியஸ்த ராக நமக்கென்று தேவனிடம் ஜெபிக்கும்படி இருக்கிறார். நாம் செய்த பாவத் தின் நிமித்தம் உண்மையில் துக்கப்பட்டால், அப்போஸ்தலனாகிய யோவான் எழுதுகிறான்,

***“ஒருவன் பாவஞ்செய்வானானால் நீதிபரராயிருக்கிற இயேசுகிறிஸ்து நமக்காகப் பிதாவினிடத்தில் பரிந்துபேசுகிறவராய் (மத்தியஸ்தராக) இருக்கிறார்” (1.யோவான் 2:1).***

**பாடப் பொருள்**

1. **நாம் ஞானஸ்நானம் பெறவேண்டும் என்று தேவன் கட்டளை யிட்டிருக்கிறார்.**
2. **ஞானஸ்நானம் என்பது தண்ணீரில் முழுவதுமாக அடக்கஞ் செய்யப்படுவது ஆகும்.**
3. **விசுவாசத்தைத் தொடர்ந்து ஞானஸ்நானம் பெறவேண்டும் என்பதால், அது பெரியவர்களுக்குமட்டும்தான் குழந்தைக ளுக்கு அல்ல.**

4. ஞானஸ்நானம் பெறும்போது நாம் கிறிஸ்துவோடு மரிக்கி றோம்; தண்ணீரிலிருந்து வெளியே வரும்போது ஒரு புதிய வாழ்க்கை வாழ ஆரம்பிக்கிறோம்.
5. ஞானஸ்நானம் பெறும்போது, நாம் தேவனுடைய பிள்ளைக ளாகிறோம். அதை நாம் "கிறிஸ்துவுக்குள்" இருப்பதாக வேதாகமம் கூறுகிறது.

தயவுசெய்து இந்தப் புத்தகத்தின் பக்கம் 104-ல் காணும் இந்தப் பாடங்களுக்குச் சம்பந்தப்பட்ட கேள்வி/விடைத்தாளுக்குச் சென்று, "ஆசிரியர் பிரதி"யை எங்களிடம் அனுப்பி வையுங்கள்.

**இது கிறிஸ்டடெல்ஃபியன் வேதாகம சங்கத்தாரால் இலவசமாக வெளியிடப்பட்டது.**

**பாடம் எண் 21**

................................................................................................................................

## *சில நடைமுறை பிரச்சனைகள்*

**வார வாசிப்புகள்: யாத்திராகமம், அதிகாரங்கள் 37-40,**
**வெளிப்பாடுத்தின விசேஷம், அதிகாரம் 20**
**பாட வாசிப்பு:: ரோமர், அதிகாரங்கள் 12-13.**

இயேசு தமது சீஷர்களிடம் கூறினார்,''***நீங்கள் என்னிடத்தில் அன்பாயிருந் தால் என்னுடைய கற்பனைகளைக் கைக்கொள்ளுங்கள்'' (யோவான் 14:15).*** தேவன் மோசேயின் மூலமாக யூதர்களுக்குக் கொடுத்த கட்டளையை நாம் மோசேயின் நியாயப்பிரமாணம்'' என்று அழைக்கிறோம் என்பதை நீங்கள் நினைவுகூருவீர்கள்.

மோசேயின் நியாயப்பிரமானத்தில் ஜனங்கள் என்னசெய்யவேண்டும், எதைச் செய்யக்கூடாது என்ற சட்டங்கள் இருந்தன. இந்த நியாயப்பிரமாணங்கள் அவர்களுடைய அநுதின ஜீவியத்தின் ஒவ்வொரு வழியிலும் வழிநடத்துவதாய் இருந்தன.

இந்தப் பிரமாணம் ஜனங்களுக்கு ஜீவனைக் கொண்டுவரவில்லை. ஏனென் றால் அவர்களால் அதைக் கைக்கொள்ளமுடியவில்லை என்பதை நீங்கள் நினைவுகூருவீர்கள். எனவே தேவன் அவர்களுக்கு ஒரு ''மேலான வழி)யை'' கொடுத்தார். அவர் தமது குமாரனாகிய இயேசுகிறிஸ்துவை, நாம் எவ்வாறு ஜீவிப்பது என்பதைக் காட்டும்படி அனுப்பினார். இயேசு தம்மைப் பின்பற்றின வர்களுக்கு வாழ்க்கையின் ஒவ்வொரு சூழ்நிலையிலும் அவர்கள் என்ன செய்யவேண்டும் என்று சொல்லக்கூடிய சட்டங்களை ஒருமுழுமையான பட் டியலாகக் கொடுக்கவில்லை. அவர்கள் தேவனிடத்திலும், பிறரிடத்திலும் அன் புகூரவேண்டும் என்ற மிகமுக்கியமானச் செய்யும்படி அவர்களுக்கு கூறினார்.

இயேசுவும் அவருடைய அப்போஸ்தலர்கள் இருவரும் சில திட்டவட்டமான ''செய்யுங்கள்'' மற்றும் ''செய்யக்கூடாது'' என்ற சட்டங்களைக் கொடுத்தார்கள். அவைகளை நாம் புரிந்துக்கொண்டு கைக்கொள்ளவேண்டும்.

**நமது ஆளுநர்களுக்குக் கீழ்ப்படிந்திருக்க வேண்டும்.**

***ரோமர் 13:1***-ல் நாம் வாசிக்கிறோம், ***"எந்த மனுஷனும் மேலான அதிகார முள்ளவர்களுக்குக் கீழ்ப்படியக்கடவர்."***

நமது ஆளுநர்கள் யாராக இருந்தாலும் அவர்கள் தேவனால் அனுமதிக்கப்ப டுகிறதினால், அந்த அதிகாரத்தில் அமர்ந்திருக்கிறார்கள். (க.பேதுரு உ:கங-கரு). இது உண்மையும்கூட. நமது பணியில் நமது மேலதிகாரிகளின் விஷயத் திலும் இது உண்மையாகும்.

எனவே நாம் நம்மீது அதிகாரமுள்ளவர்களுக்குக் கீழ்ப்படிய வேண்டும். அவர்கள் இரக்கமற்றவர்களாயும், நியாயமற்றவர்களாயும் இருந்தாலும் அவர்க ளுக்குக் கீழ்ப்படிய வேண்டும். இதையே பேதுரு நமக்குக் கூறுகின்றான், ***"வேலைக்காரரே, அதிக பயத்துடனே உங்கள் எஜமான்களுக்குக் கீழ்ப்படிந் திருங்கள்; நல்லவர்களுக்கும் சாந்தகுணமுள்ளவர்களுக்கு மாத்திரமல்ல,; முரட்டுகுணமுள்ளவர்களுக்கும் கீழ்ப்படியுங்கள்" (1.பேதுரு 2:18)***.

ஒரு அதிகாரி தேவனுக்குக் கீழ்ப்படியாமல் இருக்கும்படி கூறும்போது மாத்தி ரம் இது பொருந்தாது. ஒருமுறை யூதஅதிகாரிகள் பேதுரு மற்றும் யோவா னிடம், இயேசுவையும் அவருடைய உயிர்த்தெழுதலையும் குறித்து போதிப் பதைத் தடுக்கும்போது அவர்கள் பிரதியுத்தரமாக, ***"தேவனுக்குச் செவிெ காடுப்பதைப் பார்க்கிலும் உங்களுக்குச் செவிகொடுக்கிறது தேவனுக்கு முன்பாக நியாயமாய் இருக்குமோ என்று நீங்களே நிதானித்துப் பாருங்கள். நாங்கள் கண்டவைகளையும் கேட்டவைகளையும் பேசாம லிருக்கக்கூடாதே" (அப்போஸ்தலர் 4:19-20)*** என்றனர்.

இயேசு தாமே தம்மை மரண உபாதிக்குட்படுத்தினவர் களுக்காக ஜெபித்தார். அவருடைய முன்மாதிரியை நாம் நினைவுகூர்ந்தால், நாம் தீமைக்குப் பதிலாக நன்மை செய்வது சுலபமாக இருக்கும் என்பதைக் காண்போம். பொல்லாத வர்களைத் தண்டிக்கும் வேலையை நாம் தேவனிடத்தில் விட்டுவிடவேண்டும். அப்போஸ்தலனாகிய பவுலும் இவ்வாறே கூறுகிறான்,

***"பிரியமானவர்களே, பழிவாங்குதல் எனக்குரியது. நானே பதிற் செய்வேன், என்று கர்த்தர் சொல்லுகிறார் என்று***

***எழுதியிருக்கிறபடியால், நீங்கள் பழிவாங்காமல் கோபாக்கினைக்கு இடங்கொடுங்கள்" (ரோமர் 12:19)***.

**சீஷன் போராடுவதில்லை**

நமது அதிகாரிகளின் சட்டங்கள் தேவனுடைய பிரமாணத்தோடு மோதும் போது தவிர, நாம் எல்லாவற்றிலும் அவர்களுக்குக் கீழ்ப்படியவேண்டும். உதா ரணமாக, அனேக தேசங்களில் இந்த நாட்களில் எல்லா வாலிபர்களும் ஒரு குறிப்பிட்ட காலத்திற்குப் பட்டாளத்திலும், கப்பற்படையிலும், அல்லது விமா னப்படையிலும் சேவிக்கவேண்டும் என்ற பிரமாணங்கள் கட்டளையிடுகின் றன.

ஆனாலும் தேவன் தமது பிள்ளைகள் போராடக்கூடாது என்று இயேசுவின் மூலமாக கூறியுள்ளார், ***"பட்டயத்தை எடுக்கிற யாவரும் பட்டயத்தாலே மடிந்துப் போவார்கள்." (மத்தேயு 26:52)***

அவர் தம்மைப் பின்பற்றுகிறவர்களுக்குத் தங்கள் சத்துருக்களுக்காக ஜெபியுங் கள் என்று போதித்தார். இவ்வாறு அவர்கள் உங்களைக் கோபமூட்டினாலும் உங்கள் அன்பை அவர்களுக்குக் காட்டுங்கள்.

***"நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்; தீமையோடு எதிர்த்து நிற்கவேண்டாம்; ஒருவன் உன்னை வலது கன்னத்தில் அறைந்தால் அவனுக்கு மறுகன்னத்தை யும் திருப்பிக்கொடு" (மத்தேயு 5:39)***.

எனவே அதனால் வருத்தமும், சிறைத்தண்டனையும் வந்தாலும் sபரவாயில் லை, கிறிஸ்தவர்கள் போராடுவதை எப்போதும் மறுக்கவேண்டும். மேலும் இராணுவத்தில் சேரவும்கூடாது. யுத்தங்கள் எப்போதும் தவறானதே என்ப தனால் மட்டுமல்ல, தேவன் போரிடும்படி கட்டளைக் கொடுத்தால் அப்படிச் செய்வது சரியாக இருக்கும். ஆனால் இந்தக் காலக்கட்டத்தில் தேவன் நமக்குக் கட்டளையிட்டிருப்பது என்னவென்றால், ***"தீமையோடு எதிர்த்து நிற்கவேண்டாம்"***. ஏனெனில் தேவன் தாமே பொல்லாதவர்கள் மேல் நியாயத்தீர்ப்பு கொண்டுவரும் அந்த நாள் சமீபத்தில் உள்ளது.

**ஓட்டு போடுதல்**

எல்லா காலங்களிலும் தேவனுடைய பிள்ளைகள் இருப்பதுபோல, கிறிஸ்தவர் கள் இந்நாட்களில். ***"பூமியின் மேல் அந்நியரும் பரதேசிகளுமாக" (எபிரெயர் 11:13)*** இருக்கின்றனர்.

அவர்கள் தேவனுடைய ராஜ்யத்துக்கென்று காத்திருப்பது மாத்திரமல்லாமல், அந்த ராஜ்யத்தில் தங்களுக்கும் ஒரு இடம் வேண்டுமென்று ஜெபிக்கிறார்கள். அந்த ராஜ்யம் வரும்போது இந்நாளில் இருக்கிற எல்லா அரசாங்கங்களும் நீங்கிப்போகும் என்பதை அவர்கள் அறிந்திருக்கிறார்கள். இந்த உலகத்தின் எந்த அரசியலிலும் அவர்களுக்குப் பங்கில்லை. அவர்கள் ஓட்டு போடவும் மாட்டார்கள். ஏனெனில் எந்த அரசியல்வாதியும் தங்களது ''பிரதிநிதி''யாகச் செயல்படமுடியாது என்பது அவர்களது ஜீவியத்தின் கண்ணோட்டமாகும்.

***"நம்முடைய குடியிருப்போ பரலோகத்தில் இருக்கிறது, அங்கேயிருந்து நம்மு டைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து எனும் இரட்சகர் வர எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம்" (பிலிப்பியர் 3:20)***.

**திருமணம்-கிறிஸ்துவுக்குள் ஒரு உடந்தை**

இந்த உலகில் இரண்டு விதமான ஜனங்கள் வசிக்கின்றனர். அவர்கள் யாரெ னில், ''ஆதாமுக்குள்'' இருப்பவர்கள் மற்றும் ''கிறிஸ்துவுக்குள்'' இருப்பவர்கள். இந்த இரண்டுவகை ஜனங்களுக்கும்நடுவே உள்ள வித்தியாசம் மிகப்பெரியது.

ஆதாமுக்குள் இருப்பவர்கள் சுயநலவாதிகளும், உலகத்தாராயும் இருக்கிறார் கள். கிறிஸ்துவுக்குள் இருப்பவர்களோ என்றால், தேவனுடைய தாசர்களாய் இருக்கிறார்கள்.

இயல்பாகவே கிறிஸ்துவுக்குள் இருப்பவர்கள் ஏக ஐக்கியத்தை உணர்ந்தவர் களாகவும், தேவனை உண்மையாக சேவிக்கிறதற்கென்று ஒருவருக்கொருவர் உதவிசெய்கிறவர்களாயும் இருப்பார்கள். அவர்கள் உலகத்தாரோடு கலந்துக் கொள்ளவில்லை. ஏனெனில் அவர்களுடைய சிந்தை முற்றிலும் வேறுபட்டது.

எல்லாவற்றுக்கும் மேலாக, அவர்கள் திருமண வாழ்க்கைக் குறித்த எண்ணத் தில், தாங்கள் உலகத்திலிருந்து வேர்பிரிக்கப்பட்டவர்கள் என்பதைக் காண்பிப் பார்கள். அவர்கள் தங்கள் திருமண துணையை தேவனுடைய குடும்பத்தி லிருந்து தெரிந்தெடுப்பார்கள், உலகத்திலிருந்து அல்ல. பவுல் அப்போஸ்தலன் இந்த பிரித்தெடுக்கப்படுதலின் முக்கியத்துவத்தை 2.கொரிந்தியர் 6:14-16-ல் வலியுறுத்துகிறான்,

***“அந்நிய நுகத்திலே அவிசுவாசிகளுடன் பிணைக்கப்படாதிருப்பீர்களாக; நீதிக்கும் அநீதிக்கும் சம்பந்தமேது? ஒளிக்கும் இருளுக்கும் ஐக்கியமேது? கிறிஸ்துவுக்கும் பேலியாளுக்கும் இசைவேது? அவிசுவாசியுடனே விசுவா சிக்குப் பங்கேது? தேவனுடைய ஆலயத்துக்கும் விக்கிரகங்களுக்கும் சம்பந்தமேது? நான் அவர்களுக்குள்ளே வாசம்பண்ணி, அவர்களுக்குள்ளே உலாவி, அவர்கள் தேவனாயிருப்பேன், அவர்கள் என் ஜனங்களாயிருப்பார்கள், என்று தேவன் சொன்னபடி, நீங்கள் ஜீவனுள்ள தேவனுடைய ஆலயமாயிருக் கிறீர்களே”***

தேவனுடைய பிரமாணத்தை மீறினால், ஒருபோதும் மகிழ்ச்சியாய் இருக்க முடியாது. ஒரு அவிசுவாசியைத் திருமணம் செய்வது துக்ககரமான தவறாக உள்ளது என்பதை அனுபவம் கூறுகிறது.

**“தள்ளி வைப்பதை” தேவன் வெறுக்கிறார்”**

திருமண வாழ்க்கை என்பது வாழ்க்கை முழுவதும் ஐக்கியமாக இருத்தல் என்பது ஆகும். தேவன் ஏவாளை ஆதாமுக்கு ஏற்ற “துணை”யாக (உதவி யாக) சிருஷ்டித்தபோது, இந்தக் கொள்கை ஆதாரமாக்கப்பட்டது.

***“இதனிமித்தம் புருஷன் தன் தகப்பனையும் தன் தாயையும் விட்டு தன் மனைவியோடு இசைந்திருப்பான்; அவர்கள் ஒரே மாம்சமாயிருப்பார்கள்” (ஆதியாகமம் 2:24).***

கர்த்தராகிய இயேசு இதைக் கூறுவதின்மூலம் திருமணம் என்பது வாழ்க்கை முழுவதும் ஐக்கியமாக இருத்தல் என்பதை உறுதிப்படுத்துகிறார்.

**“தேவன் இணைத்ததை மனிதன் பிரிக்காதிருக்கக்கடவன்” (மத்தேயு 19:6)**

எனவே கர்த்தராகிய இயேசு விவாகரத்தை தடைசெய்கிறார். திருமண வாழ்க்கையானது அந்த க்ஷணத்திற்கு சமாதானமாக போகாவிட்டாலும் ஒரு கிறிஸ்தவன் பொறுமையையும் அன்பையும் காட்டவேண்டும்.

***மல்கியா 2:16-***ல் இவ்வாறு வாசிக்கிறோம், ***“தள்ளிவிடுதலை நான் வெறுக் கிறேன் என்று இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் சொல்லுகிறார்”***

தேவனுடைய பிரமாணத்தை மீறினால், நாம் ஒருபோதும் மகிழ்ச்சியாய் இருக்கமுடியாது என்பதை நினைவுகூருங்கள்.

**ஆனால்**

ஒரு விசுவாசியை மாத்திரம் மணந்து கொள்வதின் முக்கியத்துவத்தைக் குறித்து நாம் இதுவரை பேசினோம். ஆனால் ஒருவேளை இப்படியும் சம்பவிக்கக்கூடும். ஒரு பெண் அல்லது ஆண் சீஷர் ஆவதற்கு முன்னால், ஏற்கனவே திருமணம் ஆகியிருக்கக்கூடும் .இந்தக் காரியத்தில், விசுவாசியான துணவர் தனது துணையை விட்டுப்போக அனுமதி இல்லை. அவிசுவிவா சியான அவனாவது அவளாவது விட்டுப்போவேன் என்று கட்டாயப்படுத்தி கூறும் பட்சத்தில், அவரைத் தடுப்பது மிகக்கடினமாக இருக்கும். ஆனால் ஒரு விசுவாசி குடும்ப ஜீவியத்தில் தனது பங்கை உண்மையுடன் நிறைவேற்றி, "அதை வெற்றிகரமாக்க" எதிர்பார்க்கப்படுகிறார்.

அனேகர் தங்களது விசுவாசியான துணைகளின் உண்மையான மாதிரியின் மூலம் கிறிஸ்துவினிடம் ஈர்க்கப்பட்டுள்ளனர். இதேப் போல நடக்கக்கூடும் என்று பவுல் கூறின ஆலோசனையின்படி ***1.கொரிந்தியர் 7:16***-ல் இவ்வாறு வாசிக்கிறோம்,

***"மனைவியானவளே நீ உன்புருஷனை இரட்சிப்பாயோ அல்லவோ உனக்கு எப்படி தெரியும்? புருஷனே, நீ உன் மனைவியை இரட்சிப்பாயோ அல்லவோ உனக்கு எப்படி தெரியும்?".***

**பல பாலாரைக் குறித்த ஒரு வார்த்தை**

சில தேசங்களில் ஒருவன் இரண்டு ( அல்லது கூடுதலான) மணைகளை ஒரே வேளையில் வைத்திருக்க அனுமதிக்கப்படுவதுண்டு.. ஒரு அவிசுவாசியைத் திருமணம் செய்வதும், விவாகரத்து செய்வதும் போலவே இதுவும் ஒரு பெரிய தவறாகும். அது மகிழ்ச்சியைக் குறைப்பதுடன் உண்மையில்லாமல் ஜீவிக்க ஊக்கமூட்டுவதாக இருக்கும். மேலும் அது ஒரு கணவனும். ஒரு மனைவியும் அன்பில் இணைக்கப்படுதல் என்கிற பெரிய கிறிஸ்தவ எண்ணத்தை ஒதுக்கிவைத்துவிடும்.

***“இதனிமித்தம் புருஷன் .தன் மனைவியோடு இசைந்திருப்பான்; அவர்கள் ஒரே மாம்சமாயிருப்பார்கள்” (ஆதியாகமம் 2:24)***

**கிறிஸ்துவுக்குள் எல்லோரும் ஒன்று**

கிறிஸ்துவைத் தங்கள் தலையாகக் கொண்ட விசுவாசிகள் அனைவரும் ஒரே சரீரமாக கிறிஸ்துவோடு சேர்த்து இணைக்கப்பட்டுள்ளனர். வேதாகமத்தில் கொடுக்கப்பட்ட சத்தியம் காக்கப்படுவதைக் கவனிப்பது அவர்களின் கடமை யாகும். ஒருவரும் அதோடு ஒன்றும் கூட்டாமலும், அதிலிருந்து எதையும் எடுத்துப்போடாமலும் பார்த்துக்கொள்வதன் மூலம் கிறிஸ்துவின் கட்டளைக ளைக் கைக்கொள்ள முயற்சிக்கவேண்டும்.

திருச்சபை அங்கத்தினரில் ஒருவர் வேண்டுமென்றே இந்தக் கட்டளைகளை மீறினால், அவன் தனது தவறுகளைக் கண்டு சரியான வழிக்குத் திரும்பிவரத் தேவையான அனைத்து உதவிகளையும் பிறர் அவனுக்கு செய்யவேண்டும். அவன் தொடர்ந்து தவறாக நடந்துக்கொண்டே இருந்தால், அப்போது அவ னது சகீஷர்கள் தங்களை அவனிடமிருந்து விலக்கிக்கொள்வது தவிர வேறு வழியில்லை.

**கிறிஸ்துவுக்குள் ஐக்கியம்**

கிறிஸ்துவின் சீஷர்கள் உலகமெங்கும் சிதறியிருக்கிறார்கள். ஆனால் அவர்-கள் எல்லாரும் ஒரே எஜமானானவரைச் சேவிக்கிறார்கள். ஆனாலும் அவர் கள் ஒரே நம்பிக்கையைப் பகருகின்றனர்.

அவர்கள் அன்பிலும் ஐக்கியத்திலும் ஒன்றாக கட்டப்பட்டு, சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கிற வேலையில் ஒன்றாக இணைக்கப்பட்டுள்ளார்கள்.

எனவே பவுல் நமக்குக் கட்டளையிடுகிறபடி,***”நான் வீணாக ஓடினதும் வீ ணாக பிரயாசப்பட்டதுமில்லையென்கிற மகிழ்ச்சி கிறிஸ்துவின் நாளில் எனக்கு உண்டாயிருப்பதற்கு, ஜீவவசனத்தைப் பிடித்துக்கொண்டு, உலகத் திலே சுடர்களைப்போலப் பிரகாசிக்கிற நீங்கள், கோணலும் மாறுபாடுமான சந்ததியின் நடுவிலே குற்றமற்றவர்களும் கபடற்றவர்களும், தேவனுடைய மாசற்ற பிள்ளைகளாக இருக்கும்படிக்கு, எல்லாவற்றையும் முறுமுறுப்ப ில்லாமாலும் தர்க்கிப்பில்லாமலும் செய்யுங்கள் பிலிப்பியர் 2:14-16***).

பாடப்பொருள்

1. நமது அதிகாரிகள் தேவனுக்குக் கீழ்ப்படியவேண்டாம் என்று சொல்லுகிற சமயம் தவிர மீதியெல்லாற்றிலும் அவர்களுக்குக் கீழ்ப்படியவேண்டும்.
2. நாம் அரசியலில் அல்லது போர்களிலோ அல்லது யுத்தங் களிலோ எந்த ஈடுபாடும் வைக்கக்கூடாது.
3. ஒரு மனிதன் ஒரே மனைவியை உடையவனாய் இருக்கவே ண்டும். ஜீவியகாலம் எல்லாம் அவளோடே கூடவே வாழ வேண்டும்.
4. .ஒரு அவிசுவாசியை மணந்துக்கொள்வது துக்ககரமான தவறாகும்.

**இது கிறிஸ்டடெல்ஃபியன் வேதாகம சங்கத்தாரால் இலவசமாக வெளியிடப்பட்டது.**

**பாடம் எண்.22**

.................................................................................................................

## *ஜீவியத்தின் புதுப்பித்தலில் நடப்பது*

**வாரவாசிப்புகள் சங்கீதம் 119,**
**பிலேமோன் 1.**
**பாட வாசிப்பு எபிரெயர், அதிகாரம் 12.**

நாம் ஞானஸ்நானம் பெற்றபோது மறுபடியும் பிறந்திருக்கிறோம். இயேசு தம்மிடம் ராத்திரியில் வந்த நிக்கோதேமுவிடம் கூறினது என்னவென்றால்,

***"ஒருவன் மறுபடியும் பிறவாவிட்டால், தேவனுடைய ராஜ்தத்தைக் காணமுடியாது" (யோவான் 3:3***).

இயேசு தமது நினைவுக்குள் இயற்கையான பிறப்பை அல்ல, ஆவிக் குரிய பிறப்பைக்குறித்து மேலும் அவனுக்கு விவரித்தார். ***யோவான் 3:6-ல் அவர் கூறினது, "மாம்சத்தில் பிறப்பது மாம்சமாயிருக்கும்; ஆவியில் பிறப்பது ஆவியாயிருக்கும்"***

ஒரு குழந்தை பிறக்கும்போது ஒரு புதிய ஜீவியம் ஆரம்பமாகிறது. அதைப்போல நாம் ஞானஸ்நானம் பெறும்போது ஒரு புதிய ஜீவியத்தை, "கிறிஸ்துவுக்குள்" ஒரு ஜீவியத்தை ஆரம்பிக்கிறோம். பவுல் அப்போஸ்தலன் ***2.கொரிந்தியர் 5:17-ல்*** இவ்வாறு கூறுகிறான்**,**

***"ஒருவன் கிறிஸ்துவுக்குள்ளிருந்தால் புதுசிருஷ்டியாயிருக்கிறான்"***

நாம் கிறிஸ்து இயேசுவில் வளரவேண்டுமென்றால், நமது பங்கை நாம் செய்தாக வேண்டும். தொடர்ந்து போராட வேண்டும். நாம் போராடா

விட்டால், நாம் ஞானஸ்நானம் பெறும்போது தவிர்த்த அந்த ''பழைய மன ிதன்'' நம்மில் உள்ள மேன்மையானவைகளின் பலனை எடுத்துக்கொள்வான்.

**வழியில் நமக்கு உதவி**

நாம் தனியாகப் போராடினால் ஒருபோதும் கிறிஸ்துவுக்குள் ''வளர'' முடியாது.. ஆனால் நமது ஆவிக்குரிய வளர்ச்சிக்கென்று தேவையான சகலத்தையும் தேவன் நமக்குக் கொடுத்திருக்கிறார். கர்த்தராகிய இயேசுவின் மூலம் நாம் ஜெபத்தில் அவரிடம் கிட்டிச்சேரும் பெரிய சிலாக்கியத்தைத் தேவன் நமக்குக் கொடுத்திருக்கிறார். நமது கஷ்டங்கள், நமது சந்தோஷங்கள் மற்றும் நமது துக்கங்கள் எல்லாவற்றையும் அவர் மேல் வைத்து, பயபக்தியுடன் அவரிடம் வந்து இயேசுவின் நிமித்தம் நமக்கு உதவி செய்யவும், நமக்கு பதில் அளிக்கவும் அவரிடம் கேட்கலாம். அவர் தமது வார்த்தையாகிய வேதாகமத்தை நமக்குக் கொடுத்திருக்கிறார். நமக்கு அதைவிட நல்லதொரு வழிக்காட்டி வேறொன்றுமில்லை. அது நமக்கு தேவனுடைய வழியை அதிகமதிகமாய் போதிக்கிறது. அவர் விரும்பின பிரகாரம் நாம் கிரியைச் செய்யும்படி நமக்கு அது உதவும் மேலும் கிறிஸ்துவில் ''புதிய மனுஷன்'' ஆக வளரும்படி உதவிசீய்யும். நாம் ***2.தீமோத்தேயு 3:16-17***-ல் இவ்வாறு வாசிக்கிறோம்,***''வேதவாக்கியங்கள் எல்லாம் தேவஆவியினால் அருளப்பட்டி ருக்கிறது. தேவனுடைய மனுஷன் தேறினவனாகவும், எந்த நற்கிரியையுஞ் செய்ய தகுதியுள்ளவனாகவும் இருக்கும்படியாக, அவைகள் உபதேசத்துக்கும், கடிந்துக்கொள்ளுதலுக்கும், சீர்திருத்துதலுக்கும், நீதியைப் படிப்பிக்குதலுக்கும் பிரயோஜனமுள்ள வைகளாய் இருக்கிறது.''***

தமது வார்த்தையையும், தமது வழிகளையும் நாம் நினைக்கத்தக்கதான திறமையை நமக்கு அளித்திருக்கிறார், ***நீதிமொழிகள் 23:7***-ல் இவ்வாறு எழுதப் பட்டுள்ளது,

***''அவன் (வன்கண்ணன்- வசனம் -6) இருதயத்தின் நினைவு எப்படியோ அப்படியே, அவன் இருக்கிறான்''***.

நாம் நமது சிந்தைகளைத் தேவனுடைய காரியங்களில் அதிகமதிகமாய் ஈடுப டுத்தினால், படிப்படியாக நாம் மேன்மையான ஆண்களும் பெண்களுமாக மாறுவோம்.

**விசுவாசிப்பதும் கிரியைச் செய்வதும்**

வாசிப்பதும், ஜெபிப்பதும், மற்றும் தியானிப்பதும் சரியான காரியங்களைச் செய்யும்படி நமக்கு உதவும்.

ஒருமுறை ஒருவன் இயேசுவிடம் கேட்டான், ***"நியாயப்பிரமாணத்திலே எந்தக் கற்பனை பிரதானமானது? " (மத்தேயு 22:36)***.

இதற்கு இயேசு கொடுத்த பதிலை ***37-39 வசனங்களில்*** நாம் வாசிக்கிறோம், ***"உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் உன் முழு இருதயத்தோடும் உன் முழுஆத்துமாவோடும், உன் மனதோடும் அன்புகூருவாயாக. இது முதலாம் கற்பனை. இதற்கு ஒப்பாயிருக்கிற இரண்டாம் கற்பனை என்னவெனில், உன்னிடத்தில் நீ அன்புகூருகிறது போல, பிறரிடத்திலும் அன்புகூருவாயாக என்பதே".***

இந்தக் கற்பனைகளைக் கைக்கொள்வது அவ்வளவுசுலபமல்ல தேவன் எவ்வளவாக நம்மை நேசித்தார், எவ்வளவாக நமக்குச் செய்திருக்கிறார் என்பதை நினைவுபடுத்திக்கொண்டே இருப்போமானால் நாம் தேவனி டம் நமது முழு இருதயத்தோடும், முழு ஆத்துமாவோடும், முழு மனதோடும் அன்புகூர முடியும்.

அவர் நமக்கென்று பெரிய காரியங்களைச் செய்திருக்கிறார். அவருக்கு நாம் இந்தப் பெரிய கடனை எப்படித் திரும்பச் செலுத்துவது? நாம் அவருக்கென்று எதையும் செய்ய முடியாதவர்கள்.

ஆகிலும் இயேசு நமக்குக் கொடுத்த இரண்டாம் கற்பனை எது? ***"இதற்கு ஒப்பாயிருக்கிற இரண்டாம் கற்பனை என்னவென்றால், உன்னிடத்தில் நீ அன்புகூருகிறதுபோல பிறனிடத்திலும் அன்புகூரு வாயாக என்பதே"***. இதில் நாம் செய்யக்கூடியது ஒன்று இருக்கிறது.

தேவன் நமக்கு அன்பு காண்பித்திருக்கிறபடியே, நம்மால் பிறருக்கு உதவவும், மனதார அன்பைக் காண்பிக்கவும் முடியும்.

நாம் பிறருக்குச் செய்யக்கூடிய பெரிய நன்மை என்னவெனில், தேவனு டைய ராஜ்யத்தின் நற்செய்தி அறிவிப்பதாகும். இதை நாங்கள் நம்பி விசுவாசித்திருக்கிறோம். தேவன் நாம் தம்முடைய வழிகளைப் பின் பற்றவும், தம்முடைய ராஜ்யத்தின் சந்தோஷத்தில் பங்குபெறவும் அழைத்ததுபோல, நாம் கண்டுப்பிடித்த சந்தோஷத்தைப் பிறரிடம் பகரும்படி அழைக்கவேண்டும்.

இயேசு ஒருமுறை கூறினார், ***"மனுஷர் உங்களுக்கு எவைகளைச் செய்ய விரும்புகிறீர்களோ, அவைகளை நீங்களும் அவர்களுக்குச் செய்யுங்கள்" (மத்தேயு 7:12)***. நாம் பிறருக்குச் செய்யக்கூடிய அன்பின் கிரியைகளை, தேவன் தமக்குச் செய்ததுபோல ஏற்றுக்கொள்வார். ஆகையினால் அவர் நமக்குக் காண்பித்த அன்பைப் பாராட்டும்படி நாம் செய்யக்கூடியவைக ளில் இதுவும் ஒன்று.

**சீஷனும் உலகமும்**

அவபக்தியான அநேக காரியங்கள் இன்றைய உலகத்தில் உள்ளன. நமது மனதைப் பொல்லாததும், அசுத்தமுமான எண்ணங்களுக்கு நேராக வேகமாய் ஈர்க்கக்கூடிய அநேக புத்தகங்கள், பத்திரிக்கைகள், சலன சித்திரங்கள், முதலானவைகள் உதாரணங்களாக உள்ளன. சில வேளைகளில் இவைகள் நமக்குப் பெரிய காரியங்களாகத் தோற்ற மளிக்கின்றன. எனினும் இவைகள் எவ்வளவாக பெரியதாய் நமக்குத் தோன்றினாலும்,, நாம் அவைகளைவிட்டு தூரவிலக வேண்டும். நாம் அவ்வாறு செய்யாத பட்சத்தில், அவைகள் நம்மைத் தேவனிடமிருந்து திசைதிருப்பி விடும்.

உலகத்தின் அவபக்தியான சந்தோஷங்களில் பங்கு பெறாமல் இருப்பதனால் நமது நண்பர்களில் சிலரை இழக்க நேரிடும். ஏனெனில் முன்னால் நாம் ரசித்து செய்த காரியங்களை ஏன் இப்போது மறுக்கிறோம் என்பதை அவர்க ளால் புரிந்துக்கொள்ள முடியாது.
ஆனால் நாம் அநேக புதிய நண்பர்களைக் கண்டுப்பிடிப்போம். ஏனெனில் அவர்கள் எல்லாரும் நம்மைப்போன்று உலகத்தினின்று

தங்களைப் பிரித்த  தினால், நம்மோடு ஒன்றாக இசைந்திருப்பார்கள். அவர்களும் தேவனுடைய பிள்ளைகளும், கிறிஸ்துவுக்குள் சகோதர சகோதரிகளுமாக இருப்பார்கள்.

**இயேசுவை நினைவுகூருதல்**

ஞானஸ்நானம் நமக்கு ஒரு புதிய ஆரம்பத்தைத் தருகிறது. நாம் ஞானஸ்நானம் பெறும்போது, தேவனுடைய ராஜ்யத்திற்கு நேராக நம்மை நடத்தும் இடுக்கமும் நெருக்கமுமான வழியில் நம்மை நிறுத்துகிறது. ஆனாலும் நாம் இன்னும் மனித சுபாவத்தில் இருக்கிறோம் இயேசு சிலுவையின் மேல் மரித்தபோது என்னென்னவற்றைச் செய்தார் என்பதை நாம் வேகமாக மறந்து விடுகிறோம்.

தமது சீஷர்கள் எவ்வளவு சுலபமாக மறந்துவிடுவார்கள் என்பதை இயேசு அறிந்திருந்தார். எனவே அவர்களை ஞாபகப்படுத்தும்படி ஒன்றை அவர் கூறினார். உங்கள் வேதாகமத்தை லூக்கா 22:14-20 வசனங்களுக்குத் திருப்பி வாசியுங்கள். இந்தக் கதையானது நாம் வழக்கமாக அழைக்கிற ‘‘இறுதி இராப்போஜனம்’’ குறித்ததாகும். ஏனெனில் இயேசு தமது மரணத் திற்கு முன்பு தமது சீஷர்களுடன் பங்கெடுத்த இறுதி போஜனமாகும்.

/இயேசு எவ்வாறு தமது ஜீவனை அவர்களுக்கென்று கொடுத்தார் என்பதை ரொட்டியும் திராகைஷ ரசமும் அவரது சீஷர்களுக்கு எவ்வாறு ஞா  பகமூட்டுகிறது என்பதைப் பாருங்கள். அவர் அவர்களிடம், ***‘‘என்னை நினைவுகூரும்படி இதைச் செய்யுங்கள்’’ என்று கூறினார்***. இப்போது 1..கொரிந்தியர் 11:23-28 வசனங்களை வாசியுங்கள்.

ஆதி கிறிஸ்தவர்கள் ஒவ்வொரு வாரத்தின் முதல் நாளிலும் கூடி, இயேசு அவர்களுக்குக் கட்டளையிட்ட விதமாக அவரை நினைவுகூர்ந்தார்கள். முதல் சீஷர்கள் செய்ததுபோல கர்த்தராகிய இயேசுவில் உண்மை சீஷர்களும் ஒன்றாக சந்திப்பார்கள் (வழக்கமாக ஞாயிற்றுக் கிழமை தான் இப்படிப்பட்ட சந்திப்புகளுக்கு மிக வசதியான நாளாகும்.). அந்நாளில் ரொட்டியைப் பிட்டும், திராகைஷ ரசத்தைக் குடித்தும், தங்களுக்கென்று இயேசுவின் சரீரம் எவ்வாறு உடைக்கப்பட்டது என்றும் அவருடைய இரத்தம் எவ்வாறு சிந்தப்பட்டது என்றும் நினைவுகூருவார்கள்.

நாம் கிறிஸ்துவுக்குள் வளர்ந்து வரும்போது, இயேசுவை இந்த வழியில் நினைவுகூரும் பழக்கமானது கூடுதலாக முக்கியமானதொன்றாக நமக்குத் தோன்றும். அவர் எப்போதும் நம்முடனே கூட இருக்கிறார் என்பதை நாம் உணர்ந்துக்கொள்ள அது உதவுகிறது.

**நீங்கள் தீர்மானிக்க வேண்டும்.**

ஆகையால் நீங்கள் இந்தப் பாடங்களை வாசித்து முடிக்கும்போது, ஒரு வழிக்காட்டியின் அருகே நிற்பவர்களைப்போன்று இருப்பீர்கள். ஒரு வழி, நீங்கள் அறிந்தபடி மரணத்துக்கு வழிநடத்தும். அடுத்த வழியோ ஜீவனுக்குப் போகும் வழியாகும். வாழ்க்கைப் பயணத்தின் வழி நெடுகிலும் தேவனுடைய வார்த்தையை விசுவாசித்து, கிறிஸ்து இயேசுவுக்குள் ஞானஸ்நானம் பெற்றவர் கள் அனைவரும் தங்கள் பயணத்தில் இயேசு தங்களோடு இருப்பதை அறிவார்கள். நீங்களும் இவர்களோடுகூட சேர்ந்துக் கொள்வீர்களா? தேவனு டைய வார்த்தையின் மகத்தான செய்தியை நீங்கள் விசுவாசிப்பீர்களா? நீங்களும் கிறிஸ்துவுக்குள் ஞானஸ்நானம் பெறுவீர்களா? இயேசு கூறினதை நினைவுகூருங்கள்,

***“விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம், பெற்றவன் இரட்சிக்கப்படுவான்” (மாற்கு 16:16).***

பாடப் பொருள்

1. **அநுதினம் வேதாகமத்திலிருந்து ஒரு பகுதியை நாம் வாசிக்க முயற்சி செய்யவேண்டும். தொடர்ந்து ஜெபிக்கவேண்டும்.**
2. **நாம் ஞானஸ்நானம் பெற்ற பின், இயேசு கிறிஸ்துவின் ஞாபகார்த்தமாக ஒவ்வொரு வாரமும் சகவிசுவாசிகளோடு சேர்ந்து ரொட்டியைப் பிட்கவும், திராக்ஷை ரசத்தைக் குடிக்கவும் முயற்சி செய்யவேண்டும். (இது எப்பொழுதும் சாத்தியமில்லை தான். ஏனெனில் நாம் குடியிருக்கும் பகுதிகளில் நம்மைப் போன்ற அதே விசுவாசத்தை உடையவர்கள் யாரும் இருப்ப தில்லை).**

3. நம்மைப் பாவஞ்செய்ய வைக்கிற அனைத்துக் காரியங்களையும் நாம் விட்டுவிட முயற்சிக்க வேண்டும்.
4. பிறருக்குத் தொடர்ச்சியாக நன்மைசெய்ய நாம் முயல வேண்டும்.

தயவுசெய்து இந்தப் புத்தகத்தின் பக்கம் 105 & 106-ல் காணும் இந்தப் பாடங்களுக்குச் சம்பந்தப்பட்ட கேள்வி/விடைத்தாளுக்குச் சென்று, "ஆசிரியர் பிரதி"யை எங்களிடம் அனுப்பி வையுங்கள்.

**இது கிறிஸ்டடெல்ஃபியன் வேதாகம சங்கத்தாரால் இலவசமாக வெளியிடப்பட்டது.**

**கிறிஸ்டடெல்ஃபியன் வேதாகமப் பாடமுறை 22 பாடங்களின்**

**கேள்வி/விடைத்தாள் "ஆசிரியர் பிரதி" பாடங்கள் 1 & 2**

**குறிப்பு:** இவைகள் இந்தவிதப் பாடமுறையின் சில பிரதிகளில் காணப்படுகிறதுபோல கட்டுரை அடங்கிய கேள்விகளைப்போன்று இல்லை.

**தயவுசெய்து ஒரே ஒரு பதிலை மாத்திரம் தெரிந்துக்கொள்ளுங்கள்.**

**1.1. ஏன் வேதாகமம் மற்ற எல்லா புத்தகங்களிலிருந்தும் வேறுபட்டது?**

a) அது மனிதன் அறிந்த புத்தகங்களிலேயே மிகப் பழையது.
b) அது தேவஆவியினால் அருளப்பட்டது. அதின் அர்த்தம் தேவனுடைய சுவாசத்தினால் அருளப்பட்டது.
c) அது பரிசுத்த புத்தகங்களிலேயே மிகப் பெரியது.
d) அது ஒரு பரிசுத்த மொழியில் எழுதப்பட்டது.

**1.2. பின்வருபவைகளில் எது பரிசுத்த வேதாகமத்தை விசுவாசிக்கும்படியான ஒரு காரணம்.**

a) இது சத்தியம். அதன்மூலமாக வாழவேண்டும் என்று இயேசு கூறி னார்.
b) எதிர்கால தீர்க்கதாரிசனத்தின் நிறைவேறுதல்
c) சரித்திர பூர்வமாக பொருந்தக்கூடியது.
d) மேற்கண்டமூன்று விடைகளும் சரியானது.

**1.3. வேதாகமத்தில் எத்தனை புஸ்தகங்கள் அடங்கியுள்ளன?**

**a) 1.**
**b) 2.**
**c) 12.**
**d) 66.**

**2.1. தேவன் ஆதாமின் கீழ்ப்படியாமையை எவ்வாறு தண்டித்தார்?**

a) அவன் நரகத்துக்கு அனுப்பப்பட்டான்.
b) அவன் உடனடியாக மரித்தான்.
c) அவன் பின்னால் மரிக்கும்படியாக செய்தார்.
d) தேவன் ஆதாமைத் தண்டிக்கவில்லை.

**2.2. ஏன் எல்லா மனிதர்களும் மரிக்கின்றனர்?**

a) ஏனெனில் எல்லா மனிதரும் ஆதாமின் பிள்ளைகள்

b) ஏனெனில் மனிதர்கள் பாவத்தைத் தவிர, நல்லவர்களாக பிறந்தனர்.

c) ஏனெனில் சரீரம் மரிக்கவேண்டும், ஆனால் ஆவியோ ஜீவித்துக் கொண்டே இருக்கும்.

d) ஏனெனில்ஆதாமின் பாவத்தினிமித்தம் நாம் தண்டிக்கப்படு கிறோம்.

**2.3 .பாவம் நிறைந்த மனிதனுக்கு ஜீவநம்பிக்கையை அளிப்பதற்காகத் தேவன் என்ன செய்தார்?**

a) அவர் பரலோகத்தில் ஒரு ஸ்தலத்தைக் கட்டினார்.

b) அவர் மேல் நம்பிக்கை வைக்கிறவர்களை இரட்சிக்கும்படியாக அவர் தமது குமாரனை அனுப்பினார்.

c) எல்லாரையும் இரட்சிக்கும்படியாக அவர் தமது குமாரனை அனுப்பினார்.

d) பாவம் நிறைந்த மனிதனுக்கு நம்பிக்கையில்லை.

**கிறிஸ்டடெல்ஃபியன் வேதாகமப் பாடமுறை 22 பாடங்களின் கேள்வி/விடைத்தாள் "ஆசிரியர் பிரதி" பாடங்கள் 3 & 4**

**குறிப்பு:** இவைகள் இந்தவிதப் பாடமுறையின் சில பிரதிகளில் காணப்படுகிறதுபோல கட்டுரை அடங்கிய கேள்விகளைப்போன்று இல்லை.

**3.1. இயேசு பரமேறினதைச் சீஷர்கள் கண்டபோது தேவதூதர்கள் அவர்களுக்குக் கொடுத்த செய்தி என்ன?**

a) இயேசு எப்படி வானத்துக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட தைக்கண் டார்களோ அப்படியே திரும்பவும் பூமிக்கு வருவார்.

b) இயேசு பிறப்பதற்கு முன்னால் இருந்த இடத்திற்கே இப்போது போயிருக்கிறார்.

c) இயேசு உனக்காக பரலோகத்தில் ஒர் ஸ்தலத்தை ஆயத்தம் பண்ணும்படியாக போயிருக்கிறார்.

d) விசுவாசிக்கிற யாவரும் இதேவிதமாக பரலோகத்திற்கு ஏறுவார்கள்.

**3.2. கிறிஸ்துவின் வருகையைக் குறித்து இற்றில் எது பொருந்தாது?**

a) அப்போஸ்தலர் 3:19-20.

b) 2.பேதுரு 3:9-10

c) அப்போஸ்தலர் 2:34.

d) 1..தெசலோனிக்கேயர் 4:16.

**3.3. இயேசு எப்போது திரும்ப வருவார்?**

a) இயேசு ஏற்கனவே வந்து, பரலோகத்தில் தமது ராஜ்யத்தை ஸ்தாபித்தார்.

b) முழு உலகமும் அவரை விசுவாசிக்கும்போது.

c) 2000 ஆண்டுகளுக்குப் பிறகு

d) அந்த நாளையும். அந்த நாழிகையையும் ஒருவரும் அறியமாட்டார்கள்.

**4.1. தேவனுடைய ராஜ்யம் ஒருமுறை எங்கே இருந்தது?**

a) ரோம்

b) இஸ்ரவேல்

c) ஏதேன்

d) பரலோகம்

**4.2 ஏன் அது கர்த்தருடைய ராஜ்யம் என்று அழைக்கப்பட்டது?**

a) ஏனெனில் தாவீதுக்கு தேவன் ராஜ்யத்தைக் கொடுத்தார்.

a) ஏனெனில் அது பரலோகத்தின் பிரதிமையாக இருந்தது.

b) ஏனெனில் இயேசுவைப்போல தேவன் அதை ஆளுவார்.

c) ஏனெனில் ராஜ்யம் ஒரு சபையாக இருப்பதால்.

**4.3. தேவனுடைய ராஜ்யத்தை யார் மீண்டும் நிலைநிறுத்துவார்?**

a) திருச்சபை

b) இயேசு

c) இஸ்ரவேலின் ஜனங்கள்

d) அதுமீண்டும் நிலைநிற்கப்படாது.

**கிறிஸ்டடெல்ஃபியன் வேதாகமப் பாடமுறை 22 பாடங்களின் கேள்வி/விடைத்தாள் "ஆசிரியர் பிரதி" பாடங்கள் 5 & 6**

**குறிப்பு:** இவைகள் இந்தவிதப் பாடமுறையின் சில பிரதிகளில் காணப்படுகிறதுபோல கட்டுரை அடங்கிய கேள்விகளைப்போன்று இல்லை.

**5.1. தேவனுடைய ராஜ்யம் எவ்வளரவு தூரம் பரவும்?**

a) உலகம் முழுவதும்

b) இஸ்ரவேல் (இன்றைய எல்லைகள் வரை)

c) இஸ்ரவேல் (சாலொமோனின் நாட்களில் இருந்த எல்லை வரை).

d) பரலோகம்.

**5.2. எந்தப் பட்டணம் ராஜ்யத்தின் தலைநகரமாக இருக்கும்?**

a) பாபிலோன் எ

b) பரலோகத்தில் உள்ள தேவனுடைய நகரம்.

c) எருசலேம்.

d) ரோம்.

**5.3. ராஜ்யம் ஸ்தாபிக்கப்படும்போது, உலகம் எதைப்போல் இருக்கும்?**

a) ஒவ்வொரு தேசத்திலும் ஜனநாயகம் இருக்கும்.

b) வனாந்தரம் செழித்து பூக்கும்.

c) இப்பொழுது வாழுகிற எல்லாரும் அழிவில்லாமல் இருப்பார்கள்.

d) நீதிமான்கள் இயேசுவால் பரலோகத்திற்கு எடுக்கப்படுவார்கள்.

**6.1. இஸ்ரவேல் தேச சரித்திரத்தில் யார் பெரியவனாக இருக்கவில்லை?**

a) மோசஸ்

b) தாவீது

c) ரெகோபெயாம்

d) எசேக்கியா

**6.2. ரெகோபெயாமின் ஆட்சி காலத்தில் என்ன சம்பவித்தது?**

a) ராஜ்யமானது, 10 கோத்திரங்கள் வடக்கிலும், 2 கோத்திரங்கள் தெற்கி லுமாக பிளந்தது.

b) வடக்கு ராஜ்யம் அசீரியாவின் கைகளில் விழுந்தது.

c) நெபுகாத்நேச்சாரால் தேவாலயம் அழிக்கப்பட்டது.

d) யூதர்கள் பாபிலோனிலிருந்து திரும்பினார்கள்.

**6.3. யூதாவின் ராஜ்யம் கீழ்ப்படியாமையினால் எப்படி தண்டிக்கப்பட்டது?**

a) பஞ்சம்

b) வாதைகள்

c) சிறைப்பட்டுப் போகுதல்

d) பூமிஅதிர்ச்சி

**கிறிஸ்டடெல்ஃபியன் வேதாகமப் பாடமுறை 22 பாடங்களின் கேள்வி/விடைத்தாள் "ஆசிரியர் பிரதி" பாடங்கள் 7 & 8**

**குறிப்பு:** இவைகள் இந்தவிதப் பாடமுறையின் சில பிரதிகளில் காணப்படுகிறதுபோல கட்டுரை அடங்கிய கேள்விகளைப்போன்று இல்லை.

### 7.1. யோவான் ஸ்நானகனின் வேலை எதுவாக இருந்தது?

a) இயேசுவுக்காக ஜனங்களை ஆயத்தப்படுத்தினான்/

b) அவன் ராஜ்யத்தை ஸ்தாபிக்கவேண்டியிருந்தது.

c) அவன் அற்புதங்களைச் செய்து, பிசாசுகளைத் துரத்தினான்.

d) அவன் ரோமருக்கு எதிராக இஸ்ரவேலை வழிநடத்தவேண்டியிருந்தது.

### 7.2. யூதர்கள் இயேசுவைத் தள்ளிவிட்டபடியால் என்ன சம்பவித்தது?

a) தேவன் தம்முடைய ஜனத்திலிருந்து அவர்களை விலக்கிப்போட்டார்.

b) யூதர்கள்மேல் ஒரு சாபம் இந்நாள்வரை இருக்கிறது.

c) யூதர்களில் யாரும் இயேசுவை விசுவாசிக்கவில்லை.

d) தேவன் ரோமரைப் பயன்படுத்தி யூதர்களை எல்லா ஜாதிகளின் மத்தி யிலும் சிதறடித்தார்.

### 7.3. சகாரியா தீர்க்கதரிசி எதை முன்குறித்தான்?

a) கிறிஸ்துவின் நியாயத்தீர்ப்பில் யூதர்கள் தள்ளிவிடப்படுவார்கள்.

b) கிறிஸ்து திரும்ப வரும்போது யூதர்கள் அவரை அடையாளம் கண்டுக் கொள்வார்கள்.

c) எருசலேம் ஒருபோதும் திரும்ப கட்டப்பட மாட்டாது

d) 10 மனிதர்கள் ஒரு யூதனைப் பிடித்து அவனை அடிப்பார்கள்.

### 8.1. மோசே நியாயப்பிரமாணத்தின் மிகமுக்கிய நோக்கம் எது?

a) ராஜா ஞானத்தோடு அரசாட்சி செய்யும்படி உதவ.

b) ஜனங்கள் பாவிகள் என்பதை அவர்களுக்குப் போதிக்க.

c) பொது சுகாதாரத்தை நிலைநாட்ட

d) ஆகார இழப்பை சரிபார்க்க

**8.2. நியாயப்பிரமாணம் ஏன் மனிதர்களை இரட்சிக்க முடியவில்லை?**

a) அது அடிப்படையில் தவறாக எடுத்ததால்.

b) அது யூதர்களுக்கென்று மாத்திரம் இருந்ததால்.

c) நியாயப்பிரமாணத்தை ஒருவராலும் கைக்கொள்ள முடியாததால்.

d) இஸ்ரவேலர் நியாயப்பிரமாணத்தை மீறினதால்.

**8.3. தேவன் இரட்சிப்புக்கென்று எந்த சிறந்த வழியை ஏற்படுத்தினார்?**

a) கிறிஸ்தவர்களுக்கென்று ஒரு புதிய சன்மார்க்க பிரமாணம்,

b) கிறிஸ்துவின் தியாகபலி,

c) புதிய ஏற்பாடு,

d) திருச்சபை.

**கிறிஸ்டடெல்ஃபியன் வேதாகமப் பாடமுறை 22 பாடங்களின் கேள்வி/விடைத்தாள் "ஆசிரியர் பிரதி" பாடங்கள் 9 & 10**

**குறிப்பு:** இவைகள் இந்தவிதப் பாடமுறையின் சில பிரதிகளில் காணப்படுகிறதுபோல கட்டுரை அடங்கிய கேள்விகளைப்போன்று இல்லை.

**9.1. கீழ்க்கண்டவைகளில் எது ஆபிரகாமுக்கு வாக்குத்தத்தமாகக் கொடுக்க ப்படவில்லை?**

a) அவன் பார்த்த தேசம் முழுவதையும் சுதந்தரித்துக்கொள்ள

b) அவன் எல்லா ஜாதிகளுக்கும் ஆசீர்வாதமாக இருக்க.

c) பரலோகத்தில் ஒரு ஸ்தலத்தைப் பெற்றுக்கொள்ள.

d) அவனுக்கு ஒரு குமாரன் கிடைப்பதாக.

**9.2. தேவன் ஆபிரகாமில் ஏன் பிரியமாக இருந்தார்?**

a) அவனுடைய நற்கிரியைகள் மற்றும் தானதர்மங்களால்.

b) அவன் தேவனில் விசுவாசம் வைத்ததால்

c) அவன் பாவமற்றிருந்ததால்

d) அவன் ஒரு ஆட்டைப் பலியிட்டதால்.

**9.3. ஆபிரகாமுக்குச் செய்யப்பட்ட வாக்குத்தத்தங்களில் நாம் எவ்வாறு பங்குக்கொள்ள முடியும்?**

a) நாம் கிறிஸ்துவினுடையவர்களாய் இருந்தால் அந்த வாக்குத்தத் தங்களில் பங்கு பெறக்கூடும்

b) நாம் ஆபிரகாமைப்போல சோதிக்கப்பட்டால்

c) ஆபிரகாமுக்கு வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட இயேசுகிறிஸ்து வை நாம் ஏற்கனவே பெற்றுவிட்டோம்.

d) கிறிஸ்தவர்கள் இந்த வாக்குத்தத்தங்களில் பங்குபெற அவசிய மில்லை.

**10.1. தாவீது தேவனுக்கென்று எதைச் செய்ய விரும்பினான்?**

a) அவன் இஸ்ரவேலை ஒரு பெரிய ராணுவ பலம் கொண்டதாக மாற்ற விரும்பினான்.

b) அவன் பெலிஸ்தியரை அழிக்க விரும்பினான்.

c) அவன் புறஜாதிகளை மதம் மாற்ற விரும்பினான்.

d) அவன் தேவனுக்கென்று ஒரு வீட்டைக் கட்ட விரும்பினான்.

**10.2. தாவீதுக்கு வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட மகன் யார்?**

a) சாலொமோன்

b) இயேசு

c) ஈசாக்கு

d) ஆபிரகாம்

**10.3. இயேசு கிறிஸ்து யாருடைய "வித்து" அல்லது "சந்ததி"?**

a) தாவீது

b) ஆபிரகாம்

c) தாவீது மற்றும் ஆபிரகாம்

d) தேவன்

**கிறிஸ்டடெல்ஃபியன் வேதாகமப் பாடமுறை 22 பாடங்களின் கேள்வி/விடைத்தாள் "ஆசிரியர் பிரதி" பாடங்கள் 11 & 12**

**குறிப்பு:** இவைகள் இந்தவிதப் பாடமுறையின் சில பிரதிகளில் காணப்படுிறதுபோல கட்டுரை அடங்கிய கேள்விகளைப்போன்று இல்லை.

**11.1. முதல் மனிதன் எப்படி உண்டாக்கப்பட்டான்?**

a) பூமியின் மண்ணிலிருந்து

b) இரத்தக்கட்டிகளிலிருந்து

c) ஒரு குரங்கிலிருந்து

d) அவன் பரலோகத்திலிருந்து இறங்கி வந்தான்.

**11.2. ஆதாமும் ஏவாளும் தேவனுடைய கட்டளையை மீறினபோது, எவ்வாறு தண்டனை அடைந்தார்கள்?**

a) அவர்களுடைய ஆடைகள் நீக்கப்பட்டது

b) அவர்கள் மரிக்கக்கூடிய சிருஷ்டிகளானார்கள்

c) பூமியானது என்றென்றைக்கும் சபிக்கப்பட்டது.

d) தேவன் தமது ஆவியைத் திரும்ப எடுத்துக்கொண்டார்.

**11.3. இது நம்மை எப்படி பாதித்தது?**

a) பூமியானது ஒருபோதும் ஏதேனைப்போல திரும்ப மாறமுடியாது.

b) நீதிமான்களுடைய ஆவிகள் மட்டும் பரலோகத்திற்குச் செல்லக்கூடும்.

c) உலகத்தை இப்போது வேதனைப்படுத்தும்படி பிசாசு சுதந்தரமாக விட பட்டுள்ளான்.

d) ஆதாமைப்போல நாமும் மண்ணுக்குத் திரும்புவோம்.

**12.1. மனிதன் மரிக்கும்போது அவனுக்கு என்ன சம்பவிக்கும்?**

a) சரீரம் மண்ணுக்குத் திரும்பும், ஆத்மா பரலோகத்துக்குச் செல்லும்.

b) நல்லவர்கள் பரலோகத்துக்குச் செல்லுவார்கள், துன்மார்க்கர் நரகத்திற் குச் செல்லுவார்கள்.

c) மிருகங்களுக்குச் சம்பவிக்கிறது போலவே மனிதர்களுக்கும் சம்பவிக் கும். மரித்தவர்கள் ஒன்றும் அறியார்கள்.

d) அவனுடைய ஆவி மற்றொரு ஜீவியத்தில் மீண்டும் அவதரிக்கும்.

**12.2. கிறிஸ்துவில் விசுவாசம் வைத்தவனின் நம்பிக்கை என்னவாக இருக்கும்?**

a) கிறிஸ்து திரும்பி வரும் வரைக்கும், அவன் கல்லறையில் நித்திரை செய்வான்.

b) கிறிஸ்து மீண்டும் வரும்வரை, கீழ் உலகத்தில் அவனுடைய ஆவி+ உணர்வுள்ளதாக இருக்கும்.

c) கிறிஸ்துவோடு பரலோகத்தில் இருக்கும்படி,நேரடியாகபோவான்.

d) நியாயத்தீர்ப்பு அடைந்த பிற்பாடு பரலோகத்துக்குப் போவான்.

**12.3. எரிநரகத்தைக் (கெஹென்னா) குறித்து வேதாகமம் என்ன கூறுகிறது?**

a) பிசாசு பாவிகளை என்றென்றைக்கும் வேதனைப்படுத்தக்கூடிய ஒரு அக்கினி குண்டம்

b) ஆத்துமாக்களைத் தூய்மைபடுத்தக்கூடிய ஒரு ஸ்தலம் - உத்தரிப்பு ஸ்தலம்

c) எருசலேமுக்கு வெளியே எரிக்கப்படுகிற குப்பைமேட்டுக்கான ஒரு மொழிபெயர்ப்பு.

d) இந்த ஜீவியத்தில் மனிதன் அனுபவிக்கக்கூடிய பாடுகளின் ஓர் உருவச்சொல்.

**கிறிஸ்டடெல்ஃபியன் வேதாகமப் பாடமுறை 22 பாடங்களின் கேள்வி/விடைத்தாள் "ஆசிரியர் பிரதி" பாடங்கள் 13 & 14**

**குறிப்பு:** இவைகள் இந்தவிதப் பாடமுறையின் சில பிரதிகளில் காணப்படுகிறதுபோல கட்டுரை அடங்கிய கேள்விகளைப்போன்று இல்லை.

**13.1. கீழ்க்கண்டவைகளில் எது ஆபிரகாமின் உயிர்த்தெழுதலைக் குறிப்பிட்டு பேசுகிறது?**

**a) 1.தெசலோனிக்கேயர் 4:16**

**b) யோவான் 5:21**

**c) 1.கொரிந்தியர் 15:22-23**

**d) எபிரெயர் 11:40**

**13.2 உயிர்த்தெழுதல் எப்போது நடைபெறும்?**

**a) மரித்த உடனே**

**b) நியாயத்தீர்ப்புக்குப் பின்பு**

**c) இயேசு இறங்கினபின்பு, உயிரோடிருக்கிறவர்கள் கூட்டிசேர்க்கப்படும் முன்பு.**

**d) கிறிஸ்து இறங்கி, உயிரோடிருக்கிறவர்கள் கூட்டிச் சேர்க்கப்பட்ட பின்பு.**

**13.3. கிறிஸ்து மீண்டும்வரும்போது உயிரோடிருக்கும் விசுவாசிகளுக்கு என்ன சம்பவிக்கும்?**

a) ிறிஸ்துவோடுகூடபரலோகத்திற்குச் செல்லும்படி கூட்டிச்சேர்க்கப்படுவார்கள்.

b) கிறிஸ்துவோடு பூமியிலிருக்கும்படி கூட்டிசேர்க்கப்படுவார்கள்.

c) தேவதூதர்களைப்போல மறுரூபமாக்கப்படுவார்கள்.

d) கிறிஸ்து ஒவ்வொருவரையும் தனித்தனியாக சந்திப்பார்.

**14.1. நியாயத்தீர்ப்பு எப்போது நடக்கும்?**

a) ஒவ்வொருவனின் சொந்த நியாயத்தீர்ப்பு உயிரோடிருக்கையிலேயே நடைபெறும்.

b) ஒருவன் மரிக்கும் அதே நாளில்

c) இயேசு மீண்டும் பூமிக்குத் திரும்பி வருமுன்பு.

d) இயேசு மீண்டும் பூமிக்குத் திரும்பி வந்த பின்பு.

**14.2. யார் நியாயந்தீர்க்கப்படுவார்கள்?**

a) விசுவாசியாதவர்கள் எல்லாரும்

b) விசுவாசித்தவர்கள் எல்லாரும்

c) தேவனைப்பற்றி அறிந்தவர்கள் எல்லாரும்

d) தேவனைப்பற்றி கேள்விப்பட்ட அல்லது கேள்விப்படாத எல்லாரும்.

**14.3. தள்ளப்பட்டவர்களின் விதி என்னவாக இருக்கும்?**

a) அவர்கள் எரிநரகத்தில் எப்போதும் எரிவார்கள்.

b) அவர்களுக்கு பூமியின் மேல் மற்றொரு வாழ்க்கை அளிக்கப்படும்.

c) அவர்கள் அழிக்கப்பட்டு இல்லாமல் போவார்கள்.

d) அவர்கள் பிசாசுகளாக மாறுவார்கள்

**கிறிஸ்டடெல்ஃபியன் வேதாகமப் பாடமுறை 22 பாடங்களின் கேள்வி/விடைத்தாள் "ஆசிரியர் பிரதி" பாடங்கள் 15 & 16**

**குறிப்பு:** இவைகள் இந்தவிதப் பாடமுறையின் சில பிரதிகளில் காணப்படுகிறதுபோல கட்டுரை அடங்கிய கேள்விகளைப்போன்று இல்லை.

**15.1 தேவன் யார் ?**

a) பிதாவாகிய தேவன், குமாரனாகிய தேவன், மற்றும் பரிசுத்த ஆவியாகிய தேவன் - மூன்று நபர்கள்

b) பிதாவாகிய தேவன், குமாரனாகிய தேவன் - இரண்டு நபர்கள்

c) பிதாவாகிய தேவன் - ஒரு நபர்

d) ஒருவர், ஆனால் திரித்துவத்தில் இருப்பதுபோல மூன்று ஆள்தத்துவம் உடையவர்.

**15.2. கீழ்க்கண்ட எது தேவனிடம் இயேசுவுக்கு உள்ள உறவை சிறப்பாக விளக்குகிறது?**

a) இயேசு தேவனைவிட பெரியவர்

b) இயேசு தேவனுக்குச் சமமானவர்

c) இயேசு தேவனைவிட குறைவானவர்

d) இயேசுவும் தேவனும் ''ஒரே நபர்'' - ஒன்றாக இருப்பவர்

**15.3. இயேசு ஏன் தேவனுடைய குமாரன் என அழைக்கப்படுகிறார்?**

a) இயேசு பிறப்பதற்கு முன், குமாரனாகிய தேவனாக பரலோகத்தில் ஏற்கனவே இருந்தார்.

b) அவர் மரியாளின் குமாரன், மேலும் மரியாள் தேவனுடைய தாய்

c) மரியாளின் நிமித்தம் அவர் மனுஷகுமாரனும், ஆனால் பரிசுத்த ஆவியினால் அவர் தேவகுமாரன்

d) அவர் ஒரு சாதாரண மனிதனாக இருந்தும், அவர் செய்த நன்மையினிமித்தம் தேவனுடைய குமாரனாக தத்தெடுக்கப்பட்டார்.

**16.1. பரிசுத்த ஆவி என்பது என்ன?**

a) தேவனுடைய வல்லமை, அல்லது, 'சுவாசம்' அதைக்கொண்டு அவர் தமது நோக்கத்தை நிறைவேற்றியுள்ளார்.

b) திரித்துவத்தின் மூன்றாம் நபர்

c) கிறிஸ்தவர்கள் அடையும் ஒரு வல்லமை

d) மனிதனுக்குள்ளிருக்கிற ஒரு ஜீவாதார சக்தி

**16.2. வேதாகமம் பரிசுத்த ஆவிக்கு எப்படி சம்பந்தப்படுகிறது?**

a) அதன் எழுத்தாளர்கள் பரிசுத்த ஆவியினால் ஏவப்பட்டனர்.

b) வேதாகமத்தின் வார்த்தைகள் ஆவியாகவும், ஜீவனாகவும் உள்ளன.

c) மேற்கண்ட இரண்டும்

d) மேற்கண்டவைகளில் எதுவும் இல்லை.

**16.3 பரிசுத்த ஆவி அப்போஸ்தலர்களுக்கு எதைக் கொடுக்கவில்லை?**

a) அற்புதங்கள் செய்யும் வல்லமை

b) சாதனையை எதிர்த்து பாவஞ்செய்யாமல் இருக்க வல்லமை

c) புதிய ஏற்பாட்டை எழுதும்படி ஏவுதல்

d) தீர்க்கதரிசனம் கூறும்படி ஏவுதல்

**கிறிஸ்டடெல்ஃபியன் வேதாகமப் பாடமுறை 22 பாடங்களின் கேள்வி/விடைத்தாள் "ஆசிரியர் பிரதி" பாடங்கள் 17 & 18**

**குறிப்பு:** இவைகள் இந்தவிதப் பாடமுறையின் சில பிரதிகளில் காணப்படுகிறதுபோல கட்டுரை அடங்கிய கேள்விகளைப்போன்று இல்லை.

**17.1 பரிசுத்த ஆவியின் ஈவுகள் ஏன் முதலாவது கொடுக்கப்பட்டது?**

a) ஏனெனில் ஈவுகள் சுவிசேஷத்தின் ஒரு முக்கிய பகுதியாக உள்ளன.

b) ஏனெனில் புதிய ஏற்பாடு எழுதப்படுவதற்கு முன்பு திருச்சபைகளுக்கு உதவியாக இருந்தன

c) ஏனெனில் அப்போஸ்தலர்கள் பரிசுத்தவான்களாக இருந்தார்கள்

d) ஏனெனில் ஈவுகள் இல்லாமல் யூதர்களும் கிரேக்கர்களும் விசுவாசிக்க மாட்டார்கள்.

**17.2. அந்நியபாஷையின் ஈவைக் குறித்து பவுல் கூறுகிறது என்ன?**

a) அந்நியபாஷை விசுவாசிகளுக்கு அடையாளமாக உள்ளது.

b) அந்நியபாஷை ஓய்ந்துபோகும்

c) அந்நியபாஷைகள் தீர்க்கதரிசிகளை நிரூபிக்கிறது.

d) அந்நியபாஷை மனிதனால் மொழிபெயர்க்கப்பட முடியாது.

**17.3. யாருக்காவது இன்றைய காலத்தில் ஈவுகளைப் பெற்றிருக்கிறார்களா?**

a) ஆம். ஈவுகள் ஒருபோதும் ஒழியாது என்று பவுல் கூறியுள்ளான்.

b) திருச்சபைத் தலைவர்கள் மாத்திரம்

c) உண்மையான உபதேசத்தைப் போதிப்பவர்கள் மாத்திரம்

d) இல்லை. அப்படி அவர்களுக்கு இந்த ஈவு இருந்தாலும், அது நிலையாக இருப்பதில்லை.

**18.1. இயேசு எப்படி சோதிக்கப்பட்டார்?**

a) இயேசு சில வழிகளில் நம்மைப்போல சோதிக்கப்பட்டார், ஆனாலும் எல்லா வழிகளிலும் அல்ல.

b) அவர் நம்மைப்போல எல்லா வழிகளிலும் சோதிக்கப்பட்டாலும், நம்மைப்போல பாவஞ்செய்யவில்லை.

c) இயேசு பிசாசினால் ஒரு விழுந்துபோன தூதன் நம்மைச் சோதிக்கிறது போல, சோதிக்கப்பட்டார்

d) அவர் சோதிக்கப்பட முடியவில்லை.

**18.2. இயேசு எதற்காக சிலுவையில் அறையப்பட்டார்?**

a) யூதர்களும் ரோமர்களும் தேவனுடைய சித்தத்தைக் கடந்து அப்படி செய்தனர்.

b) நம்முடைய பாவங்களிலிருந்து நம்மை இரட்சிக்கும்படி தேவன் இந்தச் சம்பவத்தை அநுமதித்தார்.

c) அவருடைய மாம்ச சரீரம் அழிக்கப்படுவதால், அவருடைய ஆவி பரலோகத்திற்குச் செல்லுவதற்காக

d) சிலுவை அடையாளத்தைத் தரித்துக்கொண்ட யாவரும் இரட்சிக்கப்படுவதற்காக

**18.3. "ஒருவரின் சிலுவையை எடுத்துக்கொள்வது" என்பதன் அர்த்தம் என்ன?**

a) ஒரு சிலுவையைக் கழுத்தைச் சுற்றி அணிந்துக்கொள்வது

b) இந்த வாழ்க்கையில் பாடுகளை அனுபவித்தல்

c) ஒருவன் தன்னைத்தான் வெறுத்து, கிறிஸ்துவைப் பின்பற்றுதல்

d) இயேசுவை ஆண்டவர் என்று அறிக்கையிடுதல்

## கிறிஸ்டடெல்ஃபியன் வேதாகமப் பாடமுறை 22 பாடங்களின் கேள்வி/விடைத்தாள் "ஆசிரியர் பிரதி" பாடங்கள் 19 & 20

**குறிப்பு:** இவைகள் இந்தவிதப் பாடமுறையின் சில பிரதிகளில் காணப்படுகிறதுபோல கட்டுரை அடங்கிய கேள்விகளைப்போன்று இல்லை.

**19.1 எந்த வழியில் இயேசு . "பிசாசின் வல்லமையை அழித்தார்"? (1.யோவான் 3:8; எபிரெயர் 2:14)**

a) அவர் பரலோகத்தை விட்டு பிசாசைத் துரத்தினார்.

b) அவர் தமக்குள்ளிருந்த பாவமான மனித சுபாவத்தைத் தோற்கடித்து, ஆதாமு டைய பிள்ளைகளின் சாயலை முறியடித்தார்.

c) அவர் கிறிஸ்தவர்கள்மேல் பிசாசின் வல்லமையை அழித்தாலும் பிசாசு இன் னும் சுறுசுறுப்பாக இருக்கிறான்.

d) இயேசு பிசாசை எரிநரகத்தில் தள்ளிவிடும் இறுதிநாளைக்குறித்த தீர்க்கதரிச னம் ஆகும்.

**19.2. பொல்லாப்பு மற்றும் தீமைக்கு தேவனுடைய உறவு எது?**

a) தேவன் ஒளி மற்றும் இருள் இரண்டையும், நன்மை **மற்றும் தீமை** இரண்டையும் உண்டாக்கினார்.

b) தேவன் நன்மையை மாத்திரம் உண்டாக்குகிறார். ஆனால் பிசாசைச் சில காலத்துக்கு பொல்லாப்பைச் செய்ய அநுமதிக்கிறார்,

c) பிசாசு ஆதாமைச் சோதித்தபின்பு, தேவன் அவனை பரலோகத்திலிருந்து கீழே தள்ளினார்.

d) தேவன் கடைசி நாட்கள் வரைக்கும் பிசாசை சிறைப்பிடித்து வைத்திருக்கிறார்.

**19.3. சாத்தான் என்பதன் அர்த்தம் என்ன?**

a) "அவதூறு பண்ணுகிறவன்" அல்லது "பொய்யாய் குற்றஞ்சாட்டுகிறவன்"

b) “மகா சர்ப்பம்” அல்லது “அடங்காத மிருகம்”

c) “சத்துரு” அல்லது “விரோதி”

d) எதிர்த்த தூதர் கூட்டத்தின் தலைவனுடைய தனிப்பட்ட பெயர்

**20.1. நாம் எவ்வாறு ஞானஸ்நானம் பெறவேண்டும்?**

a) குழந்தையின் நெற்றியில் தண்ணீரைத் தெளிப்பதன் மூலம்

b) ஒரு பெரியவனாக, தண்ணீருக்குள் “அடக்கம் செய்யப்படுதல்” மூலம்

c) நேரடியாக தண்ணீரில் அல்ல, கிறிஸ்துவைப்பற்றிய ஒரு அறிக்கையின் மூலம்

d) பரிசுத்த ஆவியைப் பெறுவதன் மூலம்

**20.2. யார் இரட்சிக்கப்படுவார்கள்?**

a) விசுவாசிக்கிறவன்

b) விசுவாசித்து ஞானஸ்நானம் பெறுகிறவன்

c) விசுவாசித்து பரிசுத்த ஆவியைப் பெறுகிறவன்

d) இயேசுவை ஆண்டவர் என்று அறிக்கையிடுகிறவன்.

**20.3. ஞானஸ்நானம் எதைச் சாதிக்கிறது?**

a) கிறிஸ்துவின் மரணத்தோடுகூட நம்மை அடையாளம் காட்டுகிறது.

b) அது நம்மை கடந்தகால, நிகழ்கால, மற்றும் எதிர் காலத்து சகல பாவங்களிலிருந்து சுத்திகரிக்கிறது.

c) ஞானஸ்நானம் பெற்றபின்பு பரிசுத்தஆவியின் ஈவுகளை பெறமுடியும்.

d) அது எதையும் சாதிப்பதில்லை, ஆனால் அது வெறும் அடையாளமாக தான் இருக்கிறது.

## கிறிஸ்டடெல்ஃபியன் வேதாகமப் பாடமுறை 22 பாடங்களின் கேள்வி/விடைத்தாள் “ஆசிரியர் பிரதி” பாடங்கள் 21 To 22

**குறிப்பு:** இவைகள் இந்தவிதப் பாடமுறையின் சில பிரதிகளில் காணப்படுகிறதுபோல கட்டுரை அடங்கிய கேள்விகளைப்போன்று இல்லை.

**21.1. அரசாங்கத்திடம் நமது எண்ணம் எவ்வாறாக இருக்கவேண்டும்?**

a) ஒரு நியாயமான அரசாங்கம் வேண்டுமென்று ஓட்டுப்போடுங்கள்

b) ஒரு நல்ல குடிமகனாக இருந்து, தேவையானால் நாட்டுக்காக போராடவும் ஆயத்தமாயிரு.

c) கிறிஸ்தவன் ஒருவன் கிறிஸ்தவரல்லாத அரசாங்கத்துக்குக் கட்டுப்படக்கூடாது.

d) அதிகாரிகள் எல்லாரும் தேவனால் நியமிக்கப்பட்டவர்கள், எனவே நாம் அவர்க ளுக்கு அடங்கியிருக்க வேண்டும்.

**21.2. திருமணத்தை வாழ்க்கையைக் குறித்து வேதாகமம் நமக்கு என்ன கூறுகிறது?**

a) ஒரு மனிதன் அவிசுவாசியான ஒரு மனைவியை விவாகஞ்செய்யலாம், ஆனால் ஒரு பெண் விசுவாசியை மட்டுமே திருமணஞ் செய்யவேண்டும்.

b) கணவன் அல்லது மனைவி கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ள மறுத்தால் அவர்கள் விவாகரத்து செய்தாக வேண்டும்.

c) ஒரு விசுவாசி தங்களது கணவன் அல்லது மனைவிக்கு எதிராக விவாகரத் தைத் தூண்டிவிடக்கூடாது.

d) திருச்சபை போதகர்கள் திருமணம் செய்துக்கொள்ளக் கூடாது என்று வேதாக மம் கட்டளையிடுகிறது.

**21.3 ஐக்கியம் என்றால் என்ன?**

a) சந்தோஷத்தை எல்லா கிறிஸ்தவர்களோடும் பகிர்ந்து கொள்ளுதல்

b) கிறிஸ்துவுக்குள் சரியான போதனையையும், நடத்தையும் பகருகிற பிறவிசு வாசிகளோடும் உறவு வைத்தல்

c) விசுவாசிக்கும் கிறிஸ்துவுக்கும் மத்தியில் உள்ள நேரடியான உறவு

d) ஒரு திருமறைக் கல்லூரியில் மிக உயர்ந்த பதவி வகித்தல்

**22.1. மிகப்பெரிய இரண்டு கட்டளைகள் எவை?**

a) கொலை செய்யாதிருப்பாயாக, & களவு செய்யாதிருப்பாயாக.

b) உன் தேவனிடத்தில் உன் முழு இருதயத்தோடும் அன்புகூருவாயாக, & உன்-னிடத்தில் நீ அன்புகூருகிறதுபோல பிறனிடத்திலும் அன்புகூருவாயாக.

c) ஓய்வுநாளைப் பரிசுத்தமாக ஆசரிப்பாயாக & இடைவிடாமல் ஜெபம் பண்ணு வாயாக.

d) கிறிஸ்தவனுக்கென்று ஒரு நியாயப்பிரமாணமும், எந்தக் கட்டளைகளும் இல்லை.

**22.2. இயேசு தமது மரணத்தை நாம் நினைவுகூரும்படி எப்படி கட்டளையிட்டார்?**

a) வீட்டில் ஒரு சிலுவையைத் தொங்க விடுவதின் மூலம்

b) ஈஸ்டர் பண்டிகையைக் கொண்டாடுவதன் மூலம்

c) ஒருவர் பாதங்களை மற்றொருவர் கழுவுவதின் மூலம்

d) ஒழுங்காக ரொட்டியையும், திராக்ஷ ரசத்தையும் பகிர்ந்துக்கொள்ளுதலின் மூலம்

**கிறிஸ்டடெல்ஃபியன் வேதாகமப் பாடமுறை 22 பாடங்களின் கேள்வி/விடைத்தாள் "ஆசிரியர் பிரதி" பாடங்கள் 22.3 & 23**

**குறிப்பு:** இவைகள் இந்தவிதப் பாடமுறையின் சில பிரதிகளில் காணப்படுகிறதுபோல கட்டுரை அடங்கிய கேள்விகளைப்போன்று இல்லை.

**22.3. ஞானஸ்நானத்திற்குப் பிறகு விசுவாசிகளுக்கென்று இருக்கிறமிக முக்கிய மானது எது?**

a) ஜெபம்
b) வேதவாசிப்பு
c) கிறிஸ்துவின் போதனையை நடைமுறையில் அமர்த்துதல்
d) இவைகளெல்லாம் சமமான முக்கியத்துவம் கொண்டது.

**பொதுவான கேள்விகள்:**

**23.1. இந்தப் பாடமுறையை எவ்வளவு பயனுள்ளதாகக் கண்டீர்கள்?**

a) அவ்வளவு பிரயோஜனம் இல்லை.
b) சராசரி
c) பயனுள்ளதாக இருந்தாலும், சிலபிரச்சனைகள் உள்ளன (தயவுசெய்து குறிப்பிடுங்கள்)
d) மிகவும் பயனுள்ளதாய் இருந்தது.

..............................................................................................................................................

**23.2. உங்களுக்கு வேறு எந்த தலைப்பின்கீழ் விளக்கத்தை அனுப்ப நீங்கள் விரும்புகிறீர்கள்? (நீங்கள் ஒன்றுக்கும் மேலாக தலைப்புகளைத் தேர்ந் தெடுக்கலாம்)**

a) ஒன்றும் வேண்டாம், நன்றி
b) இன்னும் விளக்கமான பாடங்கள்
c) பத்திரிக்கை (புது சிருஷ்டி)
d) வேறு ஏதாவது இருந்தால், (தயவுசெய்து குறிப்பிடுங்கள்)

..............................................................................................................................................

**23.3. உங்களிடம், இந்தப் பாடமுறையில், தெளிவில்லாத அல்லது சம்மதிக் காத 3 பகுதிகளைப் பெயரிடுங்கள் என்று கேட்டால், அவை எவைகளாக (தயவுசெய்து பாட எண்களையும், தலைப்புகளையும் குறிப்பிடுங்கள்):**

P

பாடம் எண்: .......................................

த ை ல ப் பு :

..............................................................................................................................

பாடம் எண்: .......................................

த ை ல ப் பு :

..............................................................................................................................

பாடம் எண்: .......................................

த ை ல ப் பு :

..............................................................................................................................

இது ஓர் கிறிஸ்டடெல்ஃபியன் வெளியீடு

THE CHRISTADELPHIANS,
G.P.O. BOX - 159
HYDERABAD 500 001 ,
TELANGANA. INDIA.

---

THE CHRISTADELPHIANS,
P.O. BOX 4237,
BENGALURU 560 042,
INDIA.

---

**THE CHRISTADELPHIANS**
**#4-163. THE C3 CENTRE, KISMATHPUR,**
**DON BOSCO NAGAR POST, RAJENDRANAGAR MONDAL**
**HYDERABAD-500 086,**
**TELANGANA, INDIA**

---

**PH.040 64642194**

Printed by Printland Publishers, Hyderabad India.

# உங்கள் வேதாகமத்தைத் தெரிந்துக்கொள்ளுங்கள்

**22 பாடங்களைக்கொண்ட வேதாகமப் பாடமுறை**




## THE CHRISTADELPHIANS

**#4-163. THE C3 CENTRE, KISMATHPUR,**
**DON BOSCO NAGAR POST, RAJENDRANAGAR MONDAL**
**HYDERABAD-500 086,**
**TELANGANA, INDIA**


## ர் கிறிஸ்டடெல்ஃபியன் வேதாகமப் பாடமுறை